விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 246 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 14, வியாழக்கிழமை 30.07.2015

புதைக்கப்பட்ட 129 உடல்கள் கண்டுபிடிப்பு



பக்கம் 13

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 30
இலங்கையில் இஸ்லாமியத் தீவிரவாதம் தலை தூக்கியுள்ளது எனத் தெரிவித்து அண்மையில் பொதுபலசேன பொங்கியெழுந்தது. இந்நிலையில், இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தொடர்பில் துரித விசாரணை நடத்தவேண்டும் என சிங்கள ராவய அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளது.
சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் உள்ளிட்ட குழுவினர் நேற்று முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.
இந்தக் குழுவினர் வழங்கியுள்ள

பக்கம் 24

# சமஷ்டியை ஐ.தே.கவும் ஏற்காது

## ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு எனவும் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 30
கூட்டமைப்பு முன்வைத்துள்ள சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்டத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி அதனை முழுமையாக நிராகரித்துள்ளது.
சமஷ்டி முறையில் அதிகாரங்களைப் பகிரும் அரசியல் தீர்வை நாம் நிராகரிக்கின்றோம்' என்று, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரே நாட்டுக்குள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஒன்றுபட்டு வாழ முடியாத நிலை ஏற்படுவதை ஐ.தே.க



அனுமதிக்காது.
சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளின் இணக்கப்பாட்டுடன், ஒன்றுபட்ட பிரிக்கப்படாத இலங்கைக்குள், மாகாணங்

பக்கம் 24

## இலங்கை - இந்தியா இடையே பாதுகாப்பு உறவு நெருக்கம்

### தூதரகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு , ஜூலை 30
இலங்கையுடன் மிக நெருங்கிய பாதுகாப்பு உறவுகள் பேணப்பட்டு வருவதாக இந்தியா அறிவித்துள்ளது. இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஈசா ஸ்ரீவத்சா இதனைத் தெரிவித்துள்ளார்.
அண்மையில் ராமநாதபுரம் பகுதியில் சயனைட் குப்பிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் குறித்து கருத்து வெளியிட முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் தனிப்பட்ட ஒவ்வொரு சம்பவங்கள் தொடர்பிலும் தெரிவிக்க முடியாதெனக் கூறியுள்ளார்.
இதேவேளை, இந்தியாவுடன் அடிக்கடி புலனாய்வுத் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேசினி கொலன்ன தெரிவித்துள்ளார். (டு)

## சுட்டுக்கொன்றவருக்கு தூக்குத் தண்டனை

வவுனியா, ஜூலை 30
கடந்த 2006 ஆம் ஆண்டு இளைஞர் ஒருவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றத்துக்காக வவுனியா, செட்டிகுளத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -
கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி செட்டிகுளம், முகத்தான்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரின் வீட்டில் நுழைந்த சிலர் அதிகாலை 4.30 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர். இதனையடுத்து காயமடைந்த தியாகராசா திரிபுரதாசன் (பிரிவுராசன்- வயது 32) செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மற்றும்

பக்கம் 24

## இலங்கை அகதிகள் 45 பேர் திரும்பினர்

கொழும்பு, ஜூலை 30
இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளில் மேலும் 45 பேர் நேற்று முன்தினம் இலங்கைக்குத் திரும்பினர்.
இவர்கள் திருச்சி, திண்டுக்கல், கன்னியாகுமரி, விழுப்புரம், தூத்துக்குடி, சிவகங்கா, புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி மற்றும் ராமநாதபுரம் ஆகிய இடங்களில் தங்கியிருந்தவர்களாவர்.
இவர்கள் தொடர்பில் எவ்வித குற்றச்செயல் முறைப்பாடுகளும் இல்லை என்று முகாம்

பக்கம் 24

## சு.க. மத்திய குழுவைக் கூட்ட ஓகஸ்ட் 7 வரை தடை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 30
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதி இன்றி மத்திய செயற்குழுவை கூட்டுவதற்கு விதிக் கப்பட்டுள்ள இடைக்கால தடையைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஓகஸ்ட் 7 ஆம் திகதிவரை நீடித்துள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு விடுத்த விசேட அறிவிப்பின் பின்னர், சு.க. மத்திய குழுவைக் கூட்டுவதற்குக் கட்சியின் பொதுச் செயலாளர் மேற்கொண்ட நட

பக்கம் 24

## தமிழ் மக்களுக்கான தீர்வு ஐ.ம.சு.மு. விஞ்ஞாபனத்தில்

### சொல்கிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஜூலை 30
சர்வதேச தலையீட்டுடன் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையானது நடைமுறைக்கு ஒத்து வராதது எனத் தெரிவித்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திஸ்ஸ விதாரண, அந்த மக்களுக்கு உள்நாட்டுப் பொறிமுறைக்குள் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.
ஐ.ம.சு.மு. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஒருவருடத்துக்குள் நிறைவேற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டிய அவர், மஹிந்த ஆட்சியில் புதிய அரசமைப்பு அறிமுகப்படுத்தப் படுவதாகவும் அதில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டுப் பிரதமருக்கான அதிகாரங்களை வலுப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.
கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்

பக்கம் 24

## பயணப் பொதியில் பெண்ணின் சடலம்

### கொழும்பில் நேற்றுப் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 30
கொழும்புக் கோட்டை, பஸ்ரியன் மாவத்தையிலுள்ள தனியார் பஸ் தரிப்பிடத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் இருந்த பயணப்பொதிக்குள் இருந்து பெண்ணொருவரின் சடலத்தைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.
அநுராதபுரம் பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையிலேயே சடலத்துடன் இந்தப் பயணப் பொதி கண்டுபிடிக்கப்பட்டது.
கைவிடப்பட்டிருந்த பயணப் பொதியை அருகில் இருந்த வியாபாரியொருவர் திறந்து



பக்கம் 24

## சம்பந்தனுக்கு விசேட பாதுகாப்பு தேர்தல் ஆணையாளர் உத்தரவு

கொழும்பு, ஜூலை 30
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட நான்கு வேட்பாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் விசேட சலுகை வழங்கியுள்ளார்.
அரசியல் அமைப்பு பேரவை தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினருக்கான வரப்பிரசாதங்களை வழங்க தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதற்கமைவாக உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் பாதுகாப்பை வழங்க தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.
தேர்தலில் போட்டியிடும் பிரதமர்

பக்கம் 24

## ஐ.நா. அறிக்கையால் தமிழருக்கு நியாயம் கிட்டுமா?

### கேள்வி எழுப்புகிறது சனல்-4

கொழும்பு, ஜூலை 30
செப்ரெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள ஐநா. அறிக்கையின் கசிந்துள்ள சில ஆவணங்களின்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் ஐ.நாவினால் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கை அரசும் - வடக்கு மாகாண சபையும் இணைந்தே உள்ளக விசாரணைப் பொறிமுறை போர்க் குற்ற விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக, பிரிட்டனின் சனல் - 4 ஊடகம் தெரிவித்துள்ளது.
பிரிட்டனைத் தளமாகக் கொண்ட சனல் - 4 ஊடகம், நேற்று முன்

பக்கம் 24

# தமிழரின் எதிரிகளான ஒட்டுக் குழுவினரை ஐ.தே. முன்னணி அரசில் இணைக்கோம்

## அப்படி நடந்தால் சொந்தக் கட்சிக்கு எதிராகவே போராடுவோம் என்கிறார் குயிலன்

யாழ்ப்பாணம், ஜூலை 30

அரச ஒட்டுக் குழுக்களில் இருந்தவர்கள் தமிழ் மக்களின் எதிரிகள். துரோக நாடகம் ஆடியவர்கள், மகேஸ்வரனின் உயிரைப் பறித்தவர்கள் எவரையும் நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணியின் அரசில் இணைத்துக் கொள்ளமாட்டோம். இப்படிப்பட்டவர்களை எங்களுடைய கட்சியில் இணைத்துக் கொள்வதாக கட்சித் தலைமைப்பீடம் முடிவெடுத்தால் அதற்கெதிராக நாங்கள் களத்தில் இறங்கி போராடவும் தயாராக உள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சி.குலேந்திரராஜா (குயிலன்). சுன்னாகத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் தேசிய ரீதியான சிங்களக் கட்சியின் ஊடாகவே இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளோம். இதனை நாங்கள் ஒருபோதும் மறக்கப்போவதில்லை. தேர்தல் களத்திலே முகமூடிகளை அணிந்த எத்தனையோ பேர் வேட்பாளர்களாக நிற்கின்றார்கள். ஆனால் நாங்கள் அப்படி முகமூடிகள் அணிந்தவர்கள் அல்லர். வெளிப்படையாகவே ஒரு கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கின்றோம்.

அன்று, யாழ்ப்பாணத்தில் இருந்த ஆயுதக் குழுக்களின் அட்டகாசத்தினால் மக்கள் படும் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத மகேஸ்வரன், ஐக்கிய தேசியக் கட்சி என்ற கவசத்தினைப் பயன்படுத்தி தேர்தலில் மக்களுக்காக நின்றார். துப்பாக்கி முனைகளுக்கு மத்தியிலும் அவர் தனது கொள்கையில் இருந்து மாறாதவராக நின்றார். அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பிய மகேஸ்வரனின் சேவைகள், உங்களை வந்தடையவில்லையா? இதனை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மகேஸ்வரனின் இழப்பினைப் தொடர்ந்து தேர்தலில் இறங்கிய விஜயகலா மகேஸ்வரனையும் தமிழ் மக்கள்தான் நாடாளுமன்றம் அனுப்பியிருந்தார்கள். ஆனால் அந்தச் சமயம் எமது ஐக்கிய தேசிய கட்சியானது எதிர்கட்சியாகவே இருந்தது. எனவே எமது கட்சியால் முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அப்போதைய அரசு புறக்கணித்தது. தமிழ் மக்களின் துயரை மஹிந்த தலைமையிலான அந்த அரசு துடைக்கவேயில்லை. இதனையெல்லாம் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியவர்களாக நாங்கள் அன்று இருந்தோம்.

தெய்வாதீனமாக மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழ் மக்களுடைய விடிவிற்கானதாக இந்த ஆட்சியினை ஐக்கிய தேசியக் கட்சி மாற்றியிருந்தது. எங்களுடைய அரசு ஆட்சியில் ஏறிய இந்த 5 மாதங்களில் எவ்வாறான பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைத்தது என்பதை அனைவரும் அறிவீர்கள். ஆனால் இன்று ஐக்கிய தேசிய கட்சியின் சேவை தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடாது என்பதற்காக எமது கட்சி சிங்கள கட்சி என்று இனவாதத் தினை சிலர் தூண்டி எமது கட்சியையும் தமிழ் மக்களையும் பிரிக்கப் பார்க்கின்றார்கள். இவர்களுடைய இந்த நயவஞ்சகம் தமிழ் மக்களிடத்தில் செல்லுபடியாகாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

வேலைவாய்ப்புகள் என்றும், இடமாற்றங்கள் என்றும் கூறிக்கொண்டு யார் யாரோ இன்று தமிழ் மக்கள் மத்தியில் வாக்குக் கேட்டு வருகின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் தமிழ் மக்கள் வாக்குகளால் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் இம்முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். உங்களுக்குச் சேவை செய்பவர்களை நீங்கள் தெரிவு செய்ய வேண்டியது உங்களுடைய கடப்பாடாக இருக்கின்றது – என்றார். (உ–101)

---

# கேலிக்குரிய வாக்குறுதிகளை வழங்கி வருகின்றார் மஹிந்த

## அமைச்சர் ருவான் விஜேவர்தன கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் விஞ்ஞாபனத்தில் கேலிக்குரிய வாக்குறுதிகளை வழங்கி வருவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமது தரப்பினர் நிச்சயம் தோல்வி அடைவார்கள் என்பதை உணர்ந்து கொண்டதன் காரணமாகவே அவர் இவ்வாறு கேலிக்குரிய வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பாரதூரமான முறையில் நாட்டின் வாக்காளர்களின் புத்திசாலித்தனத்தை அவமதிப்புக்கு உள்ளாக்கி வரு வதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மாணவர்கள் மீது கண்ணீர் புகை தாக்குதல்களையும் லத்தி தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்கும் தருவாயில் மகாபொல புலமைப் பரிசில் நிதியை அதிகரிப்பது குறித்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு நினைவிற்கு வந்தது. 10 வருடங்களாக மாணவர்களுக்கு வழங்காததை தோல்வியில் அறிந்து கொண்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ கேலிக்குரிய வாக்குறுதிகளை வழங்கி வருகிறார் என ருவான் விஜேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

---

# பிரபாகரனுக்கு தபால் தலையை வெளியிடத் தைரியம் உண்டா?

## கூட்டமைப்பிடம் கேட்கிறார் செல்வவடிவேல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

பிரபாகரனுக்கு தபால் தலை வெளியிடும் நெஞ்சுரம் இருக்கிறதா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கேள்வி எழுப்பி இருக்கிறார் ஈ.பி.டி.பி. கட்சியின் வேட்பாளர் இரா. செல்வவடிவேல்.

யாழ். ரயில் நிலையச் சுற்றாடலில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது தான் இந்தக் கேள்வியை எழுப்பினார் என்று பத்திரிகைக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேர்தல் என்று வந்தவுடன் பிரபாகரனை அழைக்கிறீர்கள். தேர்தல் முடிந்ததும் அவரை மறந்துவிடுகிறீர்கள். தாயக உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்து உயிர் நீத்த போராளிகளுடைய ஆவிகளைத் தேர்தலுக்காகப் பயன்படுத்திக் கொச்சைப்படுத்தாதீர்கள். நீங்கள் மக்களுக்குச் சேவை செய்திருந்தால் அதனைக் காட்டி மக்களிடம் வாக்குக் கேளுங்கள். அதைவிட்டு உங்கள் தேர்தல் அறிக்கையில் பிரபாகரனுடைய நாமத்தினை எடுத்துக் கொச்சைப்படுத்தாதீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இரண்டு முகங்கள் உள்ளன. தேர்தலில் ஒரு முகம். அது முடிந்தவுடன் ஒரு முகம். ஆனால் தமிழ் பேசும் மக்கள் இம்முறை மனச்சாட்சியுடன் வாக்களிக்கத் தயாராகி விட்டார்கள். மக்களுக்காகவே வாழ்ந்து சேவை செய்பவர்கள் ஈபிடிபியினர். மாசற்ற கொள்கையுடன் யதார்த்த சிந்தனையுடன் வரலாற்றுப் பாதையினை நன்குணர்ந்து, மக்கள் சேவையே மகேசன் சேவையென இன்றல்ல நேற்றல்ல என்றும் உங்களுடனேயே நிற்பவர்கள்.

2015 முதல் 5 வருட காலத்தில் தமிழ் மக்களிடையே இருந்து வறுமை ஒழிக்கப்படும். இதற்கு நீங்கள் அனைவரும் ஈ.பி.டி.பியையும் என்னையும் ஆதரிக்கவேண்டும்– என்றார். (உ)

---

# யாழ். போதனாவுக்கு அண்மையான காணியை தந்துதவுமாறு கோரிக்கை

## வைத்தியசாலையின் பல தரப்பினராலும் முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாகவுள்ள வீட்டுடன் இணைந்த காணியை வைத்தியசாலைக்குத் தருவதாக வட மாகாண ஆளுநர், யாழ்.அரச அதிபர் முன்னர் உறுதியளித்த போதும் அந்தக் காணி இன்னும் தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்த வைத்தியசாலைத் தரப்பினர், பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸாரே அதனைக் கையகப்படுத்தவுள்ளனர் என்று கூறப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த காணி தனியாருடையது. அதில் தனியார் வைத்திய நிலையம் முன்னர் இயங்கி வந்தது. தற்போது அந்தக் காணியை புலிகள் அல்லது புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் பயன்படுத்தினர் என்று தெரிவித்து கையகப்படுத்தும் நடவடிக்கை பயங்கர வாதப் பிரிவுப் பொலிஸாரால் எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளும் அதனால் வைத்தியர்களும் தாதியர்களும் மற்றும் பலரதும் தேவைகள் அதிகரித்துள்ள நிலையில் அந்தச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு வைத்தியசாலையில் இணைந்ததாகப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற இடம் வைத்தியசாலைச் சூழலில் வேறு இல்லை. அதனால் பொலிஸார் கையகப்படுத்தவுள்ளதாகக் கூறப்படும் தனியார் காணியை பொலிஸார் உட்பட அனைவரும் சிகிச்சை பெற்றுச் செல்லும் வைத்தியசாலைக்குப் பெற்றுத் தருமாறு வைத்தியசாலைத் தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

**வைத்தியசாலையின் தேவைகள் அதிகரித்துள்ள நிலையில் அவற்றைத் தவிர்ப்பதற்கு வைத்திய சாலையில் இணைந்ததாகப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற இடம் வைத்தியசாலைச் சூழலில் வேறு இல்லை.**

அது தொடர்பில் யாழ். அரச அதிபருடனும் தொடர்ந்து வடமாகாண ஆளுநருடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. கலந்துரையாடலின் முடிவில் குறித்த தனியார் காணியை வைத்தியசாலைக்கு வழங்குவதாக வடமாகாண ஆளுநர் பளிகக்காரவும் உறுதியளித்திருந்தார்.

ஆனால் அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் காரணத்தால் அந்தக் காணி பயங்கர வாதப் பிரிவுப் பொலிஸாரால் கையகப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தாம் கையகப்படுத்துவதற்காக பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸார் அங்கு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

எனவே ஆளுநர், யாழ்.அரச அதிபர் குறித்த காணியை வைத்தியசாலைக்குப் பெற்றுத் தர முன்னர் உறுதி அளித்தவாறு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வைத்தியசாலையின் பல தரப்பினரும் கோரிக்கை முன்வைத்தனர். (ற–4)

---

# நுகர்வோர் பாதுகாப்பு மீறலால் ஆறு மாதத்தில் 311 வழக்குகள்

## 12 லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டத்தில் நுகர்வோர் தொடர்பில் கடந்த 6 மாதங்களில் 311 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் மூலமாக 12 லட்சத்து 31 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்த சேகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

காலாவதியான பொருள்கள் விற்பனை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, உற்பத்திப் பொருள் தொடர்பான விபரங்கள் உரிய முறையில் காட்சிப்படு த்தாமை, நுகர்வோரைச் சிறியளவில் ஏமாற்றியமை, அவற்றில் நிறை குறைத்து உற்பத்தி செய்த பேக்கரி உணவுகள் மீதான 15 முறைப்பாடுகளும், வெளிநாடுகளுக்குப் பொதிகள் அனுப்புவதில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பான 15 முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன.



குறித்த காலப்பகுதியில் ஏப்ரல் மாதம் அதிக பட்சமாக 82 வழக்குகள் பதியப்பட்டு ஒரு லட்சத்து 9 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டது.

ஜனவரி மாதம் 24 வழக்குகளுக்கு ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபாவும், பெப்ரவரி மாதம் 45 வழக்குகளுக்கு 92 ஆயிரத்து 500 ரூபாவும், மார்ச் மாதம் 56 வழக்குகளுக்கு 3 லட்சத்து 35 ஆயிரத்து 500 ரூபாவும், ஏப்ரல் மாதம் 82 வழக்குகளுக்கு ஒரு லட்சத்து 9 ஆயிரம் ரூபாவும், மே மாதம் 53 வழக்குகளுக்கு 2 லட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாவும், ஜூன் மாதம் 5 வழக்குகளுக்கு 3 லட்சத்து 3 ஆயிரம் ரூபாவும் என கடந்த 6 மாதங்களில் 311 வழக்குகளுக்கு 12 லட்சத்து 37 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது – என்றார். (ற–4)

## நீதிமன்றம் மீதான தாக்குதல் இருவருக்கு நேற்றுப் பிணை

### ஏனையோர் தொடர்ந்து மறியலில்



யாழ்ப்பாணம், ஜுலை 30
கடந்த மே மாதம் 20ம் திகதி யாழ்ப்பாண நீதிமன்ற தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 39 சந்தேக நபர்களில் மாணவர் ஒருவர் மற்றும் ஊடகவியலாளர் உட்பட இருவரை நேற்றுப் பிணையில் விடு வித்தது யாழ். நீதிவான் நீதிமன்றம். ஏனையோரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

நீதிமன்ற தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய மூன்று வழக்குகள் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டன.

அந்த வழக்குகளுடன் தொடர்புடைய 39 சந்தேக நபர்களும் அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் வழமை போன்று பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்றின் நுழைவாயில்களில் பாதுகாப்பு தடைகள் அமைக்கப்பட்டு அதிரடிப்படையினருடன் பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மன்றில் முன்னிலையாகியிருந்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர்.

எனினும் நீதிமன்றம் தற்துணிவின் அடிப்படையில் விதிவிலக்கான சூழ்நிலையுள்ள சந்தேக நபர்களை பொருத்தமான பிணையில் விடுவிக்கலாமெனவும் தெரிவித்தனர்.

அனையடுத்து நீதிவான் பெ. சிவகுமார் ஆவணங்களுடன் சத்தியக் கூற்றை அணைத்திருந்த இருவருக்கு பிணை வழங்கினார். ஒவ்வொரு சந்தேகநபரும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று ஆள்பிணையாளிகளின் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை 9–12 மணிக்கிடையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டால் பிணை நிபந்தனை ரத்துச் செய்யப்பட்டு வழக்கு முடியும்வரையும் விளக்கமறியலில் இருக்கவேண்டுமென்ற நிபந்தனையுடனும் பிணை வழங்கப்பட்டது. ஏனைய சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் முடிவுறாததால் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிடப்பட்டது. (ற–103)

# கூட்டங்களுக்கு அஞ்சும் கட்சிகள்

யாழ்ப்பாணம், ஜுலை 30
நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு நாடு முழுவதும் பரப்புரைகள் தீவிரம் பெற்றுள்ள நிலையில் வடக்கில் அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டங்களை நடத்துவதில் பின்னடித்து வரும் நிலை காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு எந்தக் கட்சிகளும் இதுவரை பொதுக்கூட்டங்களை நடத்தவில்லை.

முன்னைய நாடாளுமன்றத் தேர்தல்களை விடவும் இம்முறை தேர்தல் வடக்கிலும் – தெற்கிலும் முக்கியதுவம் மிக்கதும், எதிர்பார்ப்பு மிக்கதுமானதாக மாற்றமடைந்துள்ளது. வடக்கில் இம்முறை அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் என முன்னெப்போதும் இல்லாதவாறு பல தரப்புகள் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. ஆயினும் அச்சுறுத்தல் மிக்க காலப் பகுதியில் நடைபெற்ற தேர்தல்களில் நடத்தப்பட்ட தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டங்களைக் காட்டிலும் இம்முறை மிகக் குறைவான பரப்புரைக் கூட்டங்களே வடக்கில் நடந்துள்ளன. அந்தக் கூட்டங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன.

முன்னைய தேர்தல்களில் அரச அதிகாரத்தில் இருந்தவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்துவதும் அதற்காகச் சமுர்த்தி முத்திரை வழங்குவதாகவும், காசோலைகள் வழங்குவதாகவும் பஸ்களை அனுப்பிப் பொதுமக்களை ஏற்றி வருவதும் வழமையாக இருந்தது. அங்கு கொண்டுவரப்படும் பொதுமக்களின் எண்ணிக்கையைக் காட்டி தமக்கே ஆதரவு அதிகம் என்று பறைசாற்றியும் வந்தனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இவ்வாறான சம்பவங்கள் தாராளமாகவே நடந்திருந்தன.

ஆயினும் இம்முறை நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. பொதுத் தேர்தலுக்கு இன்னமும் 19 நாள்களே உள்ள நிலையில் வடக்கில் எந்தக் கட்சியும் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஆர்வம் காட்டாத நிலை காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில பொதுக் கூட்டங்களை நடத்தியிருந்தது. ஏனைய கட்சிகள் பொதுக் கூட்டங்களை நடத்துவதில் சிரத்தை காட்டாது சிறு சிறு மக்கள் சந்திப்புகளை நடத்துவதிலேயே மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

பொதுகூட்டங்கள் மூலமே கட்சியின் கொள்கைகளை மக்களுக்கு விளக்கமுடியும். ஆயினும் வடக்கில் இம்முறை அரசியல் கட்சிகள் அதற்குப் பின்னடித்து வருகின்றன. பொதுக் கூட்டங்களை நடத்துவதால் – அதற்கு வரும் பொதுமக்களது எண்ணிக்கையால் தமது ஆதரவுத் தளம் என்ன என்பது வெளியாகும் என்று அந்தக் கட்சிகள் அஞ்சக் கூடும் என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் தற்போது பொதுக்கூட்டங்களைத் தவிர்த்து மக்கள் சந்திப்புகளிலேயே நாட்டம் காட்டுகின்றனர். அதன் மூலம் வேட்பாளர்களது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றபோதும், பொதுக் கூட்டங்களை நடத்துவதன் மூலம் – தமது கட்சியின் கொள்கைகளை பொது மக்களுக்கு விளக்குவதன் மூலமே கட்சிக்குரிய வாக்குகளை அதிகரிக்க முடியும். ஆயினும் கட்சிகள் தமது ஆதரவு தளம் குறித்த தடுமாற்றம் காரணமான அவ்வாறான பொதுக் கூட்டங்களை நடத்துவதில் சிரத்தை காட்டாதுள்ளனர்– என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ற)

## கொலையல்லாத சாவை ஏற்படுத்திய நபருக்கு 20 ஆண்டுகள் கடூழிய சிறை

அம்பாறை, ஜுலை 30
மட்டக்களப்பு இருதயபுரப் பகுதியில் 14 வயது சிறுவன் ஒருவனை கூரிய ஆயுதத்தால் கழுத்தில் குத்தி சாவை ஏற்படுத்திய நபர் ஒருவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் இருபது ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு, கொக்குவிலைச் சேர்ந்த சிவலிங்கம் பாலச்சந்திரன் எனும் சீவல் தொழிலாளியான நபர் சம்பவத்தினமான 05. 05. 1991 அன்று மது போதையில் தனது மனைவியைத் தேடி இருதயபுரம் பகுதிக்குச் சென்றபோது எதிரில் வந்த 14 வயதுச் சிறுவன் கனகராஜா விக்னராஜாவை தான் வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது.

குறித்த வழக்குக்கு சமுகமளிக்காமல் தலைமறைவாக இருந்த எதிரி சிவலிங்கம் பாலச்சந்திரன் மூன்று வருடங்களின் பின்னர் சமூகமளித்து விசாரணையில் எதிர்வாதத்துக்கு விண்ணப்பித்த போதும் மன்று அதனை நிராகரித்தது.

பின்னர் இந்த வழக்கில் எதிரியை கொலைக் குற்றச்சாட்டுக்கு குற்றவாளியாகக் கண்ட மேல்நீதிமன்றம் எதிரிக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதனையடுத்து குறித்த தீர்ப்பை எதிர்த்து எதிரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து தீர்ப்பை புறத்தொதுக்கி எதிரியை வைத்து புதிதாக விசாரணை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

இதன்படி மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணை நடைபெற்றதுடன் சாட்சியங்களும் எதிரியின் கைவிரல் அடையாள அறிக்கையும் பெறப்பட்டன.

இதன்போது கொலையாகாத சாவை ஏற்படுத்திய குற்றச்சாட்டை எதிரி சிவலிங்கம் பாலச்சந்திரன் மன்றில் ஏற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் எதிரிக்கு இருபது வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்ததார். (ற–30)

## ஊழல்களை ஒழித்துக் கட்ட கணக்காளர்களால் முடியும்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 30
நாட்டில் ஊழல் மோசடிகளை ஒழித்துக்கட்டுவதில் கணக்காளர்கள் முக்கிய பங்கை வகிக்க முடியும். சிறந்த நிதி முகாமைத்துவத்தையும் நிதி ஒழுங்குகளையும் பேணுவதற்கு கணக்காளர்கள் தங்களது கடமைப் பொறுப்புகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பூகோல கணக்கீட்டு முகாமைத்துவ உச்சி மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஒரு சிறந்த நிதி முகாமைத்துவத்தைக் கட்டியெழுப்பும் அதேநேரம் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகக் கிடைக்கும் நிதி உதவிகளை முறையாகப் பயன்படுத்துவது தற்போதைய அரசின் நோக்கமாகும். எனவே எதிர்வரும் புதிய நாடாளுமன்றம் தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அதி கூடிய முக்கியத்துவத்தை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய இராஜ்ஜியம், ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா மற்றும் தென்னாசிய நாடுகள் உள்ளிட்ட 12 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கணக்கீட்டுத் துறையில் சிறந்து விளங் கிய 25 நிறுவனங்களுக்கு அங்கு ஜனாதிபதி விரு துகளையும்சான்றிதழ்களையும்வழங்கினார். (ற–4)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



உரிமைப் பிரச்சினையை உலகறியச் செய்த ஊடகப் போராளி



தமிழர் பிரச்சினைகளை
சர்வதேசத்தின்
வாசல் வரை எடுத்துச்
சென்று உரிமைக்காகக்
குரல் கொடுத்த
ஊடகப் போராளியை
பாராளுமன்றத்துக்குத்
தெரிவு செய்வதற்காக
வீட்டுச் சின்னத்துக்கும்,
விருப்பத் தெரிவாக
இல 5 ஐயும் புள்ளடியிடுவோம்....

ஈ.சரவணபவன் 5

முன்னாள் பா.உ. – இலங்கைத் தமிழரசுக் கட்சி, குழுமத் தலைவர் உதயன் பத்திரிகை

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள நினைவுப் பதிவேட்டில் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கையெழுத்திட்டார். (ற-5-101)

# அப்துல் கலாமின் வழியில் அறிவுலகைப் படையுங்கள்

## இரங்கல் செய்தியில் யாழ்.வர்த்தக சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

எமது பிள்ளைகளும் அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டு அவர் வழியில் அறிவு பூர்வமான உலகத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். அதுவே அந்த மகானுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும் என்று யாழ்.வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் மறைவையிட்டு அந்தச் சங்கம் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவின் தென்கோடியிலே இராமேஸ்வரத்திலே மிகச் சாதாரண குடும்பத்திலே பிறந்தபோதும் பார்போற்றும் விஞ்ஞானியாகி, இந்திய நாட்டின் ஜனாதிபதியாகி சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் வாழும் மக்களின் இதயங்களிலும் வீற்றிருந்த அப்துல்கலாம் மறைந்து விட்டார் என்னும் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

ஏழைப்பங்காளனாகவும் மாணவ சமூகத்தின் வழிகாட்டியாகவும் திகழ்ந்த அந்த தமிழ்மகன் இன்று எம்மை விட்டு பிரிந்து விட்டார் என்பதை நம்ப முடியாமல் இருக் கிறது. இந்தியாவின் அதி உயர் பட்டமான பாரதரத்னா போன்ற பல பட்டங்களை பெற்ற அப்துல் கலாம் அவர்கள் ஒரு விஞ்ஞானியாகவும் தலைசிறந்த ஆசானாகவும், மதிப்புமிக்க ஆலோசகராகவும், சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார். இந்தியாவின் ஜனாதிபதியாகவும் பணியாற்றிய அவர் எம்மிடையே வாழ்ந்த ஓர் உத்தம மகானுமாவார்.

ஒரு தமிழனாக பிறந்து தமிழனாக வாழ்ந்த அவர் திருக்குறளை மிகவும் நேசித்ததுடன் அதனைப் பின்பற்றி தனது வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டார். எதிர்கால சமூகம் அவரது வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது இப்படியொரு மகான் எம்மிடையே வாழ்ந்தார் என்பதை நம்ப மறுக்கும் அளவுக்கு மிகவும் உன்னத வாழ்க்கை வாழ்ந்தார் அப்துல்கலாம்.

இந்தப் பெருமகன் யாழ்ப்பாணம் வந்திருந்த போது ரில்கோ யஹாட்டலில் அவரைச் சந்தித்தமையை ஒரு பாக்கியமாகவே நாம் கருதுகின்றோம். இந்தச் சந்திப்பை மறக்கவே முடியாது.

மிகவும் எளிமையாக எல்லோரிடத்திலும் சகஜமாகப் பழகிய இந்தப் பெருமகன் தான் நேசித்த மாணவர் சமூகத்தின் முன்பாகவே உயிர் நீத்தமையை அறிந்து மெய் சிலிர்க்கிறது. அவரின் மறைவுக்காக யாழ். வணிகர் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றது. - என்றுள்ளது. (ற-4)

# வேறு மாகாண அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கும் வாழ்வாதார நிதி

## முதற்கட்டமாக 22 குடும்பங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஏனைய மாகாணங்களிலுள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கும் நிரந்தர வாழ்வாதாரத் திட்டமாக 50 ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து பிறமாவட்டங்களைச் சேர்ந்த 22 அரசியல் கைதி களின் குடும்பங்கள் நேற்றுப் பதிவுகளை மேற்கொண்டுள்ளன என்று வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பான சந்திப்பு மற்றும் பதிவுகளும் மன்னாரில் நேற்று இடம்பெற்றன. மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தளை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினரே நேற்று தம்மைப் பதிவு செய்துள்ளனர் என்றும் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவர்கள் வேறுமாவட்டங்களில் இருந்தாலும் தமிழர் உரிமைக்காகப் போராடிப் பாதிக்கப்பட்டவர்கள் அந்த அடிப்படையில் அவர்கள் தமக்கும் அந்த வாழ்வாதாரத் திட்டத்தைத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், போரில் உயிர் நீத்த போராளிகளின் குடும்பங்கள் ஆகியோருக்கான விசேட நிரந்தர வாழ்வாதாரத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச் சால் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் முதலில் வடக்கில் உள்ள சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்காகவே உருவாக்கப்பட்டது.

எனினும் பிற மாகாணங்களில் இருந்தும் சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்கள் தொடர்பு கொண்டு தாமும் மிகுந்த வறுமையோடும் சிரமத்தோடும் வாழ்வை நடத்தி வருவதாகவும் தமக்கும் இந்த உதவித் திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தனர். – என்றார். (ற-4)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூலை 30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று மதியம் 12 மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற-[illegible])

# வடபிராந்திய போக்குவரத்து சபையினருக்கு சிக்கல்களைத் தீர்ப்பதில் அக்கறையில்லை

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கில் பயணிகள் போக்குவரத்துச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வடபிராந்தியத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் பங்களிப்பு வழங்குகிறார்கள் இல்லை. அக்கறையற்றுச் செயற்படுகின்றனர் என்று வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

போக்குவரத்துப் பற்றிய கலந்துரையாடலை நேற்று நடத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் கோரியதன் அடிப்படையில் நேற்று முன்தினம் வடக்கிலுள்ள மாவட்டங்களின் பிரதம கணக்காளர்களும் பங்குபற்றியிருந்தபோதும் வடக்கிலுள்ள 7 சாலைகளில் எந்தவொரு சாலையினதும் எவரும் கலந்து கொள்ளவில்லை. இது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க தடையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடல் யாழ். பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் முதல் இடம்பெற்றது. அதில் அமைச்சர் டெனீஸ்வரன், அமைச்சின் செயலாளர், வடக்கிலுள்ள பிரதம கணக்காளர்கள், அவ்வாறு வராதவர்களின் பிரதிநிதிகள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள், தனியார் போக்குவரத்து பஸ் சங்கங்களின் 5 மாவட்டங்களினதும் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போக்குவரத்துப் பற்றிய பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அது பற்றிய கலந்துரையாடல் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 5 மாவட்டங்களிலும் அந்த மாவட்டங்களைச் சேர்ந்த பிரதம கணக்காளர்களது தலைமையில் 9 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 13 பேர் கொண்ட குழுவாக அது அமைந்தது. அந்தச் சகல குழுவிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் கடந்த 16 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அது பற்றிய அறிவுறுத்தல் அவர்களுக்கு விடுக்கப்பட்டது. ஆனால் கடந்த 12 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை கொழும்பில் கலந்துரையாடல் இருப்பதால் 28 ஆம் திகதி அந்தக் கலந்துரையாடலை நடத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் எனது அமைச்சைக் கோரியிருந்தனர். அவர்களின் கோரிக்கைக்கேற்பவே அந்தக் கலந்துரையாடல் நேற்று நடத்தத் திட்டமிடப்பட்டது. அதில் கலந்து கொள்வதாகவும் அவர்கள் கூறியிருந்தனர். எனினும் இறுதிவரை அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் வேண்டுமென்றே கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன். போக்குவரத்துத் துறையினர் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். வருமானம் எதிர்பார்ப்பாக இருப்பின் சேவை பாதிக்கும் என்றேன். ஆனால் அதனை இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் மறுத்துவிட்டனர். எனவே வேண்டுமென்றே அவர்கள் கலந்துரையாடலைப் புறக்கணிக்கின்றனர் என்பதால் மக்களுக்குச் சேவை செய்ய முடியவில்லை என்றே கருதுகிறேன்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் தலையிட மாகாண அமைச்சரான எனக்கு அதிகாரமில்லை. ஆனால் மாகாண அமைச்சர் என்ற வகையில் வடக்கில் போக்குவரத்து வீதி ஒழுங்குகளை, நேர அட்டவணையைத் தயாரிக்க எனக்கு அதிகாரமிருக்கின்றது. அதற்குத் தேவையான ஒத்தாசைகளை வழங்க மத்திய அரசும் மத்திய அமைச்சர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சம்மதம் தெரிவித்த நிலையில் வடக்கிலுள்ள அதிகாரிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

சில பிரச்சினைகள் உள்ளன. அதனைத் தீர்ப்பது உள்ளிட்ட பல நோக்கத்திலேயே அவர்களையும் உள்ளடக்கி குழு நியமிக்கப்பட்டது. அதன் பின்னர் ஓடும் பஸ்களில் தனியார் பஸ்கள் 60 வீதமாகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் 40 வீதமாகவும் இருக்க வேண்டும் என்பது, உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பாக வழங்கப்பட்டுள்ளது. அந்த உயர் நீதிமன்றின் தீர்ப்பையே வடக்கில் நடைமுறைப்படுத்துகிறோம். அதனை இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் செய்ய பின்னிற்பதால் மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

துனியார் துறையினராக இருக்கலாம், இலங்கைப் போக்குவரத்துச் சபையினராக இருக்கலாம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு செயற்பாட்டுக்கு வரும் நேரஅட்டவணையின் படியே செயற்பட வேண்டும். அந்த நேரஅட்டவணையை மீறினால் யார் என்று பார்க்காது சட்ட நடவடிக்கைதான் எடுக்கப்படும். தனியார் என்றோ இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் என்றோ கவனம் செலுத்தப்படமாட்டாது. நேரஅட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் சில திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளதனால் பிரதம கணக் காளர்கள் ஒரு வார கால அவகா சம் கேட்டுள்ளனர். அது வந்த பின்னர் நடைமுறைக்கு வரும்– என்றார். (ற-4)

# சல்மா ஹம்சாவின் ஆதரவு இம்முறை ஹிஸ்புல்லாஹுக்கு

மட்டக்களப்பு, ஜூலை 30
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மகளிர் பிரிவின் கிழக்கு மாகாண அமைப்பாளரும், காத்தான்குடி நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான சல்மா ஹம்சா, நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை ஆதரிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹின் உடன் பிறந்த சகோதரியான இவர் கடந்த தேர்தல்களில் ஹிஸ்புல்லாஹ்குக்கு எதிராகவே செயற்பட்டு வந்தார். ஆயினும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடுவதற்கு இவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்த நிலையிலேயே அவர், தனது சகோதரரான ஹிஸ்புல்லாஹ்குக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்.
இது தொடர்பில் முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்குக்கும் தனக்குமிடையில் நடைபெற்ற பேச்சு வெற்றியளித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் ஹிஸ்புல்லாஹின் வெற்றிக்காக பரப்புரை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ற-10)

# அப்துல் கலாமின் மறைவு முழு உலகுக்கும் பேரிழப்பு

## அமைச்சர் ஹக்கீம் இரங்கல்



கொழும்பு, ஜூலை 30
இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் மறைவு முழு உலகிற்குமே பேரிழப்பெனத் தெரிவித்துள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.
அப்துல் கலாமின் மறைவை முன்னிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அவில் பக்கீர் ஜய்னுதீன் அப்துல் கலாமை இந்தியாவின் ஜனாதிபதியாக மாத்திரமன்றி மிகப் பெரும் சொத்தாகவும் முழு இந்தியார்களுமே பார்க்கின்றனர். அவர் இந்தியாவுக்கு மாத்திரமன்றி முழு உலகுக்குமே சொத்தாவார். மிகப்பெரும் விஞ்ஞானியான அப்துல் கலாம் இலங்கையோடு மிகவும் நெருக்கத்தைக் கொண்டிருந்தவர். இலங்கை மீது அதிக அக்கறை கொண்டிருந்தவர். அது மாத்திரமன்றி அவரது உறவினர்கள் கூட இலங்கையில் சிலாபத்தில் வசிக்கின்றனர்.
தான் ஒரு விஞ்ஞானியாக இருந்தபோதிலும் எழுத்துத்துறையிலும் அதீத ஆர்வம் காட்டினார். அறிவியல் தொடர்பான பல நூல்களை அவர் எழுதி வெளியிட்டுள்ளார். இந்திய இளைஞர்கள் மத்தியில் கல்வி தொடர்பில் மிகப் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார்.
அவர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தபோது அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. இந்தியா மிகப்பெரும் சொத்தை இழந்து விட்டது. இது இந்தியாவுக்கு மாத்திரமன்றி முழு உலகுக்குமே பேரிழப்பாகும் – என்றார். (ற-10)

# ஐ.தே.முவின் அலுவலகங்கள் தர்கா நகரில் திறக்கப்பட்டன



கொழும்பு, ஜூலை, 30
ஐக்கிய தேசிய முன்னணியின் ஆறு தேர்தல் அலுவலகங்கள் தர்கா நகரில் திறந்துவைக்கப்பட்டுள்ளன. இவை சுகாதார அமைச்சரும் ஐக்கிய தேசிய முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளருமான சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவால் திறந்து வைக்கப்பட்டன.
தர்கா நகர் ஜெய்லானி வீதி, ஸாஹிரா வீதி, பிரதான வீதி, சமகி மாவத்தை, மாஜுக்கட் வீதி மற்றும் காதியாவத்தை ஆகிய இடங்களிலேயே இந்த அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டன.
இந்த நிகழ்வுகளில் ஐக்கிய தேசிய முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அஸ்லம் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-10)

# பௌசியை பிரதமராக்க கோருகிறது உலமா கட்சி

கொழும்பு, ஜூலை 30
அமைச்சர் பௌசி பிரதமராக நியமிக்கப்பட்டால் அது நாட்டின் மிகப் பெரும் வரலாற்று நிகழ்வாக இருக்கும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இனவாதக் கட்சி அல்ல என்பதை நிரூபித்ததாகவும் அமையும் என்று உலமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இன்று முஸ்லிம் அரசியல்வாதிகளில் அமைச்சர் பௌசியே அனுபவம் வாய்ந்தவர். ஆளுமை மிக்க ஒருவரும் கூட. அந்த வகையில் அவர் பிரதமராக நியமிக்கப்படுவதற்கு முழுத் தகுதியும் உடையவராவார் என்றார். (ற-10)

# மு.காவுக்கு 12 ஆசனங்கள்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 30
நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெறும் சிறிலங்கா முஸ்லிம் காங்ரஸ் 12 உறுப்பினர்களுடன் நாடாளுமன்றம் செல்லும் என கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.
கல்குடா, மீராவோடையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்று நாட்டில் முழு மாவட்டங்களில் இருந்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் முஸ்லிம்களின் தலைமைத்துவக் கட்சி என்பதைப் புரிந்து மக்கள் அதன் பக்கம் அலையலையாய் வந்து கொண்டிருக்கின்றனர். இம்முறை நடைபெறும் தேர்தல் அதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையும்.
இதனை சகிக்க முடியாத சிலர் முஸ்லிம் பிரதிநிதிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் சிறகுடைந்த பறவைகளாகத் தெத்தித் திரிகிறார்கள். இது அவர்களின் பகல் கனவாக மாறும் காலம் மிகவிரைவில் வரும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு மாவட்டங்களில் கட்சியின் மரச் சின்னத்திலும், ஏனைய பல மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியுடனும் இணைந்தும் தேர்தலில் களமிறங்கியுள்ளது. அதன் பயனாக இம்முறை பலத்த வெற்றிவாய்ப்புக் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் அதிகரித்துள்ளது.
இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் முஸ்லிம்கள் வாக்குகளை வீணாக சில்லறைக் கட்சிகளுக்கு அளிப்ப மூலம் முஸ்லிம் வாக்குகளை வீணடிக்காமல் சமூகத்தின் குரலாய் ஒலிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கி அதன் மூலம் சமூகத்தின் பலத்தை அதிகரிக்க அனைவரும் கைகோர்த்து உதவ வேண்டும். அதற்காக அனைவரும் முன்வாருங்கள். நாட்டையும், எமது மாகாணத்தையும், நமது மாவட்டத்தையும் சிறப்பான பாதையில் முன்னெடுத்துச் செல்வோம். அதற்காக பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைவோம். (ற-10)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் செயல் கண்டு பெருமைப்படுவீர்கள். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**இடபம்:** தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூர்ப் பயணம் செல்ல வாய்ப்புண்டு. மாணவர்கள், படிப்பில் அக்கறை செலுத்துவர்.

**மிதுனம்:** மனதில் இரக்க சிந்தனை அதிகரிக்கும். உறவினர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி ஏற்படும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள். சவாலை வெல்ல முயல்வீர்கள்.

**கடகம்:** தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். அதிக விலையுள்ள பொருள்களை, கவனமாகப் பாதுகாக்கவும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையைத் தேடித் தரும்.

**சிங்கம்:** செயலில் உற்சாகம் நிறைந்திருக்கும். இஷ்டதெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை உருவாகும். வருமானம் கூடும். இல்லறத் துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். மின்சார உபகரணங்களைக் கவனமாகக் கையாளவும். உறவினர் ஆதரவைப் பெறுவீர்கள்.

**துலாம்:** திறமையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் கூடும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் ஆடை ஆபரணம் வாங்க யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை விரும்பியதை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு, பாராட்டுப் பெறுவர்.

**தனுசு:** எவருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். அதிக பயன்தராத பொருள்களை விலைக்கு வாங்க வேண்டாம். பிள்ளைகளின் செயல் கண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். அதிக விலைமதிப்புள்ள பொருள்களைக், கவனமாகப் பயன்படுத்தவும். மாணவர்கள் நன்றாகப் படிப்பர்.

**கும்பம்:** மற்றவர்கள் உங்களை, வியப்புடன் பார்க்கும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**மீனம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். பிறருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.









சில மாதங்கள் ஓர் உயிரை சுமக்கும் பெண்மையை போற்றும் இந்தச் சமூகம்...



ஆயுள் முழுவதும் ஒரு குடும்பத்தையே சுமக்கும் ஆணை மறந்து விடுகிறது...

*"பெண்ணாதிக்கச் சமூகம்"*






இரண்டு அடியில் புரிய வைப்பவர் திருவள்ளுவர்! ஒரே அடியில் புரிய வைப்பவள் மனைவி!!!

# இப்படி ஒரு ஆண் கிடைத்தால் ...



- எந்த ஒரு கடும் கோபத்திலும் எல்லை மீறி தகாத வார்த்தைச் சொல்லிவிட்டு வாய் தவறி வந்தது என்றுச் சொல்லமாட்டார்.
- உங்களின் மோசமான சமையலையும் சிரித்துக் கொண்டே சாப்பிடுவார்.
- எந்த ஒரு சண்டையிலும் உங்கள் குடும்பத்தாரை இழுத்துப் பேச மாட்டார். ஒவ்வொரு சண்டையின் பின்னும் உங்களை இன்னும் ஆழமாய் நேசிப்பார்.
- மற்றவர் முன் உங்களை விட்டுத் தர மாட்டார். உங்கள் குறைகளை நிறைகளாக்க முயற்சிப்பார்.
- உங்கள் மனதை ஆழமாய் நேசிப்பதால், எத்தனை அழகான பெண்கள் முன்னும் நீங்கள் மட்டுமே அவர் கண்ணுக்கு அழகாய்த் தெரிவீர்கள்.
- உங்கள் முகம் சிரிப்பிழந்த நாள்களில், அவரால் அலுவலகத்தில் வேலை செய்ய முடியாது. வேறு எந்த வேலையிலும் கவனம் செல்லாது .
- உங்களைத் எந்த ஒரு பெண்ணுடனும் ஒப்பிட்டுப் பேச மாட்டார். எந்த ஒரு பெண்ணைப் பற்றியும் உங்களிடம் பேசவும் மாட்டார்.
- உங்களைத் தொலைவில் இருந்துப் பார்த்தேனும் ரசிக்க தவமிருப்பார். உங்கள் மௌனங்கள் அனைத்தையும் அழகாய் மொழி பெயர்ப்பார்.
- அவர் குடும்பத்தில் அனைவருக்கும் பிடித்த பெண்ணாய் உங்களை மாற்றிடுவார். எல்லோருக்கும் ஏற்றவர் போல் நீங்கள் நடந்துகொள்ள உதவுவார்.
- உங்களை வேலைக்காரியாய், சமையல்காரியாய் பார்ப்பதை விட்டு, குழந்தையாய், தோழியாய், தாரமாய், தாயாய்ப் பார்ப்பார்.
- ஆத்திரத்தில் திட்டிவிட்டு, உங்கள் அழுகையைப் பார்த்து அதிகம் வருந்துவார். நீங்கள் சிரிக்கும் வரை அவர் சிந்தனை இழந்து நிற்பார்.

பாராளுமன்றத் தேர்தல் 2015

# சுயேச்சை குழு 6



## 8 X

## ஒளி தந்த ஒளி விளக்கு வே.கணேஸ்வரன்

என் பெயர் சிவாஜினி சுரேஷ்குமார். மின்சார நிலைய வீதி, சுன்னாகம் இருப்பிடம். ஒரு பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்தவள். இயக்கப் பெயர் பூவரசி. தடுப்பு முகாம், நான்காம் மாடி எனக் கடுமையான சன வலிகளைத் தாங்கியவள். நான் செய்த குற்றம், விடுதலை போராட்டத்தில் இணைந்து கொண்டமைதான். கடந்த காலத்தில் போராளியாக இருந்தமையால் சமூகம் எங்களைப் புறந்தள்ளி வைத்துள்ளது. அதனால் நான் மானசிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளேன். புதிய சொந்த பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளவோ புதிய தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ முடியாத நிலை. சமூக வட்டத்திலிருந்து பிரித்து வைத்துள்ளார்கள். விரக்தியுற்று மனக்குமுறலுடன் வாழ்கிறேன்.

மிகவும் பரிதாபத்திற்குரிய ஒரு சமூகப் பிரிவினராக வாழும் எங்களுக்கு வெளிச்சம் தந்தவர் வே.கணேஸ்வரன் ஐயா! எமது கிராமத்திலுள்ள சனசமூக நிலையத்திற்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு நீண்ட காலமாயிற்று. அன்றாடம் உழைத்து தங்களுடைய ஒரு வேளை வயிற்றுப் பசியைப் போக்க வழியில்லாமல் திண்டாடும் இந்த மக்களிடம் எப்படிப் பணம் அறவிட்டுக் கட்டுவது என்ற நெருக்கடி நிலை. யாரிடம் போய்க் கேட்டாலும் கிடைக்காது என்ற மனநிலையில் இருந்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் கிராமத்திற்கு வந்த கணேஸ்வரன் ஐயாவிடம் இது தொடர்பாக நாங்கள் முறையிட்டபோது உடனே தன்னுடைய சாக்கிலிருந்து முழுத் தொகையையும் தந்தார். பெருமகன் அவர். இருளில் மூழ்கியிருந்த எங்கள் சனசமூக நிலையத்திற்கு தம் சொந்த நிதியில் வெளிச்சமும் தந்தார்.

சொல்வதைச் செய்யும் சமூகப்பற்றுமிக்க ஒரு நல்ல மனிதர். அவருடைய செயலினால் கவரப்பட்டு அவருடன் இணைந்துகொண்டேன். எங்களுக்குத் தலை நிமிர்ந்து கொண்டவர்கள் இதுவரை காலமும் எங்களுக்காக எதுவும் செய்யவில்லை. இனிவருங்காலங்களில் எதைச் செய்யப்போகிறார்கள். ஒரு மனிதனுக்குப் பசியோடு இருக்கும் போதுதான் உணவு தேவை. நாங்கள் ஒரு வேளைகூட உணவு இல்லாமல் துவண்டு போய்க் கிடக்கிறோம். எமக்காக ஒரு புதிய மாற்றம் தேவை. நான் எட்டாம் இலக்கத்தில் போட்டியிடுகிறேன். ஐயாவுக்கொரு முதல் வாக்கை அளித்து விட்டு எனக்கும் ஒரு வாக்கைப் போடுங்கள்.

சிவாஜினி சுரேஷ்குமார்

மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.



சிவன் பவுண்டேசன் நிறுவுநர்

## 6 X

## கொடை வள்ளல், சமூக ஆர்வலர்

# வேலாயுதம் கணேஸ்வரன்

# நன்றி நவிலல்



## செல்வி மேரி பூரணம் உவில்லியம்

அச்சுவேலி சந்நிதி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி மேரி பூரணம் உவில்லியம் அவர்களைப் பராமரித்த வைத்தியர்கள் மருத்துவத் துறை சார்ந்த ஏனைய ஊழியர்கள் சகலருக்கும் எமது நன்றிகள்.

அவரை அன்போடு பார்வையிட்டுப் பல உதவிகளையும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அவரின் மாணவர்கள் ,சகலருக்கும், எமது நன்றிகள். மறைவை அறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களூடாகவும் மலர் வளையங்கள் மூலமாகவும் பதாகைகள் வாயிலாகவும் தமது அஞ்சலிகளைச் செலுத்தியோருக்கும் , யா/ வேம்படி மகளிர் கல்லூரி, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அச்சுவேலி சென்ற் திரேசா மகளிர் கல்லூரி,அ/ மத்திய கல்லூரி, அ/ ஆரம்பப் பாடசாலை, அ/ தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியினருக்கும், நல்லடக்க ஆராதனையை நடத்திய தென்னிந்திய திருச்சபை பேராயர் அவர்களுக்கும் அத்திருச்சபைக் குருமாருக்கும் , C.A.C.M மெதடிஸ் திருச்சபை குருமாருக்கும் ஏனைய குருமாருக்கும் இரங்கல் உரை ஆற்றிய பெரியோருக்கும். இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட சகலருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சந்நிதிவீதி
அச்சுவேலி

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## சு.பொ. நடராஜா

(அதிபர் அண்ணா தொழிலகம் - இணுவில்)



எமது குடும்பத்தலைவர் சு.பொ.நடராஜா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், மலர்மாலை சூடியோருக்கும், மலர் வளையம் வைத்தோருக்கும் மலரஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக் கிரியைகளின்போது கலந்து கொண்டு அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும், இறுதி நிகழ்வின்போது அஞ்சலி உரைநிகழ்த்தியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதி அஞ்சலி செலுத்திய இணுவில் இந்துக்கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றியதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பொது நூலகத்தினருக்கும் அறிவாலயத்தினருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது ஸ்தாபனத்தின் ஊழியர்கள், சகல பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் உட்பட உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதி நிகழ்வின்போது தமது இறுதி அஞ்சலி செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் பெரு மக்கள் யாவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.07.2015) வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வையெட்டி நடைபெறும் மதியபோசன வைபவம். 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் இடம்பெற உள்ளது. அவ்வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இணுவில்

அன்னா குடும்பத்தினர்.

## வருடாந்த விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.மாநகரசபை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

மாநகரசபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக டி.ஆர்.ஜெசிதரனும், கௌரவ விருந்தினராக டி.ஆர். உமாசுதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ரி)

# 21 ஆம் ஆண்டு நினைவுகளில்



அமரர் தம்பு துரைராசா

மலர்வு
07.01.1936

உதிர்வு
21.07.1994

திதி : சதுர்த்தசி
(30.07.2015)

அன்பான ஐயாவே ! இருபத்தோர் ஆண்டென்ன-ஐயா!
இருபத்தோராயிரம் ஆண்டானாலும் - ஐயா !
உங்கள் நினைவுகள் என்றென்றும் - எம் மனதில்
நிலைத்து நிற்கும் - ஐயா !
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்.......!

பண்டத்தரிப்பு,
பிரான்பற்று.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
செல்வராசா கோணேஸ்



பிறப்பு
13.03.1980

இறப்பு
30.06.2015

கடந்த 30.06.2015 இறைபதம் அடைந்த எங்கள் அன்புச் செல்வம் செல்வராசா கோணேஸ் அவர்களின் இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவியவர் களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (30.07.2015) வியாழக்கிழமை

அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"எங்கள் உயிர் மூச்சே! உன்னையே தினமும் எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் உறவுகளின் குலவிளக்கு நீதானப்பா!"

இல. 30/1,
முத்துமாரி அம்மன் வீதி,
உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
நேமிநாதன் கதிர்காமநாதன்



பிறப்பு
02.06.1954

இறப்பு
30.06.2015

கடந்த 30.06.2015 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் நேமிநாதன் கதிர்காமநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.07.2015 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (30.07.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54, ஆர்சுாட்டி வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

## உறுதியில்லாத வெள்ள வாய்க்கால்: மக்கள் குற்றச்சாட்டு

கொழும்புத்துறை, ஜூலை 30

சுண்டுக்குளி பழைய பூங்கா வீதியில் மறவன்குளப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் வெள்ள நீர்க்கால்வாய் உறுதியில்லாமல் அமைக்கப்பட்டு வருவதாக பொது அமைப்புக்களும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வாகனப்போக்குவரத்து மிகுந்த வீதியின் ஓரமாக அமைக்கப்படும் குறித்த கால்வாயின் பக்கச் சுவர்கள் கொங்கிறீற் கற்கள் கொண்டு கட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பெட்டி அமைத்து கொங்கிறீற் கலவை இட்டு அமைப்பதே காத்திரமாக அமையும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வேலைத்திட்டத்துடன் தொடர்புடையோர் இந்த விடயத்தில் கவனமெடுத்து அதனைப் பல முள்ளதாக நீண்ட காலம் பயன் படக்கூடிய முறையில் அமைக்க ஆவன செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-135)

## பயிலுநர்களை இணைப்பதற்கான விண்ணப்பம்

வலி.வடக்கு, ஜூலை 30

பொதுச் சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்காக பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பம் மத்திய சுகாதார அமைச்சால் கோரப்பட்டுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்போரின் கல்வித் தகைமையாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், விஞ்ஞானம், கணிதம் அடங்கலாக மற்றுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம் உட்பட இரு அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல், மற்றும் 2010, 2011, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்தில் திறமைச்சித்தியுடன் பௌதிகவியல்,இரசாயனவியல், விவசாயம் ஆகியனவற்றில் இரண்டில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்களைஎதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

## சுரேஷ் க.பிரேமச்சந்திரன்



அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க

**வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்**
**4 இற்கும் வாக்களியுங்கள்**

---

பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ் தேர்தல் மாவட்டம்



## நேர்மை! எளிமை!! உறுதி!!!

7



எங்களில் ஒருவரான
**திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன்**
அவர்களை ஆதரிப்போம்.
(முன்னாள் பா.உ அமரர் வி.தர்மலிங்கம்
அவர்களின் புதல்வன்)
- கோப்பாய் தொகுதி மக்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

---

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

## நானும் ஒரு தந்தை - உங்களின் வலி எனக்குத்தெரியும்

யாழ் நகர யுத்த, வன்முறை, ஆக்கிரமிப்புக்களால் அடையாளங்களைக் கடந்த காலங்களில் பெற்றிருந்தது. எம் பிரதேச மக்களின் இன்றைய பிரச்சினைகளில் காணாமல் போனவர்கள் பற்றிய பிரச்சினை அதிகம் மனதை உலுக்கும் பிரச்சினையாகவும், தீராது வழியும் கண்ணீராகவும் இருக்கின்றது. அம் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொண்டு அம் மக்களுக்கு கௌரவ ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஊடாக தீர்வைப் பெற்றுக் கொடுத்துள்ளேன். மிக விரைவில் உங்கள் பிள்ளைகளின் நிலையை அறியத்தருவேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு





## அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும்
வடமாகாண சபை உறுப்பினர்)

**புதிய நாடு புதிய தலைவர் புதிய தலைமுறை புதிய எதிர்பார்ப்பு**

# போக்குவரத்து விதிகளை மீறிய நால்வருக்கு அபராதம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மொத்தமாக 36 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழித்தட அனுமதியின்றி பயணிகளை ஏற்றி வந்த வாகனச் சாரதியொருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும், திகதி காலாவதியான காப்புறுதிப் பத்திரத்துடன் வாகனம் செலுத்திய சாரதியொருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், அளவுக்கு அதிகமான ஆள்களை வாகனத்தில் ஏற்றி வந்த சாரதியொருவருக்கு3 ஆயிரம் ரூபாவும், கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதமும் விதிக்கப்பட்டது. (ற-9)

# Invitation For Bids (IFB)
## Zonal Education Office, Mullaitivu

01. The Chairman, regional Procurement Committee on behalf of the Zonal Education Office, Mullaitivu now invites sealed bids from eligible and qualified bidders for the following civil works.

| S.no | Bid Code No. | Name of School & Description of Works. | Required grade of Bidder | Bid Security Rs. | Basic Estimate Cost (Mn) |
|---|---|---|---|---|---|
| 01 | MU/ZEO/SWB/PSDG/2012-01 | Balance work at single Storey class room building 120'x25' at MU/Uduppukkulam TV | C8 | 45,000.00 | 4.5 |

02. Source of Fund for the above work is PSDG Project.
03. The Period of Completion of each of these Services is 90 days from the Start date.
04. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of Building Construction for above men tioned grade or above with the Institute for Construction Training and Development (ICTAD)
05. Interested bidders may obtain further information and inspect the bidding documents at the Zonal Education Office Mullaitivu, during office hours.
06. A complete set of Bidding Documents in English language may be purchased from the office of Zonal Education Office, School Works Branch, Mullaitivu by interested bidders on the submission of a written application to the date from 30.07.2015 until 14.08.2015 from 09.00 hrs to 15.00 hrs Upon payment of a non refundable fee of LKR 2,500/= the method of payment will be cash to the office of the zonal Education Office, Mullaitivu.
07. Bids Shall be delivered to Zonal Education Office Mullaitivu on or before 14.00 hours on 17.08.2015 Late bids will be rejcted. Bids will be opened soon after closing in the presence of the bidders` representatives who choose to attend.
08. Pre bid Conference will be held at Zonal Education office Mullaitivu on 12.08.2015 at 11.00 hrs.
09. All bids Shall be accompanied by a Bid Security on the name of Zonal Director of Education, Jaffna for rupees above mention which should be obtained either from a reputed Bank operating in Sri Lanka or from the construction Guarantee Fund, valid for a period of 120 days (from 17.08.2015 till 14.12.2015) from the date of close of bids. The Bid Security should be "On-demand" & "Un-conditional" and on the fomat given in the Bidding Document.

Chairman,
Regional Procurement Committee, Zonal Education Office, Mullaitivu.

# Provincial Directorate of Health Services, Northern Province.
## Procurement of Security Services & Cleaning Services - 2015 / 2016

The Chairman, Department Procurement Committee (DPC) on behalf of the provincial Directorate of Health Services now invites bidders for supply of Security Services and Cleaning Services for Health Institution in Northern Province.

| Bid No | District | NO of persons Day / Night |
|---|---|---|
| NP/H/Sec/15/JA | JAFFNA DISTRICT | 51 |
| NP/H/Sec/15/VA | VAVUNIYA DISTRICT | 27 |
| NP/H/Sec/15/MAN | MANNAR DISTRICT | 29 |
| NP/H/Sec/15/MU | MULLAITIVU DISTRICT | 13 |
| NP/H/Sec/15/KI | KILINOCHCHI DISITRICT | 10 |

| Bid No | District | NO of persons Day / Night |
|---|---|---|
| NP/H/Cle/15/JA | JAFFNA DISTRICT | 45 |
| NP/H/Cle/15/VA | VAVUNIYA DISTRICT | 31 |
| NP/H/Cle/15/MAN | MANNAR DISTRICT | 11 |
| NP/H/Cle/15/MU | MULLAITIVU DISTRICT | 11 |

1. Interested eligible bidders may obtain further information from the Provincial Directorate of Health Services , Northern Province (0212220812) and inspect the bidding documents at the address given below during office hours.
2. Bid documents will be issued from 03.08.2015 till 24.08.2015 during 09.00 hours to 15.00 hours on Working days, upon payment of non refundable fee of Rs.500/= for each document, submisson of approved copy of Bussiness Registration, request made on their letter head and "Application to get Bid Documents" available in this Department. The mode of payment will be cash.
3. Bid should be handed over to the below address or deposited in the tender box available at chief Accountant's Room on or before the closing time of bids 10.00 hours of 25th August 2015. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

**Dr (Mrs.) S.R Jude Chairman - DPC**
**Provincial Directorate of Health Services**
**Health Village, Pannai, Jaffna.**

# கலை இலக்கிய களத்தின் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூலை, 30
தெல்லிப்பழை கலை, இலக்கியக் களத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 2:30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி புதிய மண்டபத்தில் நடைபெறும் இந்த ஒன்றுகூடலுக்கு சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை தலைமை வகிக்கவுள்ளார்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய நிபுணர் சீ.நவரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் கோகிலா மகேந்திரனின் 'நேர் கொண்ட பாவை', யதீஸ்வரியின் 'ஆடிப் பாடுவோம்' ஆகிய இரு நூல்களின் வெளியீடும், சோலைக்குயில் அவைக்காற்றுக்களம் நடத்திய ஆசிரியர்கள், அதிபர்களின் ஆங்கில பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளன.
ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி)

# வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 30
யாழ்ப்பாணம் அரியாலை பிரப்பங்குளம் அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் இரண்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.
தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தில் 15ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
தினமும் காலைத் திருவிழா காலை 8.30மணிக்கும் மாலைத்திருவிழா மாலை 5மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். விழாக் காலங்களில் அடியவர்கள் வருகை தந்து அம்பிகையின் அருட்பொலிவைக் கண்டு தரிசிக்குமாறு ஆலய பரிபாலன சபையினரும்விழாஉபயகாரர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற-ரி)

# யாழ். மாநகர சபையின் விருது பேராசிரியர் தேவராஜாவுக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 30
யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழுவால் வருடாந்தம் வழங்கப்படும் யாழ். விருதின் இந்த வருடத்துக்கான விருது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கே.தேவராஜாவுக்கு வழங்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவின் மகாசபையால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மாநகர சபையால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் நூல் வெளியிட்டின்போது இந்த விருது வழங்கப்படவுள்ளது.
சமூக, சமயப் பணிகளில் அதீத ஈடுபாடு கொண்ட பேராசிரியர் க.தேவராஜா இணுவில் பிரதேசத்தில் சைவப் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பேணுவதற்கு அளப்பெரும் சேவையாற்றி வருபவர்.
இதேவேளை கடந்த வருடத்துக்கான யாழ். விருது சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபாவாசு தேவக்குருக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. (ற-7)

# தாய், தந்தையை இழந்த சிறாருக்கு உதவி நிதி

தென்மராட்சி, ஜூலை 30
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தாய், தந்தையை இழந்து உறவினர்களுடன் வாழும் இரு குழந்தைகளுக்கு வாழ்வாதார, கல்வி உதவி நிதியாக மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வழங்க முன்வந்துள்ளனர்.
வன்னிப் பகுதியில் தந்தையைப் பறிகொடுத்த நிலையில் இராமாவில் பகுதியில் வசித்துவந்த இந்த இளஞ் சிறார்கள், கடந்த வருடம் முன் பள்ளியிலிருந்து பிள்ளையை அழைத்து வரும் போது வாகனத்தால் மோதுண்டு தாயும் இறந்ததன் மூலம் பெற்றோர் இருவரையும் பறி கொடுத்தனர். அதன் பின்னர் உற வினருடன் வாழ்ந்து வரும் இந்தச் சிறார்களின் எதிர்கால நலன் கருதி கழகத்தினர் மாதாந்தம் நிதி வழங்க முன்வந்துள்ளனர்.
அண்மையில் சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கழகத்தின் நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வில் சிறார்களுக்கு நிதி வழங்கும் செயற்றிட்டத்தை முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக 306 பிமாவட்ட வலயத் தலைவர் லயன்லக நகுன்ஆரம் பித்துவைத்தார். (ற-9)

**வீடு வாடகைக்கு**
நல்லூர் கோயில் வீதியில் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 069 0285

**வீடு வளவு விற்பனைக்கு**
அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தில் பிரதான வீதிக் கண்மையில் 10 நிமிடங்களில் யாழ் நகரை அடையக் கூடிய தூரத்தில் ஐந்து பரப்புக் காணியில் பயன்தரு மரங்களையும், சகல வசதிகளையும் உடைய திருத்தம் செய்யப்பட்ட அழகிய வீடு வளவு விற்பனைக்குண்டு.
(63176) (9.9) தொடர்பு: 021 205 4016

**வீடுவளவு விற்பனைக்கு!**
மீசாலை வடக்கு, வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன், உடன் குடியேறக்கூடிய, நல்ல நிலையில் உள்ள 4 பரப்பு காணி வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : நவா : 0766 686740
0061 3425808199
தவம் : 0775 977210

**தேவை**
* மூன்று மொழிகளும் பேச , எழுத தெரிந்த ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் (திடகாத்திரமான) அலுவலக முகாமையாளர் தேவை.
* அலுவலக பராமரிப்பாளர்/ பாதுகாவலர் (இரவு- பகல்) 40 வயதுக்கு உட்பட்ட யாழ் நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 554 9883

## கேம் பிரியர்களுக்காக அங்கிரிபேர்ட்ஸ் -2 (Angry Birds-2)

அங்கிரி பேர்ட்ஸ் -2 (Angry Birds) கேம் ஆனது பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொட்டியெங்கும் பிரபல்யம் அடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கேம் பிரியர்களை வெகுவாகக் கவர்ந்த இந்தக் கேமின் இரண்டாம் பாகத்தை அண்மையில் வெளியிடவுள்ளதாக Rovio நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை அங்கிரி பேர்ட்ஸ் கேம் சுமார் 3 பில்லி யன் தடவைகள் தரவிறக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், மில்லியன் கணக்கான பயனர்களையும் தன் வசம் கொண்டிருந்தது.

இதேபோன்றே புதிதாக அறிமுகமாகவுள்ள அங்கிரி பேர்ட்ஸ் 2 கேமும் பலத்த வரவேற் பைப் பெறும் என எதிர்பார்க்கப் படுகின்றது.




## புதிய அனுபவத்தைத் தரும் பிளாஸ்ரிக் பாதைகள்

தற்போது தரைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் வீதிகளை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் நீண்ட காலம் நிலைத்திருக்காமையினால், வீதிகளை அடிக்கடி செப்பனிடவேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

இதனைத் தவிர்த்து புதிய பயண அனுபவங்களை வழங்கக்கூடிய வகையில் எதிர்காலத்தில் பிளாஸ்ரிக் பாதைகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக ஐரோப்பிய நிறுவனமான வோல்கர் வெஸல்ஸ் தனது ஆரம்ப முயற்சிகளில் இறங்கியுள்ளது.



மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் பிளாஸ்ரிக்கைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் வீதிகள் உயர் மற்றும் குறைந்த வெப்ப நிலைகளுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் வீதிகளை விரைவாக அமைப்பதற்கும் இந்த பிளாஸ்ரிக் பாதைகள் உதவும் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரீவீசி அறிமுகம் செய்யும் ஸ்லிம் ஸ்மார்ட் கைபேசி



ரீவீசி நிறுவனமானது பூஸ்ட் மக்ஸ் பிளஸ் எனும் புத்தம் புதிய ஸ்லிம் ஸ்மார்ட் கைபேசியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

199.99 டொலர்கள் பெறுமதியான இந்தக் கைபேசியானது 5.7 அங்குல அளவு, 1280 X 720 பிக்ஸல் றிஸலூசன் உடைய எச்.டி தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், குவால்கொம் நப்டிராகன் 410 புரோசசர், பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் கொண்டுள்ளது.

மேலும் அன்ட்ரோயிட் 5.1 இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்தக் கைபேசியில் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, ஒரு மெகாபிக்சலை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றுடன் 3400 மெகா அம்பியர்ஸ் மின்கலமும் தரப்பட்டுள்ளது.

## யாழ். மாவட்டச் செயலக செய்தி மடல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.மாவட்டச் செயலகத்தால் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி விடயங்களைத் தாங்கிய இந்த ஆண்டுக்கான முதலாவது செய்தி மடல் நேற்றுப் புதன்கிழமை வெளியிடப் பட்டுள்ளது. இந்த நிகழ்வு யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

செய்தி மடலின் முதலாவது பிரதியை யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனிடம் இருந்து அரச அதிபர் நா.வேதநாயகன் பெற்றுக் கொண்டார்.

யாழ்.மாவட்டச்செயலகம்மற்றும்பிரதேச செயலகங்களில் இடம் பெற்ற, இடம்பெற்று வரும் அபிவிருத்தி மற்றும் விசேட சேவைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய மடல் காலாண்டுக்கு ஒரு முறை இந்த ஆண்டில் இருந்து வெளியிடுவதாக மாவட்டச் செயலகத்தால் தீர்மானிக் கப்பட்டிருந்தது. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்டத்தின் முதலாவது பிரதேச செயலகமாகிய நெடுந்தீவு பிரதேச செயலகம் ஆகியவற்றின் செயற்பாடுகளை உள்ளடக்கிய இந்த வருடத்துக்கான முதலாவது செயலக மடல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மடல் இலங்கையின் அனைத்து மாவட்டச் செயலகங்களுக்கும், மத்திய மற்றும் மாகாண அரசின் திணைக்களங்களுக்கும் அனுப்பப் படவுள்ளன. (ற-86,10,ரி)

## மருதனார்மடம் சந்தை கட்டடத்தொகுதி திறப்பு

வலி.வடக்கு, ஜூலை 30

சுமார் ஐந்து கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மருதனார் மடம் சந்தை கட்டடத் தொகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வலி. தெற்கு பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.பரமேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சபையின் தலைவர் தியாகராசா பிரகாஸ் கடைத் தொகுதியைத் திறந்து வைத்தார்.



மருதனார்மடம் சந்தியில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விருந்தினர்கள் ஆலயத்தில் இருந்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து கடைத் தொகுயைச் சபையின் தலைவர் திறந்து வைக்க நினைவுப் பலகையை உப தலைவர் பரமேஸ்வரலிங்கம், செயலாளர் எஸ்.தியாகச்சந்திரன் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர். அதைத் தொடர்ந்து வட மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜ தீபன் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் கே. மகேந்திரன் உட்படப் பலர்கலந்து கொண்டனர். (ற-86)

## யானைகளால் பாதிக்கப்படும் மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 30

யானைகளின் அத்துமீறலால் பாதிக்கப்பட்ட மட்டக் களப்பு விவசாயிகள் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள செங்கலடிப்பற்று மற்றும் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பாவக்கொடிச்சேனை, உன்னிச்சை, எட்டாம்கட்டை, இருநூறுவில், கரவெட்டி, கள்ளச் சேனை பிரதேச விவசாயிகளே மேற்படி ஆர்ப்பாட் டத்தில்ஈடுபட்டனர்.



காடுகள் அழிக்கப்பட்டதால் யானைகள் கடந்த3 மாதங்களாக குடியிருப்புக்கள், பயிர்கள் என்பவற்றை அழித்து தமது வாழ்வாதாரத்தை அழித்துள்ளன. இது சம்பந்தமாக குறித்த பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. இந்த நிலையில்தான் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-10)

உதயன் | வியாழக்கிழமை | ஜூலை 30 | 2015

# அகதிகள் விவகாரம் சிக்கலில் பிரான்ஸ்

## ஒரே நாளில் 2 ஆயிரம் பேர் தப்பிக்க முயற்சி

பாரிஸ்;ஜூலை 30
பிரிட்டனுக்கு அகதிகள் அதிகளவு கள்ளத்தனமாகத் தப்பிச் செல்ல முயற்சிப்பதால் பிரான்ஸ் கடும் சிக்கலில் தவித்து வருகிறது.



பிரான்ஸ் நாட்டில் இருந்து பலர் கலாஸ் பகுதியில் உள்ள யூரோ டனல் வழியாகச் சட்டவிரோதமாக பிரிட்டனுக்குச் செல்கின்றனர். அதனைத் தடுப்பதற்காக இரு நாடுகளும் முயற்சி எடுத்து வருகின்றன.
இந்த நிலையில் கடந்த திங்கள் இரவு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் யூரோ டனல் வழியாக தப்பிக்க முயற்சி செய்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.
மேலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தப்பிச் செல்வதற்காக அந்தப் பகுதியில் முகாமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக யூரோ டனலின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது, பொதுவாக இரவு வேளைகளிலேயே அவர்கள் கள்ளத்தன்மாக பிரிட்டனுக்குச் செல்கின்றனர். அதைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
இந்தக் கோடை காலத்தில் மட்டும் இதுவரை 8 பேர் பிரிட்டனுக்குச் செல்ல முயன்று இறந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் இவ்வாறு கள்ளத்தனமாக தங்களது நாட்டுக்குள் வருவதைத் தடுப்பதற்காக பிரிட்டன் யூரோ டனலின் பாதுகாப்புக்கு மேலும் 10.9 மில்லியன் டொலர் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மனைவியின் தலையைத் துண்டித்த கணவன் இந்தியாவுக்குத் தப்பியோட்டம்

சிங்கப்பூர், ஜூலை 30
சிங்கப்பூரில் தனது மனைவியின் தலையைத் துண்டாக்கிவிட்டு, இந்தியாவுக்குத் தப்பியோடிய கணவரை சர்வதேச பொலிஸார் தேடி வருகின்றனர்.
சிங்கப்பூரின் பேலஸ்டியர் சாலையில் உள்ள குடியிருப்பில் வசித்து வந்தவர் ஜேஸ்வின்டர் கவுர். அழகுக்கலை நிபுணரான கவுரின் கணவர் ஹார்விந்தர் சிங். அங்குள்ள நிறுவனமொன்றில் சரக்குப் பொருள் கையாளுவதில் ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்து வந்தார். அவருக்கும் அவரது மனைவிக்கும் கருத்துவேறு பாடு காரணமாக அடிக்கடி சண்டை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.
இந்த நிலையில் தம்பதியினருக்கிடையே ஒரு நாள் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ஆவேசமடைந்த ஹார்விந்தர் சிங் மனைவியைப் பலமாக அடித்தார். இதனால் நிலைகுலைந்த கவுர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அதிர்ச்சியடைந்த ஹார்விந்தர், மனைவியின் உடலை அப்புறப்படுத்த நினைத்தார்.
அதற்காக தனது சக இந்திய நண்பரின் உதவியை நாடிய ஹார்விந்தர், கவுரின் தலையைத் துண்டித்து அங்குள்ள கால்வாயில் வீசியுள்ளார். பின்னர் சிங்கப்பூரில் இருந்து அவர் இந்தியாவுக்குத் தப்பியோடியுள்ளார். 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தக் கொலை வழக்கில் தற்போது ஹார்விந்தர் சிங் குற்றவாளி என சிங்கப்பூர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. கொலை வழக்கில் உதவிய ஹார்விந்தரின் நண்பருக்கு 30 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மனைவியைக் கொலை செய்து இந்தியாவுக்கு தப்பியோடிய ஹார்விந்தரை கண்டுபிடிக்க உதவுமாறு சர்வதேச பொலிஸாரின் உதவியை சிங்கப்பூர் அரசு நாடியுள்ளது. (ஐ)

# அமெ. இணைகிறது துருக்கி

வொஷிங்டன்,ஜூலை 30
சிரியாவின் வடக்குப் பகுதியில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்ட அமெரிக்கா மற்றும் துருக்கி இணைந்து போராடவுள்ளதாக இரகசியத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவின் வடக்குப் பகுதியைக் கைப்பற்றி அங்கிருந்தவாறு சிரியா– துருக்கி எல்லையிலும் நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இது வரை ஐ.எஸ் தீவிரவாதிகள் விவகாரத்தில் தலையிடத் தயக்கம் காட்டி வந்த துருக்கி தற்போது அவர்களுக்கு எதிராகப் போரிட முடிவு செய்துள்ளது.
மேலும் அமெரிக்கப் படைகள் துருக்கியின் தளங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பாக அமெரிக்காவின் அதிகாரி ஒருவர் கூறியதாவது,
அமெரிக்கா மற்றும் துருக்கி என்பன இணைந்து சிரியாவின் வடக்குப் பகுதியில் இருந்து ஐ.எஸ் தீவிரவாதிகளை விரட்டுவதற்கு முடிவு செய்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் துருக்கி அரசு குர்திஷ் வீரர்களை ஒடுக்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# அப்துல் கலாமுக்கு ஒபாமா புகழாரம்

வொஷிங்டன், ஜூலை 30
மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு ஊக்க சக்தியாக திகழ்ந்தவர் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.
அப்துல் கலாமின் மறைவை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அப்துல் கலாம் உள்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் மதிப்பு மிக்கத் தலைவராக விளங்கினார். இந்திய–அமெரிக்க நல்லுறவு பலப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்பி அதற்கான ஒத்துழைப்பை நல்கினார். இரு நாடுகளுக்கிடையிலான விண்வெளி ஆய்வு கூட்டு முயற்சிகள் விரிவாக்கம்பெறஅவர் பெரிதும் பாடுபட்டார்.
இந்தியாவின் பதினொன்றாவது ஜனாதிபதியாக அவர் பதவி வகித்த காலகட்டத்தில் இந்திய–அமெரிக்க நல்லுறவு அபரிமிதமான வளர்ச்சியை பெற்றிருந்தது. அப்துல் கலாமின் தன்னடக்கமும், எளிமையும், பொதுச் சேவைக்கான அவரது அர்ப்பணிப்பும் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள அனைத்து ஆர்வலர்களுக்கும் உந்து சக்தியாக விளங்கியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஐங்கரன் மீடியா சொலுாஷன் (பிரைவேட்) லிமிடட்
பெருமையுடன் வழங்கும்
யாழ் மண்ணில் மகளிர்க்கான இலவச செயலமர்வு
- சமையற்கலை
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்கார குறிப்புகள்
- ஆரோக்கிய குறிப்புகள்
- போட்டி நிகழ்ச்சிகள்
- இன்னும் பல......
மகளிர் மட்டும்
Women's Only
பிரபல சமையற்கலை நிபுணர் திருமதி. மல்லிகா ஜோசப்
பிரபல அழகுகலை நிபுணர் திருமதி. சுரேகா (Sureka Beauty Saloon - Colombo)
ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்
நாளை 31ம் திகதி காலை 10 மணி முதல் 2 மணி வரை
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்
பங்குபற்றுபவர்கள் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள்
அனுமதி இலவசம்
பிரதான அனுசரணை
Knorr Astra LUX
இணை அனுசரணை
Anlene Little Asia Wellawatte | Main Street Millennium Guest House Jaffna
ஊடக அனுசரணை

2015 | ஜூலை 30 | வியாழக்கிழமை | உதயன்

# 10 வயதுச் சிறுவனின் தலை துண்டித்து நரபலி

## நேபாளத்தில் கொடூரம்



காத்மண்டு,ஜூலை 30

நேபாள நாட்டின் தென்மேற்குப் பகுதியில், குடியா என்ற கிராமத்தில் 10 வயதுச் சிறுவன் ஒருவனை மந்திர வாதியின் பேச்சைக் கேட்டு நரபலி கொடுத்த கொடூரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. குறித்த கிராமத்தில் நோய் வாய்ப்பட்டிருந்த தனது மகனை மந்திரவாதியிடம் அழைத்துச் சென்றுள்ளார் ஒரு குடும்பஸ்தர். அந்த மந்திரவாதி மகனின் நோய் குணமடைவதற்கும் அவனுக்குள் இருக்கும் ஆவியை விரட்டுவதற்கும் சிறுவன் ஒருவனை நரபலி கொடுக்க வேண்டும் என பரிகாரம் கூறியுள்ளார். இதனை நம்பிய குடும்பஸ்தர் தனது கிராமத்தைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவன் ஒருவனுக்கு பணம் தருவதாக ஆசை காட்டி, கையில் பிஸ்கெற்றையும் கொடுத்து மந்திர வாதியிடம் அழைத்துச் சென்றுள்ளார். மந்திரவாதி அந்தச் சிறுவனின் தலையைத் துண்டித்து நரபலி கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் ஜீவன் கோகர் என்ற அந்தச் சிறுவனை 3 நாள்களாகக் காணவில்லை என அவனது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளனர். இதனை அடுத்து பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்போது வயல்கரையோரமாக சிறுவன் ஒருவனது சடலம் தலை வேறு முண்டம் வேறாக கிடைத்ததைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். அது தொடர்பான விசாரணையில் அது காணாமற்போன அந்தச் சிறுவனின் உடல்தான் என்பதை பெற்றோர் அடையாளப்படுத்தினர். தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் தனது மகனுக்காக மந்திரவாதியின் பேச்சைக் கேட்டு சிறுவனைக் கடத்திச் சென்று நரபலி கொடுத்தமை தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய 11 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# புதைக்கப்பட்ட 129 உடல்கள் கண்டுபிடிப்பு

## மெக்ஸிக்கோவில் பரபரப்பு



மெக்ஸிக்கோ,ஜூலை 30

மெக்ஸிக்கோவில் காணாமற்போன மாணவர்களைத் தேடிய பொலிஸார் அந்தப்பகுதியில் மர்மமான முறையில் புதைக்கப்பட்டிருந்த 129 உடல்களைக் கைப்பற்றியுள்ளமை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 10 மாதங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்தத் தேடுதல் வேட்டையில் 60 இரகசியக் கல்லறைகளையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்த அந்த உடல்கள் கல்லூரி மாணவர்களது உடல்கள் அல்ல என்றும், அவை சம்பவத்துடன் தொடர்பில்லாத உடல்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் இக்குவாலா பகுதியில் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்ட 48 மாணவர்கள் திடீரென காணாமற்போய் இருந்தனர். இந்த மாணவர்களைப் போதைக் கடத்தல் கும்பல் கடத்திச் சென்று கொலைசெய்த பின்னர் உடல்களை எரித்திருக்கலாம் என முன்பு விசாரணை அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்திருந்தனர்.

கறெரோ பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கானோர் காணாமற்போன நிலையில், மர்மக் கல்லறைகளைப் பொலிஸார் கண்டுபிடித்திருப்பது அந்தப்பகுதி மக்களிடையே பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது. மெக்ஸிக்கோ முழுவதும் இருபதாயிரத்துக்கும் அதிகமானோர் இது வரை காணாமற்போனவர்களின் பட்டியலில் உள்ளனர்.

இந்த நிலையில் காணாமற்போன கல்லூரி மாணவர்கள் குறித்த விசாரணையில் தங்களுக்கு உரிய நீதி வேண்டும் எனக்கேட்டு உறவினர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பல்வேறு கட்டப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். (ஐ)



# மெர்ஸ் வைரஸ் கட்டுப்பாட்டில்

## தென்கொரிய பிரதமர் அறிவிப்பு

சியோல், ஜூலை 30

கடந்த இரண்டு மாதங்களாக தென் கொரியாவை ஆட்டிப்படைத்து வந்த மெர்ஸ் வைரஸ் தாக்குதலில் இருந்து முழுமையாக விடுதலை பெற்றுவிட்டோம் என்று தென்கொரியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த நோய் பரவத் தொடங்கியது. மெர்ஸ் என்ற கொடிய வைரஸ் நோய்த்தாக்கத்தால் மொத்தமாக 36 பேர் உயிரிழந்துள்ளனர். 187 பேர் நேரடி நோய்த் தாக்குதலால் பாதிப்புற்றனர். மேலும் வைரஸ் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கலாம் என்று கரு தப்பட்ட 17 ஆயிரம் பேர் தனிமைப் படுத்தப்பட்டனர். ஆனால் கடந்த 4 ஆம் திகதி முதல் புதிதாக எவரும் மெர்ஸ் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை. இந்த நிலையில் தென் கொரியப் பிரதமர் ஹவாங்க ஆன் பொதுச் சுகாதாரம் தொடர்பான அரச கூட்டத்தில் பேசும்போது "அரச மற்றும் சுகாதாரத்துறையின் கடும் முயற்சியின் விளைவாக மெர்ஸ் வைரஸ் முழுமையாக கட்டுப்படுத் தப்பட்டு விட்டது. இனி மக்கள் பதட்டப் படாமல் ஓய்வாக இருக்கலாம்" எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# கடாபி மகனுக்கு சாவுத் தண்டனை



கெய்ரோ, ஜூலை 30

லிபியாவில் அரசுக்கு எதிராக அமைதியான முறையில் நடந்த போராட்டங்களை ஒடுக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் சர்வாதிகாரி கடாபியின் மகன் சயீப் அல் – இஸ்லாமுக்கு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சாவுத் தண்டனை விதித்துள்ளது.

லிபியாவில் கடந்த 1969 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டுவரை சர்வாதிகாரியாக இருந்து ஆட்சி செய்தவர் கடாபி. 2011ஆம் ஆண்டு கிளர்ச்சிப்படையினரால் அவர் பதவியில் இருந்து விரட்டப்பட்டார். அதைத் தொடர்ந்து அவரைக் கிளர்ச்சிப்படையினர் பிடித்துச் சுட்டுக் கொன்றனர்.

அதன் பின்னர் கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டு, அவர் உள்ளிட்ட பலர் மீது லிபிய நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் கடாபியின் மகன் மற்றும் கடாபியின் உளவுத்துறைத் தலைவராகச் செயற்பட்ட அப்துல்லா அல்–செனுசி, முன்னாள் பிரதமர் பக்தாதி அல்–மஹ்மூதி ஆகியோருக்கு நேற்று சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (ஐ)

# மோசடிப் பணத்தில் வெளியார் லண்டனில் சொத்து வாங்கத் தடை

## பிரதமர் கமரூன் அதிரடி நடவடிக்கை



லண்டன், ஜூலை 30

கொள்ளை மற்றும் பண மோசடி மூலம் சேர்ந்த பணத்தைக் கொண்டு பிரிட்டனில் சொத்துக்களைக் கொள்வனவு செய்ய வெளிநாட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும் எனப் பிரதமர் கமரூன் அறிவிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரிட்டன் பிரதமரான டேவிட் கமரூன் மற்றும் அந்த நாட்டைச் சேர்ந்த 31 தொழிலதிபர்களும் மலேசியா, இந்தோனேஷியா, வியட் நாம் உள்ளிட்ட தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

சிங்கப்பூரில் அந்த நாட்டின் பிரதமருடன் மேற்கொள்ளவுள்ள பேச்சின் போது பிரதமர் கமரூன் இந்த அறிவிப்பை வெளியிடுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகம் முழுவதும் கொள்ளை மற்றும் பண மோசடிகளில் ஈடுபட்டு அதன் மூலம் பெறப்பட்ட ஊழல் பணத்தைக் கொண்டு பிரிட்டனில் வீடுகள் மற்றும் சொத்துக்களை வாங்குவது அதிகரித்து வருகிறது.

அந்நிய நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள், தமது ஊழல் பணத்தைச் சேமித்து வைக்கும் ஒரு சொர்க்கமாகப் பிரிட்டன் மாறுவதைத் தடுக்க வேண்டும். லண்டன் நகரில் சுமார் 36 ஆயிரம் சொத்துக்கள் உட்பட நாடு முழுவதும் சுமார் ஒரு லட்சம் சொத்துக்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் நபர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் சொத்துக்களின் மதிப்பு மட்டும் சுமார் 122 பில்லியன் பவுண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் அல்லது அடுத்த வருட தொடக்கத்தில், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் சொத்துக்கள் குறித்த பட்டியலை அதிகாரபூர்வமாக வெளியிட உள்ளதாக பிரதமர் கமரூன் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நேபாளத்தில் மீண்டும் நில அதிர்வு

நேபாளத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தின் பின்னர் அங்கு மீண்டும் ஒரு நில அதிர்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்டுள்ளது.

இந்த நில அதிர்வு 4.1 ரிக்டர் அளவு கோலில் பதிவானதாக தேசிய நில அதிர்வு ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக கடந்த மே மாதம் ஏற்பட்ட மற்றொரு சக்தி வாய்ந்த நில அதிர்வாலும் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக, 359 நில அதிர்வுகள் அந்தப் பகுதியில் பதிவு செய்யப்பட்டன. இந்த நிலையில், அந்த நாட்டின் சிந்துபால்செக் மாவட்டத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை காலை நில அதிர்வு ஏற்பட்டதாகத் தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# மூன்று லட்சம் பேர் வெள்ளத்தால் பாதிப்பு

## பாகிஸ்தானில் துயரம்



இஸ்லாமாபாத், ஜூலை 30

பாகிஸ்தானில் பெய்த கனமழையால், ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி, 81 பேர் உயிரிழந்துள்ளதுடன், மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில், கடந்த வாரம் முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால், பெரும்பாலான இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளநீர் ஊருக்குள் புகுந்ததில், ஆயிரத்து 855 வீடுகள் நீரில் மூழ்கின. 2 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட விவசாயப் பயிர்கள் சேதமடைந்தன. தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி, இதுவரை, 81 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களை மீட்டு, பாதுகாப்பான பகுதியில் குடியமர்த்தும் பணியில், இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# விளம்பர உத்திகளில் சமூக நன்மையை அன்றே புகுத்தியவர் கனகராசா

என்.செல்வராஜா,
நூலகவியலாளர், லண்டன்

நாடெங்கும் லிவர் பிரதர்ஸ் என்ற பெரும் பன்னாட்டு நிறுவனத்தின் சவர்க்கார இராச்சியம் கோலோச்சியிருந்த வேளையில், ஈழத்தின் வடபுலத்தில் 1927களிலிருந்தே சவர்க்காரத் தயாரிப்பை குடிசைக் கைத்தொழிலாகத் துணிச்சலுடன் முன்னெடுத்தவொரு பரம்பரையின் வழிவந்தவர் சிவநெறிப் புலவர் அமரர் வீ.மு.கந்தையா பிள்ளை கனகராசா. மில்க்வைற் கனகராசா என்றால் தெரியாதவர் எவருமில்லை என்ற நிலைக்குத் தனது சவர்க்கார உற்பத்தியின் மூலமும், தனித்துவமான அதன் விநியோக வலையமைப்பின் மூலமும், பல்வேறு சமூக சேவைகளின் மூலமும் உயர்ந்து, வாழ்ந்து மறைந்தவர் அவர்.

வடபுலத்தில் உருவாகிய விரல் விட்டு எண்ணக்கூடிய கைத்தொழில் நிறுவனங்களுள் நீண்ட காலம் நிலைத்து நின்றதொரு தொழிற்சாலை இவருடையது. இன்று உலகளாவிய ரீதியில் வர்த்தக நிறுவனங்கள் மேற்கொள்ளும் விளம்பர உத்திகளை அந்த நாள்களிலேயே தமிழ்ப் பிரதேசங்களில் பரீட்சித்து அறிமுகப்படுத்தியவர்.

கல்வித்துறையின் வாசிப்பு விருத்திக்கும், சமயப் பணிக்கும் இவர் ஆற்றிய பங்களிப்பு விளம்பர நோக்கம் கொண்டவை என்று ஒரு காலகட்டத்தில் கருதியவர்கள் பலர் இருந்தனர். இன்று உலகமயமாதலில் மூழ்கியிருக்கும் எமது புதிய தலைமுறையினருக்கு இவரது அந்த நாளைய விளம்பரநோக்கங்கள், சமூக நன்மையையும் முன்னெடுத்துச் செல்லும் உத்திகளைக் கொண்டிருந்ததென்பதை ஒப்பீட்டறிய அதிக சிந்தனை தேவைப்படாது. அமரர் கனகராசாவின் வர்த்தக விளம்பர உத்திகள் தனியான ஆய்வுக்குரியவை.

கடந்த 22ஆம் திகதிஅன்று அவர் மறைவின் 17ஆவது வருட பூர்த்தியை நினைவுகூரும் முகமாக எனது மலரும் நினைவுகளைப் பதிவுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மில்க்வைற் செய்திகள் என்ற பெயரில் அறிவியல் மற்றும் குறுஞ்செய்திகளுடன் 70களில் ஒரு சிறுசஞ்சிகையை இலவசமாக வெளியிட்டவர் மில்க்வைற் கனகராசா. அதன் ஆசிரியராக அமரர் க.சி.குலரத்தினம் பணியாற்றினார். பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், நூலகங்கள், வாசிகசாலைகள் என்று அனைத்து அறிவுசார் சமூக நிறுவனங்களுக்கும் மில்க்வைற் செய்தி விநியோகிக்கப்பட்டது. தனது நீலநிற வாகனத்தில் பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என திக்விஜயம் செய்து, சிறு நூல்களையும், பொன்மொழிகள் தாங்கிய மில்க்வைற் விளம்பர அட்டைகளையும், மரக்கன்றுகளையும் இலவசமாக விநியோகித்தவர். மாணவர்களுக்குரிய வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலேயே வளர்த்தெடுக்கும் கனவைக் கொண்டிருந்தவர். யோகாசனத்திலும், பாரம்பரிய உணவுப் பழக்கத்திலும் தன்னை ஈடுபடுத்தி, வாழும் சாட்சியமாகத் திகழ்ந்தவர்.

நான் சர்வோதய இயக்கத்தின் வடபிராந்திய நூலகராகப் பணியாற்றிய காலத்தில் எமது கிளை நூலகங்களுக்கு இவர் நூல்களையும் தளபாடங்களையும் அவ்வப்போது கொண்டுவந்து தருவதுண்டு. அக்காலகட்டத்திலேயே அமரர் கனகராசா அவர்களுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட் டது. பின்னர் அது நெருங்கிய பிணைப்பாக மாறியது. நூலகர்களை அவர் சமூகத்தின் கண்களாக மதித்தமையே இந்தப் பிணைப்பை நிரந்தரமாக்கியது எனலாம்.

விந்தையான இந்த மனிதரின் செயல்களும் அந்த நாள்களில் எனக்கு வியப்பாக இருந்ததுண்டு. கிராமப்புறப் பாடசாலைகளுக்குச் சென்று அங்கு கற்கும் சிறார்களிடம் பொழுதுபோக்காக பனம் விதைகளைச் சேகரித்துத் தரும்படி வேண்டுவார். அவ்வாறு சேகரித்துப் பெறப்படும் பனம்விதைகளுக்கேற்ப சவர்க்காரமோ, புத்தகங்களோ அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கும். அதனைத் தான் விநியோகத்திற்காகச் செல்லும் வெளி இடமெங்கும் தெருவோரத்தில் தன்னிச்சையாக விதைத்துச் செல்வார். இன்று யாழ்ப்பாணத்துக்கு அப்பால் கொழும்பு, வன்னி நோக்கிய தரைப் பாதையோரங்களிலெல்லாம் எறிகணைகளுக்குச் சிக்காமல் ஓங்கிவளர்ந்து நிற்கும் பனைமரங்கள் இவரது சமூகப்பணிகளை எமக்கு அடிக்கடி நினைவூட்டுகின்றன. அவரது இல்லத்தில் எப்போதும் பனம் விதைகளுடன் தென்னை, வேம்பு, நெல்லி போன்ற பல பயன்தரு மரக்கன்றுகளும் இலவச விநியோகத்துக்கு ஆயத்தமாகக் காணப்படும்.

ஒரு தடவை உயிர் இரசாயனத் துறையில் ஈடுபாடுகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்தி ஜீவியான பேராசிரியர் பொன். நவரட்ணம், தினகரன் பத்திரிகையின் நேர்காணலின்போது (3.10.2010 இல் வெளிவந்தது) மில்க்வைற் சோப் உரிமையாளர் கனகராசாவின் உந்துதலினாலேயே பனம் பழங்களைத் ஆராய்ச்சிக்கு முதலில் உட்படுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். யாழ். மண்ணில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் பனம்பழங்களில் உள்ள நுண்ணங்கிகளின் நொதியச் செயற்பாட்டினால் தோன்றும் துர்நாற்றம் வளியையும் நொதிப்புப் படிமுறை செயற்பாட்டால் உருவாகும் பலவகை சேதன அமிலங்கள் மண்ணையும், மழை காலங்களில் நீருடன் கலந்து நீர் நிலைகளையும் மாசடையச் செய்கின்றதெனக் கூறிய இப்பேராசிரியர், இந்த மாசடைதலைத் தடுக்க பனம்பழங்களில் உள்ள வெல்லத்தை நீர்க் கரைசலாகப் பிரிக்கும் முறையைப் பின்னாளில் அறிமுகப்படுத்தியவர். திண்ம மீதியை உலரவைத்து தூளாக்கி வில்லைகளாகவோ கூட்டு வில்லைகளாகவோ நோயாளிகளுக்கு வழங்குவதன் மூலம் அதிலுள்ள கரையும் நார்களினால் குருதியில் உள்ள கொழுப்பு, வெல்லம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம் என்ற உயர்தொழில்நுட்ப முறையை விஞ்ஞான உலகுக்குத் தொட்டுக்காட்டியதற்காக சிலாஸ் விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் கலாநிதி சுமதிபால அவர்களால் தேசிய உயர்விருது வழங்கப்பட்டு பேராசிரியர் பொன் நவரட்ணம் கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.



> யாழ். மண்ணில் கவனிப் பாரற்றுக் கிடக்கும் பனம்பழங்களில் உள்ள நுண்ணங்கிகளின் நொதியச் செயற்பாட்டினால் தோன்றும் துர்நாற்றம் வளியையும் நொதிப்புப் படிமுறை செயற்பாட்டால் உருவாகும் பலவகை சேதன அமிலங்கள் மண்ணையும் மழை காலங்களில் நீருடன் கலந்து நீர் நிலைகளையும் மாசடையச் செய்கின்ற தெனக் கூறும் இப்பேராசிரியர், இம்மாசடைதலைத் தடுக்க பனம்பழங்களில் உள்ள வெல்லத்தை நீர்க் கரைசலாகப் பிரிக்கும் முறையைப் பின்னாளில் அறிமுகப்படுத்தியவர்.

இணுவில் அண்ணா தொழிலகத்தை நிறுவி வெற்றிகரமாக வளர்த்து வந்தவர் அண்மையில் அமரத்துவமடைந்த பொ.நடராசா அவர்கள். இவர் யாழ். உதயன் பத்திரிகைக்கு 29.7.2014இல் வழங்கிய நேர்காணல் ஒன்றில் ஆரம்பத்தில் இருந்தே மில்க்வைற் அதிபர் கனகராசாவுடன் நல்லதொரு தொடர்பினைப் பேணிவந்திருந்தேன். அவர் எனது வறுமை நிலையை நன்கு உணர்ந்து பலவகையிலும் உதவினார். அண்ணாமலைப் பரியாரியாரின் நினைவாக அண்ணாமலை ஆயுள்வேதப் பற்பொடியை விநியோகித்து வந்த என்னிடம் கோப்பி தயாரித்து சந்தைப்படுத்தவதற்கான எண்ணத்தை அவரே எனக்கு ஊட்டியதுடன் கோப்பி தயாரிக்கும் வழிமுறைகளையும் கற்றுத்தந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பலரின் வெற்றிகளுக்குப் பின்னால் அமரர் கனகராசாவின் உழைப்பும் சிந்தனையும் மறைந்துள்ளன.

அவ்வப்போது சிரமதானப் பணிகளின் மூலம், தூர்ந்துபோயிருந்த குளங்களையும் பொதுக் கிணறுகளையும் கிராமத்துத் தொண்டர்களின் உதவியுடன் செப்பனிட்டு மழைநீரைச் சேமிக்கும் பணிகளையும் இவர் மேற்கொண்டிருந்ததை பலரும் அறிந்திருக்கமாட்டார்கள்.

80களின் நடுப்பகுதிகளில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் ஒன்று உருவாக்கப்பட்டு யாழ். மாவட்டத்திலிருந்த 334 சனசமூக நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஆக்கபூர்வ அறிவியல், சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த வேளையில் யாழ்–கொட்டடிப் பிரதேசத்தில் அதன் இணைப்பு அலுவலகத்தில் நூலகப் பயிற்சி அளிப்பதற்கும், நூல்வங்கி என்ற எனது சிந்தனையில் கருக்கொண்டதொரு கிராமிய நூல்விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கும் எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது. சனசமூக நிலையங்களின் நூலக வளர்ச்சியை நோக்கிய எனது கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க அன்று வாய்ப்பளித்தவர் அமரர் கனகராசாவின் பெறாமகனும், பின்னாளில் அவரது நிறுவனத்தை நிர்வகித்தவருமான தவகோபால் அவர்களாவார். தவகோபாலின் மூலம் அமரர் கனகராசாவின் நேரடி உதவிகள் இந்தத் திட்டத்திற்குக் கிடைத்ததுடன், அவருடன் மேலும் நெருங்கி உறவாடும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது.

பின்னாளில் இந்திய இராணுவ காலத்தில் யாழ்ப்பாணத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு சுந்தரம் திவகலாலா பணியாற்றிய வேளையில் யாழ். இந்துக் கல்லூரியில் ஒழுங்குசெய்யப்பட்ட ஈழத்து நூற்கண்காட்சியின் ஒழுங்கமைப்பு வேலைகளில் என்னையும் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் அமரர் கனகராசா வலிந்துவந்து எமக்கு உதவும் பொருட்டு தனது வாகனத்தையும் சாரதியையும் வழங்கியிருந்தார். தானாக முன்வந்து உதவும் பண்பு இவருக்கு இளவயது முதலே இருந்திருக்கிறது. 1958 கலவரத்தின் போது, யாழ்ப்பாணத்தில் பாரிய ஹர்த்தால்–கதவடைப்பு மேற்கொள்ள முயற்சி செய்யப்பட்ட வேளையில்– இனமான உணர்வுகொண்ட இளைஞனாக அன்று துண்டுப்பிரசுரங்களைத் தானே அச்சிட்டு விநியோகித்ததுடன் கடைகளை மூடுவித்து யாழ் வர்த்தகர்களை போராட்டத்தில் பங்கேற்கச் செய்ததாகவும், 1974இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு வேளைகளில், முழுநேரத் தொண்ட னாக இருந்து மாநாட்டின் பொறுப்பாளர்களுக்கு உதவியதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தம் (காந்தளகம்) அவர்கள் 2014இல் தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாடசாலைகளின் வளர்ச்சியிலும், பொதுவான வாசிப்புத்திறன் அபிவிருத்தியிலும் கரிசனைகொண்டிருந்த அமரர் கனகராசாவின் குறிப்பிடத்தக்க பணிகளிலொன்றாக அமைந்தது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வெள்ளிவிழாவையொட்டி அவரது நிதி உதவியால் கட்டப்பெற்ற வெள்ளிவிழா நினைவு மண்டபமாகும். இது 9.2.1978 அன்று திறந்துவைக்கப்பட்டது. இதையொட்டி வெளியிடப் பெற்ற மகாஜனன் வெள்ளிவிழா மலரில் மில்க்வைற் அதிபரின் வாழ்க்கைச் சரிதத்தை புலவர் நா.சிவபாதசுந்தரனார் விரிவாக எழுதியிருக்கிறார். இந்தக் கட்டுரை தனி நூலுருவிலும் மகாஜனக் கல்லூரி விடுதி மாணவர் ஒன்றியத்தினால் 9.2.1978இல் வெளியிடப்பட்டது.

ஒரு வர்த்தகராக, பொருளீட்டலிலேயே நோக்கம் கொண்டவராக அவர் இருந்திருந்தால், இன்று தனது நிறுவனத்தை மிக உன்னதமானதொரு நிலைக்கு இட்டுச் சென்றிருக்கக்கூடும். தானும் பெரும்பணக்காரனாக வாழ்ந்து மறைந்திருக்கக் கூடும். அனால் அவரது நோக்கம் வர்த்தக முதலீட்டை மாத்திரம் கருதியதாக இருந்திருக்கவில்லை– அறிவார்ந்த சமூக விழிப்புணர்வுடன் கூடிய சேவையும் அவரது நோக்கமாக இருந்திருக்கின்றது. அதுவே அவரது மறைவின் பின்னரான 17வது ஆண்டிலும் அவரது பணிகளை மீள்நினைவூட்டும் வாய்ப்பை எமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. எதிர்காலத்திலும் இது தொடரும்.

## பொலிஸார் கவனிப்பார்களா?

நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் யாழ்.பஸ் நிலையத்துக்கு அருகில் நின்றிருந்தேன். அப்போது பஸ் நிலையத்துக்கு எதிரே மின்சார நிலைய வீதியில் பலத்த சத்தம் கேட்டது. பார்த்தபோது இளைஞர்கள் சிலர் தமக்குள் முரண்பட்டுக் கொண்டு நிற்பது தெரிந்தது. அதில் இளைஞரொருவர் மற்றொரு இளைஞரை மிகக் கேவலமான வார்த்தைகளால் திட்டியவாறு விரட்டிக் கொண்டிருந்தார். விரட்டப் பட்ட இளைஞர் முகத்தில் பயத்தை தேக்கியவாறு பின் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அந்த இளைஞர் எதற்காக விரட்டப்பட்டார் என்பது எவ ருக்குமே புரியவில்லை. இந்தக் களேபரத்தை அங்கு நின்ற வெள் ளையர்கள் சிலரும் அவதானித்துக் கொண்டிருந்தனர். ஒரு பகிரங்க இடத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது அங்கு கூடி நிற்கும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இதேவேளை முக்கியமான அந்தப் பகுதியில் பொலிஸார் எவரையும் காணவில்லை. பொலி ஸார் நின்றிருந்தால் மேற்கண்ட சம்பவம் இடம் பெறாமல் தடுத்திருக்க முடியும். அத்துடன் மக்களுக் கும் பொலிஸார் இருக்கிறார்களே என்ற தெம்பு இருக்கும். ஆகவே இனியாவது பொலிஸார் இந்தப் பகுதியில் காவற்கடமையில் ஈடுபடுவது அவசிய மாகும்.

பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்தால் சண்டித் தனம் செய்பவர்களைக் கட்டுப்படுத்த முடியுமென்ற நம்பிக்கை மக்களிடத்தில் உள்ளது. அவர்களது பாதுகாப்பும் பொலிஸாரின் கைகளிலேயே உள்ளது. இந்த நிலையில் வீதியோரத்தில்அமைந்துள்ள மதகு களில் இளைஞர்கள் சிலர் அமர்ந்து வெட்டியாகப் பொழுது போக்குவதை அவதானிக்க முடிந்தது. இத்தகைய இளைஞர்கள் அடாவடித்தனங்களில் ஈடுபடமாட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தர வாதமும் இல்லை. ஆகவே பொலிஸார் வீதிக் கண் காணிப்பில் ஈடுபட்டு இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பொலிஸாரின் காத்திரமான நடவடிக்கைகள் சமூகத் தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு உதவும் என்பதில் ஐயமே இல்லை.

***ச.ராமச்சந்திரன், கொக்குவில்.***

## வாசகர் திருமுகம்



## வீதி ஒழுங்குகளை மீற வேண்டாம்

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலை யங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் வீதிகளில் சமாந்தரமாக சைக்கிளில் செல்லும்போது நான்கு அல்லது ஐந்து பேர் செல்வதால் ஏனையோர் வீதிகளில் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது.வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் உள்ள போதிலும் பிரதான வீதிகளிலும் சரி ஏனைய வீதிக ளிலும் சரி இவர்கள் வீதி முழுவதையும் விலைக்கு வாங்கியது போன்று உல்லாசமாக அரட்டை அடித்த வண்ணம் செல்வார்கள். இதனால் ஏனையவர்கள் நடந்தோ,வாகனங்களில் செல்லும்போதோ அவர் களை முந்திச் செல்லும்போது விபத்துக்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.பெரியவர்கள் வீதிக ளில் இவ்வாறு செல்ல வேண்டாம் எனக் கூறினால் அவர்களை எதிர்த்துப் பேசும் மாணவர்களையும் காண முடிகின்றது. தற்போது மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் சிறிய வீதிகளிலும்,பிரதான வீதிகளி லும் மிக வேகமாக செல்வதால் விபத்துக்கள் அதிக ரித்து வருகின்றன.அத்துடன் பாதசாரிகள் மஞ்சள் கோட்டில் வீதியைக் கடக்கும்போதும் வாகனத்தில் வருவோர் வேகத்தைக் குறைப்பதில்லை. வீதிகளில் நின்று அரட்டை அடிப்பவர்கள் நடு வீதிகளில் நின்று பகிடி வார்த்தைகள் மற்றும் அவதூறாக பேசுதல் போன்ற அநாகரிக செயற்பாடு களில் ஈடுபடுகின்றனர். எனவே வீதிகளில் பயணிப்போர் அவதானமாக இருப்பதுடன் வீதி ஒழுங்கு விதிகளையும் மதித்து நடக்க வேண் டும். இதனால் விபத்துக்களைத் தவிர்ப்பதுடன் அது பயணிகளுக் கும் நன்மை பயக்கும்.

***க.சுதர்சன்– மல்லாகம்.***

## ஏன் இந்த அவசரம்?

ஒரு சில மினிபஸ் நடத்துநர்கள் பயணிகள் பஸ்ஸினுள் ஏறும் போதும், பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கும்போதும் அவர்களை அவசரமாக ஏறி, இறங்குமாறு கூறுவதால் சிரமங்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக காங்கேசன்துறை வீதியில் ஒருசில நடத்துநர்கள் இவ்வாறு நடந்து கொள்வதை அவதானிக்க முடிந்தது. நானும் தினமும் மினிபஸ்ஸில் பயணம் செய்கின்றவன் என்பதால் எனக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டது. பஸ் தரிப்பில் பஸ் நின்றதும், இறங்க வேண்டிய பயணிகளை அவசரம் அவசரமாக இறக்கிய அந்த நடத்துநர் கீழே நின்ற நான், பஸ்ஸின் படியில் கால் வைப்பதற்கு முன்பாகவே றைற் சொல்லிவிட்டார். இதனால் நான் பஸ்ஸினுள் ஏறுவதில் சிரமத்தை எதிர்கொண்டேன். இந்த நடத்துநர் அன்றுமட்டுமல்ல தினமும் இந்தமாதிரியாகவே நடந்துகொள்வதை அவதானிக்க முடிந்தது.

இவரது அவசரம் காரணமாக வயதான பயணிகளின் நிலைதான் திண்டாட்டமாக மாறியுள்ளது. தப்பித்தவறி கீழே விழுந்துவிட்டால் இவர்களின் நிலை என்னவாகும் என்பதையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே மினிபஸ் நடத்துநர்கள் அவசரம் காட்டாது சற்று நிதானத்துடன் நடந்து கொண்டால் அது பயணிகளுக்கு நன்மை பயக்கும்.

***மு.மகாலிங்கம், கொக்குவில்***

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## இனவாதத்தை வளர்ப்பதே பலசேனாவின் நோக்கம்

ஜனவரி - 8 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோற்ற தற்குத் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் பல. அவற்றுள் ஒன்று பொதுபல சேனாவின் முஸ்லிம் எதிர்ப்பு நட வடிக்கைகள். முஸ்லிம்களின் வாக்குகள் தமக்குக் கிடைக்காது போகலாம் என்பதை மஹிந்த கவனத் தில் கொள்ளவில்லை. ஆனால் தேர்தல் தோல்வியின் பின்புதான் அவருக்கு யதார்த்தம் புரிந்தது. முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தனது வாக்கு வங்கி மோசமாக வீழ்ச்சி கண்டதற்கு பொதுபலசேனாவின் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள்தான் காரணம் என் பதைப் பின்பு மஹிந்த பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். ஒகஸ்ட் 17 பொதுத் தேர்தலில் பொதுபலசேனா அமைப்பு பொதுஜன முன்னணி என்ற பெயரில் நாகபாம்புச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுகிறது. அது கட்சி அமைத்துத் தேர்தலில் குதித்திருப்பதால் அதன் கொள்கை சிலசமயம் மாறலாம் என்று எதிர் பார்க்கப்பட்டது. புலி காடு மாறினாலும் அதன் புள்ளி மாறாது என்பார்கள். அதுபோல அதன் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள் ளன; தீவிரமடைந்து வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ் ஞாபனத்தை வைத்து தெற்கில் இனவாதம் பேசுகிறார் கள். ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் அமைப்பில் இலங்கை முஸ்லிம்கள் சிலர் இணைந்திருப்பதாக வெளிவந்த செய்திகளை வைத்து முஸ்லிம்களுக்கு எதிராக இன வாதக் கூச்சல் எழுப்புகிறார்கள். இலங்கை இனரீதியா கப் பிளவுபடவே தென்னிலங்கையின் இனவாத சக்திகள் வழி வகுக்கின்றன. தமிழ், முஸ்லிம் தீவிர வாதத்துக்கு இவை தீனி போடுகின்றன.

பொதுஜன முன்னணியின் தலைவரும் பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரியுமான திலந்த விதா னகே ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், இஸ்லாமிய தீவிரவாதத்தினூடாக சமூகப்பிரிவினை மற்றும் அடிப் படைவாதத்தைத் தூண்டும் சகல அமைப்புகளையும் தடைசெய்யக்கோரிக்கை விடுத்துள்ளார். உண்மையில் சமூகப்பிரிவினையையும் அடிப்படை வாதத்தையும் தூண்டுபவர்கள், வளர்ப்பவர்கள் பொதுபலசேனா அமைப்பினர்தான். இவர்களின் முஸ்லிம் எதிர்ப்பு நட வடிக்கையால் பாதிக்கப்படப் போகிறவர்கள் இம் முறையும் மஹிந்த தரப்பினரே. ஒகஸ்ட் 17 பொதுத் தேர்தலில் பொதுபலசேனா தனித்துப் போட்டியிட் டாலும் மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் அந்த அமைப் புக்கும் மஹிந்த ஆட்சியாளர்களுக்கும் இடையிலிருந்த நெருங்கிய உறவை இந்த நாட்டின் முஸ்லிம் மக்கள் அறி யாதவர்கள் அல்லர். தற்பொழுது பொதுபலசேனா அமைப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் அமைப்பை வைத்து சிங்கள மக்களுக்குப் பூச்சாண்டி காட்டி வருகிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்திருந்த கண்டியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர், சிரியாவில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்ததாக ஏற் கனவே செய்திகள் வெளியாகியிருந்தன. தற்பொழுது அந்த நபரது மைத்துனரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்துள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளி யாகியுள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் மட்டுமல்ல, ஹமாஸ் தீவிரவாத அமைப்புடனும் இலங்கை முஸ்லிம்களை இணைத்து சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மலேசியாவிலிருந்து இலங்கை வந்த இந்த நபர் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்ப தாகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய் திகளில் உண்மை இருக்கிறதோ, இல்லையோ இவற்றை ஊதிப்பெருப்பித்து முஸ்லிம்களுக்கு எதிரான இன வாதச் சிந்தனையை. சிங்கள மக்கள் மத்தியில் வளர்ப் பதே பொதுபல சேனாவின் உண்மையான நோக்க மாகும்.

இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இணைந்து சிங்கள மக்களுடன் அனுசரித்துப்போன வரலாறே முஸ்லிம் களுக்கு உண்டு. இதற்கு ஆப்பு வைத்தவர்கள் பொது பலசேனா அமைப்பினர்தான். இஸ்லாமிய தீவிரவாதத் தைத் தோற்கடிப்பது புலிகளைத் தோற்கடிப்பதைவிட கடினமானது என்பது தெரிந்தும், தமது முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் இவர்கள் இஸ்லாமிய தீவிர வாதத்துக்கு வழிதிறந்து விடுகிறார்கள். பொது பலசேனாவின் முஸ்லிம் எதிர்ப்பு நட வடிக்கைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப் பட வேண்டும்.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புகழ் பூத்த விஞ்ஞானியின் பூதவுடல் மறைகிறது

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே- நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்றே

ஔவை மூதாட்டியின் இந்தக் கருத்துக்கு பொருள் தர வல்லவராக, நல்லவராக வாழ்ந்து, நலமிக்க பேரறிவாளராகத் திகழ்ந்து, உலக மாந்தர்க்கெல்லாம் ஓர் உதார புருஷராக மிளிர்ந்து மறைந்த பெரியார் ஏ.பி.ஜே.அப்துல்கலாமின் பூதவுடல் நல்லடக்கம் இன்றைய தினம் தமிழ்நாட்டிலுள்ள அவரது சொந்த ஊரான இராமேஸ்வரத்திலுள்ள கிராமத்தில் நடைபெறுகின்றது.

இன்றைய உலகின் இளைஞர் சமுதாயத்தின் மீது அவருக்கு பெரும் நம்பிக்கை இருந்தது. எதிர்கால உலகம் விஞ்ஞானத்தின் உச்சங்களை தொட்டு, அதேநேரம் அமைதியாகவும், ஆபத்தில்லாமலும் வாழ்வதற்கு இன்றைய இளைஞர்களே காரணமாக இருக்கப்போகிறார்கள் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தார் அவர்.

இளைஞர்களே! கனவு காணுங்கள்அந்தக் கனவுகளை நனவாக்க இன்றே ஆயத்தமாகுங்கள் என்று அறைகூவல் விடுத்தவர் அந்தப் பெரியார்.

இந்திய நாடானது 2020ஆம் ஆண்டளவில் உலக வல்லரசாக உயர்ந்து விடும் என்று எதிர்வு கூறிய அந்தப்பெரியார் அதற்கான வழிமுறைகளை தொட்டுக்காட்டிச் செயற்பட்டதோடு நிற்காமல், அந்த வழியில் இளம் சமுதாயத்தினரை அணிவகுத்து நிற்கும்படியும் வலியுறுத்தினார். அதனால்தான் தாம் சென்ற இடங்களில் எல்லாம் பொதுநிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அதேவேளை இளைஞர்களை, கல்லூரி மாணவர்களைக் கண்டு பேசவும் அறிவுரைகள் வழங்கவும் அவர் தவறியதில்லை.

சமீப காலத்தில், இலங்கை நாட்டுக்கு இரு தடவைகள் வருகை தந்திருந்த அப்துல்கலாம், தமது இரண்டாவது வருகையின்போது கொழும்பில் கலந்து கொண்ட பொதுநிகழ்வில் சூரிய சக்தியின் பாவனை தொடர்பாக பல விஞ்ஞானபூர்வமான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். வீடுகள் தோறும் சூரிய மின்கலங்கள் பொருத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகளை விளக்குகையில், இந்த நடைமுறை உலகளாவிய முறையில் மேற்கொள்ளப்படும்போது ஏற்படும் நன்மைகளில் ஒன்றாக உலகில் கரியமிலப் பரவல் குறைவதுடன், இன்றைய படிம எரிபொருள் பாவனையால் ஏற்படும் செலவுகளும், சூழல் மாசடைதலும் அற்றுப்போகும் என்று எடுத்துக் கூறியிருந்தார். இது தொடர்பாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீண்டகாலத் திட்டங்களையும் விளக்கினார். இலங்கையிலும் அது கடைப்பிடிக்கப்படுவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

மாணவர்கள் மத்தியில் அவர் உரை நிகழ்த்திய போது தாம் பிறந்து வளர்ந்த பின்தங்கிய தீவு எவ்வாறு உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி மேன்மையடைந்தது என்பதை மிக எளிமையாக விளக்கினார்.

அது எரிமலை, சூறாவளி மற்றும் வெந்நீர் ஊற்றுக்களுக்கு பேர் போனது. நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி எரிமலைகள் செயற்படும் மற்றும் சூறாவளி வீசும் காலங்களை முன்கூட்டியே அறிந்து அதற்கேற்ப தம்மை அங்குள்ள மக்கள் தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள். வெந்நீர் ஊற்றுக்களில் கிடைக்கும் நீராவியையும், வெப்பத்தையும் பயன்படுத்தி தங்களது மின்சாரத் தேவை போன்றவைகளை பூர்த்தி செய்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்றார்.

இந்தியாவின் மிகஉயர் பதவியான ஜனாதிபதியின் ஆசனத்தை அலங்கரித்தவரான, அந்த நாட்டின் ஏவுகணை சகாப்தத்தின் தந்தையாகக் கருதப்படும் விஞ்ஞானி அப்துல்கலாம் பொக்ரான் அணு ஆயுத சோதனையின் போதும் பெரும்பங்களித்திருந்தார்.

தமிழ் மொழிப் பற்றாளராகத் திகழ்ந்த அப்துல் கலாம் பல நூல்களின் ஆசிரியராகவும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும், வேந்தராகவும் திகழ்ந்துள்ளார். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் ஏராளமான பட்டங்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய அந்தப் பெரியார், சொந்த வாழ்வில் மிக எளிமையான நடைமுறைகளையே பின்பற்றி வாழ்ந்தார்.

அவரைப் பற்றி எழுதுவதாயின், அவர் காலமாவதற்கு சற்று முன்னரும்கூட, தமது பிரயாணத்தின்போது பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த காவலரை அழைத்துப் பாராட்டி வாழ்த்தினார் என்று அறியும்போது, அந்தப் பெரியாரின் பெருமையும் எளிமையும் ஆச்சரியப்பட வைக்கின்றது.

இந்திய குடியரசின் பாரத பூஷண் பாரத விபூஷண் பட்டங்களுடன் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதும் அளித்து கௌரவிக்கப்பட்டிருந்த அந்தப் பெருமகனின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

# தமிழ் மக்களின் வினாக்களுக்கு ஐ.தே.கவின் பதில் என்ன?



“ரணில் நினைப்பது போல் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ் மக்கள் நம்பப் போவதில்லை. மஹிந்த அரசின் நிலைப்பாட்டிலிருந்து பெருமளவில் வேறுபடாதவரான ரணில், தமிழ் மக்களுக்குரிய நியாயமான தீர்வை ஒரு போதுமே தரமாட்டார்.

மு.தமிழ்மணி

நாட்டின் 15ஆவது பொதுத் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றத்துக்கான ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தென்னிலங்கையில் ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் கட்சிகளின் தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, புதிய நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி. ஆகிய மூன்று கட்சிகளுமே தத்தமது தேர்தல் பரப்புரைகளை முடுக்கி விட்டுள்ளன.

போர் முடிந்த பின்னர் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக திடமான நம்பிக்கையோடு எந்த விதமான கருத்துக்களை உள்ளடக்கியதாக தேர்தல் விஞ்ஞாபனம் அமையப் போவதில்லை என்ற உண்மை தமிழ் மக்களுக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுயாட்சி சம்பந்தமான கருத்தை பாதகமானதாகவே கொண்டுள்ளனர். சுயாட்சி, சமஷ்டி எதையுமே வழங்கப்போவதில்லை என்றவாறு முக்கிய அமைச்சரான ராஜித சேனாரத்னவும், பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் காலப் பரப்புரைகளை நடத்தி வருகின்றனர். ஈழத்தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த காலப்பகுதியில் ஒரு போதுமே முன் வந்ததில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் மிகப் பழைமையான கட்சியாகும். அந்தக் கட்சியில் யார் தலைமை வகித்தாலும் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிட்டப்போவதில்லை என்பதே வரலாறு சொல்கின்ற பாடமாகும். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் செய்துள்ள தவறுகள் ஏராளமுண்டு. துரோகங்களுமுண்டு. இவைகள் யாவும் சாதாரணமானவையல்ல. தமிழ் மக்களால் எளிதில் மறந்து விடக்கூடியவையுமல்ல இன்றைய இலங்கை நாடு அரசியல் ரீதியிலும், இனப் பிரச்சினை ரீதியிலும் சிக்கிச் சீரழிவதற்கு ஆரம்பப் புள்ளிகளை உருவாக்கியதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கிய பங்குண்டு.

இன்றைய பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க 2012 மே மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அப்போது தமிழர் பிரச்சினை சம்பந்தமாக சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இலங்கையில் இப்போது இருக்கின்ற ஆட்சி மாறினால் மட்டுமே தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும். போருக்குப் பின்னர் விரைவில் அரசியல் தீர்வு எட்டப்படும் என்று மஹிந்த அரசு காலத்துக்குக் காலம் கூறிவருகின்ற போதிலும் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இன்றுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்த அரசு, ஒரு போதும் அரசியல் தீர்வை பெற்றுத் தரப்போவதில்லை. வடபகுதி மக்கள் பெரும் சுமையுடன், அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். என்றவாறு தமிழ் மக்கள் மீதுள்ள அனுதாபத்தையும் பற்றையும் வெளிப்படுத்துவதுபோல் தனது வார்த்தைகளை வெளியிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாணவருகையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கூட்டு மே தினத்தை நடத்துவதையும் வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியமர்வு சம்பந்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளவதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தது. ரணில் அப்போது மேற்கொண்ட வருகையின் உள்நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சியே தமிழ் மக்களின் அரசியல் நண்பன் என்ற செய்தியை இவற்றின் மூலம் தமிழ் மக்களுக்கு தெரிவிப்பதற்காகவே என்பதை அனைவரும் அறிவார்கள்.

ரணில் நினைப்பது போல் ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ் மக்கள் நம்பப் போவதில்லை. மஹிந்த அரசின் நிலைப்பாட்டிலிருந்து பெருமளவில் வேறுபடாதவரான ரணில் தமிழ் மக்களுக்குரிய நியாயமான தீர்வை ஒருபோதுமே தரமாட்டார். 1995ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்தவரான சந்திரிகா குமாரதுங்க தீர்வுத்திட்டம் ஒன்றைக் கொண்டுவந்த போது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் அநாகரிகமான முறையில் அதை எதிர்த்ததுடன் அதற்கான காரணத்தை ரணில் விக்கிரமசிங்க தெளிவாகவே கூறியிருந்தார். சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் பிராந்திய சபைகளை உருவாக்குவதாலேயே தாம் அதை எதிர்த்ததாக சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டியளித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய தலைவரான ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் நண்பனாக தன்னை இனம்காட்டிக் கொள்ள முயலும் அதேவேளையில் தென்னிலங்கையில் சிங்களக் கடும்கோட்பாட்டு வாக்கு வங்கியை இலக்கு வைத்துச் செயற்படுகின்றார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கத்தையும் அவர் தலைமை வகித்த கட்சியையும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் பயங்கரவாத முத்திரை குத்தி நாட்டைவிட்டே தப்பி ஓடவைத்தமை, வடக்கு– கிழக்குதமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து முஸ்லிம் சமூகத்தவரிடையே பகைமையையும், பேதங்களையும் வளர்த்தமை, தமிழ் மக்களை மிக மோசமான முறையில் கட்டுப்படுத்துவதற்கு அவசரகாலச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம், கடல் வலயச் சட்டம் போன்றவற்றை கடுமையாக நடைமுறைபடுத்தியமை, இலங்கை இந்திய உடன்படிக்கையை மேற்கொண்டு இந்தியப் படையினரை வரவழைத்து ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்றொழித்தமை என்பவை ஐ.தே.கட்சியின் சாதனைகளாகும்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காகவே புரிந்துணர்வு உடன்படிக்கையையும், போர் நிறுத்தத்தையும்தானே உருவாக்கியதாகவும், ரணில் முன்னர் கூறியிருந்தார். புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்ததும் தானே என்றும் இதன் மூலம் கிழக்கை இலகுவாக அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்ததென்றும் கூறியிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனவரி எட்டாம் திகதிக்குப் பின்னர் தமிழ் மக்கள் மீது வாஞ்சையுள்ளவர் போல் காட்டிக்கொண்டாலும் தமிழ் மக்கள் மீதான தீர்வுக்கு சாதகமானதொரு வழியை தமிழ் மக்கள் முன்பாக வெளிப்படுத்துவாரா? 2013இல் மஹிந்த ராஜபக்ஷ தமிழர்கள் மீதான அரசியல் தீர்வுக்கு சம்மதிக்கமாட்டார் என்று கூறிய ரணில், தமிழர் பிரச்சினைகளை முழுமையாகத் தெரிந்து கொண்டாலும் தன்னாலும் தீர்க்க முடியும் என்ற கூற்றுக்கு இணங்கி வருவாரா? தான் ஆட்சிக்கு வருகின்றபோது மாற்றங்களையும், தீர்வுகளையும் முன்வைப்பேன் என்று அன்று கூறினார். எத்தகைய மனஉறுதிப்பாட்டுடன் ரணில் வாக்குறுதிகளை வழங்குகின்றார்? என்பது தெரியவில்லை.

சுயாட்சியையோ, சமஷ்டியையோ வழங்கமாட்டேன், படைக் குறைப்புக்களை செய்யமாட்டேன், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் பேசவேமாட்டேன் என்றெல்லாம் கூறுகின்ற ரணில் வேறு எதனைத்தான், தான் ஆட்சிக்கு வந்த பின்னர் வழங்கப்போகின்றார்.

தமிழ் மக்கள் தாம் விரும்புகின்ற சுயாட்சி அதிகாரம், சுயநிர்ணய உரிமை தவிர குறைந்த பட்சமான எந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ரணில் விக்கிரமசிங்கவை நோக்கி ஆழமாகத் தமிழ் மக்களால் தொடுக்கப்படுகின்ற வினாவுக்கு ரணிலின் விடை என்ன?



# சிறிசேன – மஹிந்த பனிப்போர் கட்சிக்குள் சூடுபிடித்துள்ளது

## ஓரம் கட்டும் செயற்பாடுகள் தீவிரம்

சண்டே ரைம்ஸ்
கட்டுரையில் இருந்து ரெங்கன்

ஜனாதிபதி சிறிசேன நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தியதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சிறிபால டி சில்வா அவரைச் சந்தித்தபோது இவ்வாறான உரைகளை அவர் தொடர்ந்து நிகழ்த்துவாரானால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடுவில் இரண்டாக உடைந்துவிடும் என்று கூறியதாகத் தெரிகின்றது. பின்னர் சிறிசேன தமக்கு விளங்கப்படுத்திய விடயங்களை அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்குக் கூறியிருக்கிறார். சிறிசேன தமது நிலைமையை விளக்கியபோது தமது குடும்ப உறுப்பினர்களும்கூட தம்மைக் குறை கூறுவதாகத் தெரிவித்துள்ளார். கட்சி முதுநிலை உறுப்பினர்கள் சிறிசேனவைச் சந்தித்து ஆலோசனைகள் வழங்கிய சமயத்திலும் அவர் எதுவித கருத்தும் வெளியிடாமல் சிரித்துக் கொண்டிருந்தனர் என்று சிலர் தெரிவித்துள்ளார்கள். பின்னர் சுதந்திரக்கட்சிச் செயலாளர் அவரைச் சந்தித்தபோது கட்சியின் மத்திய குழுவைக் கூட்டும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதற்கு சிறிசேன சம்மதித்தார் எனவும் ஜூலை 30ஆம் திகதி வியாழக்கிழமை குழுக் கூட்டம் நடைபெறலாம் என்றும் தெரிய வருகின்றது.

கட்சியின் தேர்தல் அமைப்பாளர்களை தமது விருப்பப்படி நியமிப்பதற்கு முடிவு செய்ததன் மூலம், சிறிசேன அரசியல் ரீதியில் ராஜபக்ஷவை தொடர்ந்து தாக்க இருப்பது புலனாகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தனிமைப்படுத்திவிட சிறிசேன விரும்புவதும் ராஜபக்ஷவை இதில் இருந்து தெரியவருகின்றது. ஆனால் இந்த முயற்சியில் அவர் வெற்றி பெறுவாரா என்பது சந்தேகமே. என்றாலும் அவர் எடுக்கும் செயற்பாடுகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களைப் பெரிதும் தாக்கத்துக்குள்ளாக்கவே செய்துள்ளது. அவர் செய்துள்ள மிகப் பிந்திய நியமனம் கெஸ்பேவா தேர்தல் தொகுதிக்கான இணை அமைப்பாளராக சந்தன கதிரே ஆராச்சியின் நியமனமாகும். முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் நெருக்கமான ஆதரவாளரான இவரின் நியமனம் முன்னாள் ஜனாதிபதியின் இப்போதைய நெருங்கிய சகபாடியான அமைப்பாளர் காமினி லொக்குகேவுக்கு பெரும் எரிச்சலை மூட்டியுள்ளது. இவ்வாறு பல இடங்களுக்கு ராஜபக்ஷ எதிர்ப்பாளர்களை இணை அமைப்பாளர்களாகவும், பிரதம அமைப்பாளர்களாகவும் சிறிசேன நியமித்திருப்பது தெரிய வந்துள்ளது. இவைகளுக்கு மேலாக மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடும் சிறிசேனவின் விசுவாசி மாத்தறை தேர்தல் தொகுதிக்கு பதில் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதே மாவட்டத்திலுள்ள ஹக்மன அமைப்பாளராகவும் இருக்கும் நிலையில் இந்தப் பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நியமனம் முன்னாள் அமைச்சரும் ராஜபக்ஷவின் வலுவான ஆதரவாளருமான டலஸ் அழகப்பெருமவுக்கு ஆத்திரத்தை மூட்டியுள்ளது. இதே விதமாக கம்பஹா மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள வேட்பாளர் ஒருவர் தொடர்பாகவும் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. சிறிசேனவின் இந்த மாதிரியான நகர்வானது கட்சி அமைப்பாளர்களாக இருக்கும் ராஜபக்ஷவின் ஆதரவாளர்களை மெதுவாக, ஆனால் நிச்சயமாக கட்சியிலிருந்து ஓரங்கட்டும் செயற்பாடு என்றே கருதப்படுகின்றது. வாக்காளர்களை ஐ.தே.கவுக்கு வாக்களிக்கும்படி மறைமுகமாக கோரியிருந்த பின்னணியில் இப்போது இவ்விதமான சிறிசேனவின் செயற்பாடுகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களை மேலும் கோபம் கொள்ளச் செய்துள்ளது. தேர்தல் பரப்புரைகளின்போது கட்சிகள் ஒன்றின்மீது மற்றொன்று ஊழல் மோசடிகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை அடுக்கினாலும், தேர்தல் முடிவுகள் சில முக்கிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளின் தாக்கத்தைப் பொறுத்தும் அமைவதாய் இருக்கும். தேர்தல் நடைமுறைகள் காரணமாக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் கைதுகள் எதனையும் தற்போது மேற்கொள்ளாது இருந்தபோதிலும், புலன் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்தப் பிரிவின் மிக முக்கிய விசாரணைகளுக்கு உதவி வழங்க முன்வந்துள்ள அமெரிக்க நீதித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கடந்த வாரம் இலங்கை வந்திருந்தார்கள். அவ்வாறு புலன் விசாரணைக்குட்பட்டுள்ள ஒன்றுதான், ரஷ்யாவில் முன்னாள் இலங்கைத் தூதுவராக இருந்துள்ளவரான உதயங்க வீரதுங்க தொடர்பானது.

**ஐ.தே.கவின் தேர்தல் அறிக்கை**

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் அறிக்கையை கடந்த வாரம் வெளியிட்டிருந்தது.

கடந்த மே மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு மேலும் சில திருத்தங்களை கொண்டுவரப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். அதில் ஒன்று என்னவென்றால், இப்போது இருக்கும் அரசமைப்பு சபையின் பெயரை மாற்றி அதனைஅரச சபை என்று நிலைப்படுத்துவதாகும். அதில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளே அங்கம் வகிப்பார்கள். நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகளில் இவர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள். சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியவர்கள் அதில் உறுப்பினர்களாக இருக்கமாட்டார்கள். சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைச் சபையொன்றும் இருக்கும். உத்தேச கிராமிய கொத்தணி முறையுடனும் இந்தச் சபை தொடர்புடையதாக இருக்கும்.

உத்தேச அரச சபையின் கீழ் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் நிர்வாக மட்டத்தில் பங்காளியாக இருப்பார் என்று ரணில் விக்கிரமசிங்க விளக்கினார். அவர் தொடர்ந்து விளக்குகையில், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல யோசனைகளைத் தெரிவித்தார். புதிய இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு 10 லட்சம் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும். தனியார் துறையில் குறைந்த பட்ச சம்பளம் 10 ஆயிரம் ரூபாவாக இருக்கும்படி செய்யப்படும் என்றார். நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் காணப்படும் மேலும் சில அம்சங்கள் வருமாறு:-

**நாடாளுமன்றின் மேலாண்மை**

ஊழலுக்கு எதிரான நடவடிக்கை தொடரும். நிதிக்குற்ற விசாரணைப் பிரிவுக்கு அரசமைப்பு ரீதியாக பாதுகாப்பு அளிக்கப்படும். 1865 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொலிஸ் துறை சட்டம் நீக்கப்பட்டு புதியதொரு சட்டம் உருவாக்கப்படும். அரசமைப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பாக காணப்படும் பிரிவுகள் மேலும் வலுப்படுத்தப்படும். பிரதமர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனைகளின்பேரில் ஜனாதிபதி தமது அதிகாரங்களை பிரயோகிக்கும் விதிகள் ஏற்படுத்தப்படும். அவர்கள் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறுபவர்களாய் இருப்பார்கள். இந்த வகையில் நாடாளுமன்றத்தின் மேலாண்மை பாதுகாக்கப்படும். ஜனாதிபதி சிறிசேன இப்போது பிரயோகித்துவரும் சிறப்பு அதிகாரங்கள் தொடர்ந்து அதே முறையில் பேணப்படும்.

இப்போதிருக்கும் தேர்தல் முறை ஒழிக்கப்படும். பதிலாக விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் நேரடி வாக்களிப்பு முறைகளைக் கொண்ட கலப்பு முறை கொண்டு வரப்படும்.

**ஜே.வி.பியின் தேர்தல் அறிக்கை**

ஜனதா விமுக்தி பெரமுனையும் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. மனச்சாட்சியின் உடன்பாடு என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கை அந்தக் கட்சியின் தேசிய நிகழ்ச்சி நிரல் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முக்கிய அம்சமாக பொது மக்களின் கருத்துக்களுடனான புதிய அரசமைப்பு அறிமுகப்படுத்தப்படும். அது மக்கள் அங்கீகாரத்துக்காக சர்வஜன தீர்ப்புக்கு விடப்படும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து நடாளுமன்ற ஆட்சி முறை கொண்டுவரப்படும். எம்.பி. மாருக்கான ஓய்வூதியத்தை ஒழிக்கவும், வரியில்லாத வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் சலுகையை இல்லாமல் செய்யவும் வழி வகை செய்யப் போவதாக ஜே.வி.பி. கூறி யுள்ளது.

**சகல மக்களும் சமமாக நடத்தப்படுவர்**

அரசியல், சமூக மற்றும் கலாசாரத்துறைகளில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் மற்றும் மலாயர் முதலிய மக்கள் சமரீதியாக நடத்தப்படுவார்கள் என்றும் ஜே.வி.பி.அறிவித்துள்ளது.

அமைதியை நிலைநாட்டும் செயற்பாடாக பாகுபாடுகளுக்கு எதிராகவும் உண்மைகள் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பாகவும் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் அந்தக் கட்சி வாக்களித்துள்ளது.

இந்த உறுதி மொழிகளை அவதானிக்கையில் ஜே.வி.பி. இப்போது இன நல்லிணக்கத்தில் அதிக அக்கறை செலுத்துவது தெரிகின்றது. இது ஐ.தே.க. மற்றும் அதன் நேசக் கட்சிகளின் சிந்தனையோடு ஒத்துப் போவதாகத் தெரிகின்றது.

மாகாணசபை முறை ஒழிக்கப்பட்டு மக்கள் சபைகள் கொண்டு வரப்படும். ஐ.தே.கவைப்போலவே தகவல் அறியும் உரிமைச் சட்டம், தேசிய கணக்காய்வுச் சட்டங்கள் கொண்டுவரப்படும் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. எம்.பிக்கள் கட்சி மாறுவதைத் தடுக்கவும்அவ்வாறு செய்பவர்கள் பதவி இழக்கச் செய்யவும் சட்டம் இயற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வில் தலைவர் அநுர குமார திசாநாயக்க பேசும்போது, கட்சியின் கடந்த கால வன்முறைப் போக்குக்காக வருத்தம் தெரிவித்தார் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில் வன்முறைக்கு அவசியமில்லை என்று அவர் கூறினார்.





# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 7 | | | | 1 |
| | | | 3 | | | 6 | | |
| 8 | | 6 | 1 | | | 4 | | |
| | | 5 | 2 | | 4 | 9 | | |
| | 4 | | | 3 | | | 1 | |
| | | 1 | | | | 2 | | |
| 2 | | 4 | 6 | | 8 | | | |
| | | | | 4 | | | | |
| | 5 | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 4 | 6 | 3 | 8 | 5 | 9 | 1 |
| 6 | 8 | 5 | 2 | 1 | 9 | 7 | 3 | 4 |
| 9 | 3 | 1 | 7 | 5 | 4 | 2 | 6 | 8 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 4 | 5 |
| 8 | 9 | 3 | 4 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 4 | 5 | 6 | 3 | 2 | 1 | 9 | 8 | 7 |
| 5 | 4 | 8 | 9 | 6 | 7 | 1 | 2 | 3 |
| 3 | 1 | 9 | 5 | 4 | 2 | 8 | 7 | 6 |
| 2 | 6 | 7 | 1 | 8 | 3 | 4 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 60 | 60 | 60–80 | 80 | 60 | 40 |
| கத்தரி | 80 | 70 | 90 | 70 | 50–60 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 130 | 120–200 | 120 | 180–200 | 200 | 200 | 200 |
| மரவள்ளி | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 70 | 60 | 60 | 40 | 80–100 | 80 | 140 | 90–100 |
| பாகல் | 120 | 140 | 100 | 120 | 100–120 | 160 | 120 | 90 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | – | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 120 | 110 | 100–110 | 120 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 80 | 140 | 100 | 100 | 100–130 | 120 | 120 | 80–100 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30–40 | 60 | 80 | 30 |
| தக்காளி | 120 | 130 | 140 | 120 | 110–120 | 90 | 140 | 100 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 | 40–50 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 15–20 | 20 | 40 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 200 | 250 | 220 | 200–240 | 200 | 400 | 220 |
| புடோல் | 50 | 45 | 40 | 40 | 40 | 60 | 80 | 60 |
| கோவா | 90 | 100 | 80 | 80 | 60–70 | 100 | 120 | 70 |
| வெண்டி | 50 | 50 | 40 | 40 | 60–80 | 80 | 80 | 40 |
| போஞ்சி | 140 | 220 | 180 | 160 | 220 | 200 | 200 | 140 |
| லீக்ஸ் | 80 | 110 | 160 | 100 | 110–120 | 160 | 120 | 100 |
| தேங்காய் | 40 | 35–40 | 50 | 30–50 | 40–60 | 40–50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 80 | 90–100 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 40 | 60–70 | 80 | 120 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 170 | 140 | 180 | 240–260 | 200 | 220 | 150 |
| இராசவள்ளி | 120 | 100 | – | 160 | – | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 100 | 80 | 140 | 120 | 120 | 110 |

## சிந்தை புத்தியின் தீருவுகளை ஏற்றுச் செயற்பட்டால் சலனமற்ற நிலை கிட்டும்

சிந்தையானது தன்னளவில் தூய்மையானது. அது பாரபட்சமில்லாத முறையில் புலன்களது எண்ணத்துக்கு அடி பணிவதனாலேயே தூய்மை நிலை கெட்டு அழுக்கு அடைந்து விடுகிறது. சிந்தையானது புலன்வாயிலாகப் பெறுகின்ற அனைத்தையும் பாரபட்சமின்றி ஏற்றுக் கொள்வதைத் தவிர்த்து, அவற்றைப் பரிசீலனை செய்து கொள்ளும் பொருட்டு புத்தியிடம் விடுத்து, புத்தியின் தீர்வுகளையே ஏற்று அதன் படி செயற்படுமாயின் சிந்தை சலனமற்று, அதன் இயல்பான தூயநிலையைப் பேணி நிற்கக் கூடிய தாக இருக்கும்.



சாயி சிந்தனை

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 800 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 250 | 450 |
| கணவாய் | 600 | 600 | 700 | 600 | 650 | 650 |
| பாரை | 600 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சுறா | 600 | 500 | 600 | 700 | – | 550 |
| சீலா | 300 | 450 | 500 | 500 | 400 | – |
| விளை | 700 | 450 | 400 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 400 | 400 | 350 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 | – | – |
| கிழாக்கன் | 550 | 800 | – | 400 | – | 600 |
| ஓரா | 400 | 300 | 400 | 500 | – | 350 |
| திரளி | 250 | 300 | 220 | 300 | 200 | 300 |
| நகரை | 200 | 400 | 200 | 350 | 200 | 300 |
| சூடை | 150 | 200 | 200 | 120 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 250 | 350 | 250 | 300 |
| திருக்கை | 150 | 400 | 250 | 400 | 300 | 170 |
| பாலை | 400 | 350 | 350 | 400 | 400 | – |
| வாளை | 100 | 200 | – | 350 | 300 | – |
| கொய் | 100 | 200 | 60 | 160 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 220 | 250 | 350 | 300 |

## நாளை

**ஆடி-15**
**வெள்ளிக்கிழமை**
**31.07.2015**

திதி: பூரணை பி.ப. 05.20 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப.11.15 வரை
சுபநேரம்: 06.03–07.33 வரை
இராகுகாலம்: 10.33–12.03 வரை
**பூரணை விரதம்**

## சளியைப் போக்கும் நொச்சி இலை

நொச்சி இலையின் பயன்பாடுகள் அளப்பரியன. நொச்சி இலைகள் நான்கு அல்லது ஐந்தைப் போட்டு, நன்றாகக் காய்ச்சி



அந்தச் சாற்றை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இரவு படுக்கைக்குப் போகும் முன்பு அதில் அரை டம்ளர் குடித்தால் இருதயத்தில் இருக்கக்கூடிய, நுரையீரலில் இருக்கக்கூடிய சளி எல்லாம் கட்டிகட்டியாக வெளியே வந்துவிடும். கடும் காய்ச்சல் வந்தால் நொச்சி இலையைச் சாப்பிட்டுவர காய்ச்சலுக்குக் காரணமான அந்த வைரஸ் கிருமிகள் அழிந்துவிடும். உஷ்ணம் அதிகம் இருப்பதால் நொச்சி இலையைச் சாப்பிட்டால் அடிக்கடி வரக் கூடிய காய்ச்சலைத் தடுக்கலாம். அதேபோன்று தும்மலுக்கு, மூக்கில் தொடர்ந்து தண்ணீர் வருபவர்களுக்கு வேறு ஒன்றும் தேவையில்லை. மஞ்சள், நொச்சி இலை, வேப்பிலை பச்சையாகப் போட்டுப் புகை போடுங்கள், அதை நுகருங்கள். தும்மல் சரியாகி விடும். ஆஸ்துமா, வாத நோய் எல்லாவற்றுக்குமே இந்த நொச்சி இலையைச் சாப்பிட்டாலே சரியாகி விடும். இப்படி நொச்சி இலை பல்வேறு பயன்பாடுகள் உரியது. அனைவருக்கும் பல விதங்களில் பயன்படும் நொச்சி இலையை உங்கள் வீட்டிலும் வளர்க்கலாம்.

## கடவுள் நம்பிக்கை அவசியம்

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



முதலில் நாம் எம்மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த நம்பிக்கை இருந்தால் தான் முன்னேற வழி கிடைக்கும்.

வாழ்க்கையில் ஏதாவது இலட்சியம், கொள்கையில் பிடிப்பு வேண்டும். அந்தக் கொள்கை வழியில் நடந்தால் எம்முடைய இடர்பாடுகளின் அளவு குறைந்து விடும் அல்லது கட்டுப்பட்டு விடும்.

ஒரு திட நம்பிக்கையைக் கடைபிடித்து வாழ்க்கையில் சாதனை நிகழ்த்தியவர்களைச் சரித்திரம் காட்டுகிறது. அதே நம்பிக்கையைச் சற்று விரிவுபடுத்தினால் அது கடவுள் நம்பிக்கையாகி விடும். கடவுள் என்பவர் எம் எல்லோரையும் இணைக்கும் சக்தி. கடவுள் மீது நம்பிக்கை கொள்வது சமூகத்தின் நன்மைக்காகவே. கடவுளை நம்புபவன் உலகத்தை நேசிக்கிறான்.

# கனவுகளுக்கான பலன்களை அறிந்து கொள்ளுங்கள்

நிலானி

கனவுகளுக்கான பலன்கள் பழைமையான சாஸ்திரங்களில் மட்டுமே உள்ளன. நள்ளிரவில் ஒரு மணிக்குக் கனவு கண்டால் ஒரு வருடம் கழித்துப் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்தில் பலன் கிடைக்கும். அதிகாலை கனவு உடனடியாகப் பலிக்கும் என்று கனவு சாஸ்திரம் கூறுகிறது. நல்ல கனவு கண்டால் மறுபடியும் தூங்கக் கூடாது. கெட்ட கனவு கண்டால் கடவுளைத் தியானித்து விட்டுப் பின்னர் தூங்க வேண்டும்.

- தனக்கு காதுநோய் வந்துவிட்டதாகக் கண்டால் அது குடும்பத்தில் ஏற்படப் போகும் கலகத்தின் அறிகுறியே ஆகும்.
- சாவிக் கொத்து தன்னிடம் இருப்பதாகக் கண்டால் குடும்பத்தில் பற்று அதிகமாகும். தொழிலில் மேன்மை, பொருள் சேர்க்கை மிகும். சாவிக் கொத்து காணாமற்போனதாகக் கண்டால் பலவித கஷ்ட, நஷ்டங்களுக்கு ஆளாக நேரும். நம்பிக்கை மோசம் போவார்கள்.
- ஆதரவற்ற அநாதைகள் உள்ள விடுதியைக் கனவில் காண்பது கூடாது. அவ்வாறு கனவு காண்பவரது எதிர்கால வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருக்கும்.
- விஞ்ஞான ஆய்வுக்கூடத்தைக் கனவில் காண்பவர், ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டு அதில் வெற்றி காண்பார்.
- ஆசிரமம் தோன்றுமானால், அவ்வாறு கனவு காண்பவரது மன அமைதியின்மையை அது குறிக்கும்.
- மருத்துவமனை தோன்றுமானால் அவ்வாறு கனவு காண்பவர் தமது உடல் நலம் பேணுவதில் கொண்டுள்ள கவனத்தைக் குறிக்கும்.
- பறப்பது போல் கனவு காண்பவர்கள் வாழ்வில் மிக உன்னதனான நிலையை அடைவார்கள். இதுவரை இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும்.
- காடுகளிலும் மலைகளிலும் வாழக் கூடிய மலைவாசிகள் அல்லது ஆதிவாசிகள் கனவில் தோன்றினால், புதிய புதிய வருமானம் உண்டாகும். பழைய கடன் அடைபடும். நாடோடிகளையும், நரிக்குறவர்களையும் கனவில் கண்டாலும் இந்தப் பலன் பொருந்தும்.
- ஒரு கதவையோ பூட்டையோ திறப்பதாகக் கண்டால் பிறருக்கு உதவுவதன் மூலமாகப் புகழ் பெறுவர்.
- கனவில் அந்தணனைக் கண்டால் நல்லது. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். தலப் பயணம் மேற்கொள்ள நேரும். புண்ணிய ஆலய வழிபாடு, புனித நீராடல் நிகழும்.
- கனவில் அரசனைக் கண்டாலும், அரசரோடு தொடர்பு கொண்டாலும் நல்ல செல்வாக்கும். மதிப்பும், உயர்வும் உண்டாகும். அரசர் போன்ற பெரும் பதவியில் உள்ளோரைக் கண்டாலும் இந்தப் பலன் பொருந்தும்.
- அமைச்சரோடு தொடர்பு கொள்வது போன்றோ அல்லது உரையாடுவது போன்றோ கனவு கண்டால், விரைவில் பதவி உயர்வு கிடைக்கும். தொழில்துறையில் உள்ளவர்களுக்குத் தொழிலில் இருந்து வந்த தடைகள் விலகும்.
- கனவில் அயல் நாட்டவர் தோன்றினால் அயல் நாட்டு வணிகத் தொடர்பு உண்டாகும். அயல் நாட்டிலிருந்து பொருள் வரவு உண்டு.
- அயல் நாட்டுத் தூதுவரைக் கனவில் கண்டால், புதியவர் ஒருவரின் தொடர்பு உண்டாகும். தாம் அயல் நாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்டது போல் கனவு கண்டால் புதிய தொழிலில் அல்லது புதிய வணிகத்தில் ஈடுபடும் வாய்ப்பு உண்டாகும்.
- அதிசயமான – விந்தையான மனிதரைக் கனவில் கண்டால் தொழிலில் ஏமாற்றங்கள் உண்டாகும். நம்பிக்கை மோசடிக்கு உள்ளாக வாய்ப்புண்டு.
- அறிஞரைக் காண்பது போலவோ, அல்லது அறிஞரோடு உரையாடுவது போலவோ கனவு கண்டால் அறிவுப் பெருக்கம் உண்டாகும்.
- தான் வாய்விட்டு அழுது கொண்டிருப்பதுபோல் கனவு தோன்றினால் எதிர்கால வாழ்க்கையில் இடையூறுகள் உண்டாகும்.



(தொடரும்...)

# இளம் பெண்கள் தெரிந்து கொள்ள...

இன்றைய வாழ்க்கை முறையால் பல்வேறு நோய்களைச் சந்திக்கும் நிலையில் நாம் உள்ளோம். குறிப்பாக இளம் பெண்கள் இன்று அதிக நோய்ப் பாதிப்புகளுக்கு ஆளாகும் நிலை இருக்கிறது. எனவே, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வய தைச் சேர்ந்த பெண்கள் செய்துகொள்ள வேண்டிய பரி சோதனைகளை இங்கே அறிந்து கொள்ளலாம்.

**விற்றமின் 'டி' பரிசோதனை**

எலும்பு வலி, முதுகு வலி மற்றும் கால் வலி ஆகிய அறிகுறிகள் இருக்கும்போது, இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வது நல்லது. இது இளம்பெண்கள் செய்து கொள்ள வேண்டிய முக்கியமான பரிசோதனையாகும்.

80 முதல் 90 சத வீத இளம்பெண்களின் உடலில் விற்றமின் 'டி' பற்றாக்குறை உள்ளது. எனவே, அனைத்து பெண் களும் அந்தந்தப் பருவத்தில் விற்றமின் 'டி' பரிசோதனை யைச் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். குருதிப் பரிசோதனை மூலமாக இதை அறியலாம்.

**விற்றமின்; பி - 122 பரிசோதனை**

புஜங்கள் மற்றும் கால்களில் உணர்வற்ற நிலையையோ அல்லது குறுகுறுப்பாகவோ இருக்கும்போதும், பலவீனமாக இருப்பதை உணரும்போதும், இரத்தச்சோகையால் சம நிலையை இழந்திருக்கும் நேரங்களிலும் இந்தப் பரிசோதனையைச் செய்வது நல்லது. சைவ உணவு சாப்பிடுபவர்களிடம் இந்தக் குறைபாடு காணப்படுகிறது. இந்தப் பரிசோதனையைச் செய்வதன் மூலம் உங்கள் உடலில் விற்றமின் பி-122 எந்த அளவு உள்ளது என்பதைக் கண்டறிய முடியும். இரத்தப் பரிசோதனையின் மூலமாக இதை அறியலாம்.

**மார்பகப் பரிசோதனை**

மார்பகங்களில் கட்டிகள் வருவதும், ஒழுங்கற்ற தன்மை இருப்பதும்தான் பிரச்சினைக்கான முதல் அறிகுறி. சுயமாகப் பரிசோதனை செய்யும்போது கட்டிகள் இருப்பது தெரிய வந்தால், மாம்மோகிராம்ஸ் பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இளம்பெண்களால், பெரும்பாலும் தவிர்க்கப்படும் முக்கியமான பரிசோதனைகளில் ஒன்றாக இது உள்ளது. ஒரு பெண் 25 வயதை அடைந்து விட்டால் மட்டுமே இந்தப் பரிசோதனைகளைச் செய்து கொள்ள வேண்டும்.






# வாழ்க்கையில் பெண்களின் பல்வேறு நிலைகள்



ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்று சொல்வது இயல்பு. இதற்கு யாரும் மறுப்புக் கூற முடியாது. ஏனெனில் பெண்களிடமிருந்து ஆண்கள் நிறையக் கற்றுக் கொள்கின்றனர். உதாரணமாக:– தாயையே எடுத்துக் கொள்ளலாமே! தாய் என்றால் ஆண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

எந்த ஒரு ஆணும் தன் தாயைப் போன்று யாரும் வர முடியாது. தாயிடமிருந்து தான் இதைக் கற் றுக் கொண்டேன் என்று பல ஆண்கள் கூறுவார்கள். இவ்வாறு தாய் என்று சொல்லும் ஒரு நபர் யார் என்று பார்த்தால், அது பெண் தான். மேலும் தாயிடமிருந்து மட்டும் கற்றுக்கொள்வதில்லை. தாயைப் போன்று வேறு பல உறவுமுறைகளில் உள்ள பெண்களிடமிருந்தும் பலவற்றை ஆண்கள் கற்றுக் கொள்கின்றனர்.

உலகில் உள்ள ஒவ்வொரு ஆணும், அம்மா மகன் தான். ஏனெனில் தாயின் மூலம் உலகை பார்க்கும் ஆண், அந்தத் தாயிடம் இருந்து தான் அனைத்தையும் கற்றுக் கொள்கிறான். சொல்லப்போனால், ஆண்களின் ஹீரோ அவர்களது தாய் தான்.

அம்மாவுக்குஅடுத்த படியாக இருக்கும் ஒரு மறுக்க மற்றும் மறக்க முடியாத உறவுமுறை தான் மனைவி. மனைவி என்னதான் சண்டை போட்டாலும், ஏதாவது ஒன்று என்றால், அடுத்த நிமிடமே வந்து எதையும் மனதில் கொள்ளாமல், தாய்க்கு அடுத்து அனுசரித்து நடப்பவள் தான் மனைவி. எனவே இத்தகைய மனைவியை உயிர் பிரிந்தாலும், எந்த ஒரு ஆணும் மறக்கமாட்டார்கள். தாயின் அன்புக்கு எல்லையே இல்லை என்பதை மாமியாரின் மூலம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்வோம். எனவே இந்த உறவுமுறையிலும் ஒரு நல்ல தாயைத் காணலாம்.

பாட்டிக்கு பேரன், பேர்த்தி என்றால் அளவு கடந்த பிரியம் இருக்கும். இந்தப் பாட்டி உறவு முறையும் மிகவும் சிறப்பான மறக்க முடியாத ஒன்று. அண்ணானாக இருக்கும் ஒவ்வொரு ஆணுக்கும் நிச்சயம் தங்கை என்றால் மிகவும் பிடிக்கும். ஆண்கள் எவ்வளவு தான் கெட்டவர்களாக இருந்தாலும், தங்கையை மிகவும் கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்வார்கள். குறிப்பாக தங்கையாக இருக்கும் பெண், எவ்வளவுதான் அண்ணனுடன் சண்டை போட்டார்லும், எந்த ஒரு விடயத்திலும் தனது அண்ணனை விட்டுக் கொடுக்கமாட்டாள். எனவே இவ்வாறு விட்டுக் கொடுக்காத மனப்பான்மையை ஒவ்வொரு ஆணும், தங்கையிடமிருந்து தான் கற்றுக் கொள்கின்றான்.



## மாணவிக்கு ஒரு மடல்

அன்புக்கினிய மாணவி தமிழரசிக்கு,
இங்கு நான் நலம். உனது நலமறிய ஆவல்.

நீண்ட இடைவெளியின் பின்னர் உன்னுடன் தொடர்பு கொள்வதையிட்டு அகமிக மகிழ்கின்றேன். மேலும், உனது கடிதம் கிடைக்கப்பெற்றேன். உனது கல்வியைப் பற்றி எழுதியிருந்தாய். மிக்க மகிழ்ச்சி. இறுதியில் நீ எழுதி இருந்த வாசகம்தான் மிக அவசரமாக என்னை இந்தக் கடிதத்தை எழுதத் தூண்டியது .

யாழ்.மாவட்டம் இன்று போதைப் பொருள்களின் கோட்டையாகி விட்டது என்று எழுதியிருந்தாய். ஆம் உண்மைதான். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள கோட்டை பலருக்குச் சிம்ம சொப்பனமாக அமைந்திருந்தது. ஆனால் இன்று யாழ்ப்பாணமே போதைப்பொருள்களின் கோட்டையாகி விட்டமை ஒட்டுமொத்த தமிழினதுக்குமே சாபக்கேடாகிவிட்டது .

இன்று, பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளை விளையாட்டுப் பொருளாகக் னகயாளும் நிலை கண்டு வெட்கப்பட்டு, தலைகுனிந்து நிற்கின்றோம். சில தீய சக்திகள் கூட்டுச்சேர்ந்து யாழ். மக்களின் முதுகெலும்பாம் மாணவர்களின் குரல்வளையை நசுக்கத் தொடங்கி விட்டார்கள். நசுக்கப்படுவது மாணவர்களின் குரல்வளைகள் அல்ல. தமிழினத்தின் குரல்வளைகள் என்பது உனக்கு நன்றாக நினைவிருக்கட்டும்.

என்ன? இப்படிக் கூறுகிறாரே என்று சிந்திக்கிறாயா? ஆம்! நாம் பிறந்ததில் இருந்து இன்று வரை படித்த பாடங்கள் எம்மை நன்றாகப் புடம் போட்டுள்ளன. நாம் அனுபவித்த சோதனைகள், வேதனைகளின் வலிசுமந்த ரணங்களை எங்களால் மறக்கமுடியாதம்மா. இவை பற்றிப் பின்னர் எழுதுகிறேன்.

தமிழரசி! நீ தமிழுக்கு அரசியாய் வாழவேண்டுமம்மா. உன் சக மாணவர்களோடு அன்பாகப் பழகு, ஆனால் அடிமையாகிவிடாதே. போதைப்பொருள்களின் கொடுமை பற்றி அவர்களுடனும் பேசு. உங்கள் அனைவருக்கும் இனிய எதிர்காலம் காத்துக்கொண்டிருக்கிறது என்பது உங்கள் அனைவரதும் நினைவில் இருக்கட்டும்.

உனது பாடசாலையை நேசி, ஆசிரியர்களுக்குப் பணிந்து வாழப் பழகு, உனது பெற்றோருக்கு மதிப்புக்கொடு, பெரியோரைப் போற்று, உனக்கு எல்லாமே நிறைவாய்க்கிடைக்கும். இறையருள் கிட்டும். நீ எதிர் நோக்கவிருக்கும் க . பொ. த. உயர்தர பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற பிரியத்துடன் வாழ்த்தி விடை பெறுகின்றேன். மீண்டும் மறுமடலில் சந்திப்போம்.



அன்புடன்
ஆசிரியை
சி.கிருஷ்ணவேணி.

## முள்ளுக்கும் திறமை உண்டு



விவசாயி ஒருவருக்கு, ஒரு மலையின் அருகே தோட்டமிருந்தது. அதில் அவர் துளசி பயிரிட்டிருந்தார். துளசிச் செடிகளுக்கு இடையே முளைக்கும் களைகள், முட்செடிகள் ஆகி யவற்றைப் பிடுங்கி எடுத்து துளசிச் செடிகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வளர்த்து வந்தார்.

ஒரு நாள் துளசிச் செடிக்கு இடையே வளர்ந்திருந்த ஒரு முட்செடி ஒன்றைப் பிடுங்கி எறிந்தார். உடனே அந்த முட்செடி கண்ணீர் விட்டு அழுதது. விவசாயி அந்த முட்செடியிடம் ஏன் அழுகிறாய் என்று கேட்டார். நான் தான் எவருக்குமே பயன்படப் போவதில்லையே. எந்தத் திறமையும் இல்லாத என்னை ஏன் கடவுள் படைத்தார் எனக் கூறி வருத்தப்பட்டது.

கடவுள் எவரையும் காரணம் இல்லாமல் படைப்பதில்லை. கடவுள் எல்லோருக்கும் திறமையையும், பலத்தையும் கொடுத்து இருக்கிறார். அதைத் தான் கண்டு பிடித்துப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயி கூறினார். என்ன திறமை இருக்கப் போகிறது என்னிடம், நானோ முட்செடி. பிறரைக் காயப்படுத்துவேனே தவிர, வேரு எவருக்கும் உதவியாக இருக்க மாட்டேன் என்று தன்னை இழிவாகப் பேசியது முட்செடி.

மறுநாள் விவசாயி தனது தோட்டத்திலிருந்து பிடுங்கி எறிந்த முட்செடிகளை எல்லாம் ஒன்று சேர்த்து தோட்டைத்தைச்சுற்றி வேலிஅமைத்தார். பின்பு அந்த முட்செடியிடம் சென்று, நீ முட்செடி தான். பிறரைக் காயப்படுத்துபவன் தான். ஆனால் உன்னிடமும் திறமை இருக்கிறது, பலமும் இருக்கிறது. அதனால் தான் இன்று இந்தத் தோட்டைத் தையே பாதுகாக்கும் காவல்கார வேலியாக உயர்ந்துவிட்டாய் என்றார் விவசாயி.

கடவுள் படைத்த எல்லா உயிர்களுக்குமே திறமையும் பலமும் உண்டு என்பதை அப்போது உணர்ந்து கொண்டது முட் செடி.











## மட்டக்களப்பு





மட்டக்களப்பு இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று. இது நாட்டின் ஒன்பது மாகாணங்களுள் ஒன்றான கிழக்கு மாகாணத் திலுள்ள மிகப் பெரிய நகரமும், மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் தலை நகரமும் ஆகும்.

தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமளவில் முஸ்லிம் மக்களும் வாழ்கின்றனர். மட்டக்களப்பானது மீன் பாடும் தேன் நாடு என அழைக்கப்படுகின்றது. இதன் எல்லைகளாகத் திருகோணமலை,பொலன்னறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அமைகின்றன. கொழும்பிலிருந்து இது 301 கி.மீ. தொலைவில் அமைந்துள் ளது. "மட்டக்களப்பு மான்மியம்" கூறுவதன்படி மட்டக்களப்பு எனும் பெயர் காரணப் பெயராக அமைந்துள்ளது. இலங்கைமீது படையெடுத்த வட இந்திய முற்குகர், கிழக்குப் பக்கம் தமது ஓடத்தைச் செலுத்தி, மட்டக்களப்பு வாவியின் எல்லை வரை சென்று,அதற்குஅப்பாற்செல்ல வழியில்லாததால் இது மட்டும் மட்டடா மட்டக்களப்படா (இந்தக் களப்பு இதுவரையும்தான்) எனக் கூறி மட்டக்களப்பு எனும் பெயரை இட்டனர். மட்டமான களப்பு என்பதனால் மட்டக்களப்பு எனவும் கூறப்படுகிறது. மட்டமான என்றால் சமதரையான என்றும் அர்த்தம் கொள்ளலாம். மட்டக்களப்பைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான "பற்றிக் கலோ" போர்த்துக்கீச சொல்லிலிருந்து உருவாகியது.

மட்டக்களப்பு மாவட்டம் வாவியால் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒருபகுதி எழுவான் கரை (சூரியன் எழும் பகுதி அது கிழக்குப் பகுதி) என்றும் மறு பகுதி படுவான் கரை (சூரியன் மறையும் பகுதி அது மேற்குப் பகுதி) என்றும் அழைக்கப்படுகின்றது.

காடுகள், விவசாய நிலம், வாவி, முகத்து வாரம், கடல், அணைகள், களப்பு,துறைமுகம், குளம் போன்ற புவியியல் அம்சங்களைக் கொண்டுள்ளது. படுவான் கரைப் பிரதேசம் வளமிக்க விவ்சாய நிலத்தைக் கொண்ட பகுதியாகும். மட்டக்களப்பு பிரதான நகரைச் சூழ்ந்து வாவி காணப்படுவது இயற்கை வனப்பான விடயமாகும்.

## நூல் வெளியீடு

கைதடியூர் வே.தபேந்திரன் எழு திய யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 2 நூல் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.திரு மறைக் கலாமன்ற கலைத்தூது மண்ட பத்தில் வெளியிடப்பட்டது. ஹற்றன் நஷ னல் வங்கியின் யாழ்.மெற்றோ கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ் வரன் தலைமையில் இடம்பெற்ற வெளியீட்டு நிகழ்வில், வரவேற்புரையை கிளி நொச்சி ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ம.உமா சங்கரும், வெளியீட் டுரையை கிழக்கு பல்கலைக்கழக பொரு ளியல்துறை முதுநிலை விரிவு ரையாளர் ஆ.சௌந்தரலிங்கமும், மதிப்பீட்டு ரையை காவேரி கலாமன்ற இயக்குநர் வண. ரி.எஸ்.ஜோசுவா வும் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதியை வே. இளங் கோவன் – சுஜீவா தம்பதியினர், திருமதி வே.பரி மள காந்தி ஆகியோர் கூட்டாகப் பெற்றுக் கொண்டனர். (ற–9)

## பிற்போடப்பட்டது நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க நிர்வாகத் தெரிவு பிற்போடப்பட்டுள்ளது. இன்று 30 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக் கப்பட்டிருந்த இந்தத் தெரிவு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும் என சண் டிலிப்பாய் பிரதேச செயலாளர் அறி வித்துள்ளார். (ற–ரி)

## தேர்த்திருவிழா

அச்சுவேலி, ஜூலை 30

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாய கர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும். (ற–11)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

தென்மராட்சி, ஜூலை 30

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லாரி பழைய மாணவர் சங்க கூட்டம் நாளை மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறுமென சங்கச் செயலாளர் க.சியந்தன் அறிவித்துள்ளார் . இந்தக் கூட்டம் நாளை மு.ப.11 மணிக்கு நடை பெறுமென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத் தால் மாலை நடத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–9)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### தேவை

சாவகச்சேரியில் இயங்கும் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத் திற்கு எழுதுநர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.
தொடர்பு:- 077 917 9600
021 227 0904

### தேவை

சிறிய குடும்பம் வசிப்பதற்கான வீடு தேவை
தொடர்பு : 077 607 9676

### வேலையாள் தேவை

ஹோட்டல் ஒன்றிற்கு மும்மொழி தேர்ச்சியுடைய வேலையாள் தேவை.
தொடர்பு: 077 320 0727
077 741 2713

### Personal Class

தரம் 3முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Classஉம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
பிரபல ஆசிரியர்,
மகாவிRoad, யாழ்ப்பாணம்.
076 6972 757
(63477)(9.3.6)



### புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்
### புதிய அனுமதி - 2016

2016 ஆம் ஆண்டுக்கான தரம் 1, தரம் 6, வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஆவணி 10 ஆம் திகதி (10.08.2015) நண்பகல் 12 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஆரம்பப்பிரிவில் ஏனைய வகுப்புகளுக்கு ஒருசில இடங் களுக்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவம் (பரீட்சை கட்டணம் உட்பட)
- ரூபா 700/= ஆகும்.

* தரம் 1இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் **01.02.2010** இற்கும் **31.01.2011** இற்கும் இடையில் பிறந்திருக்கவேண்டும்
* தரம் 6 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் **01.02.2005** இல் அல்லது இதற்கு பின் பிறந்திருக்க வேண்டும்
* பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களையும், பிறப்புச் சான்றிதழையும் நேரில் வந்து அலுவலகத்தில் ஒப்படைக்க வும். அவை ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள் **12.08.2015**
* தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்களின் பெற்றோருக்கான நேர்காணல் **19.09.2015** சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.
* புதிய அனுமதித் தேர்வு **26.09.2015** சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.
* தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
* 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் சித்திபெற்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு விசேட ஊக்குவிப்பு உதவித் திட்டம் உண்டு.

(சி.18175) (46.6.7) அதிபர்.


### இதய அஞ்சலி

**அமரர் ஐயாத்துரை சரவணபவன்**



யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி யில் ஒரு தசாப்த காலத்திற்கு மேல் ஒன்றிணைந்து அரும்பணி ஆற்றிய திருமதி கடம்பமலர் விமலராசா (அதிபர் யா/கோண்டாவில் பரஞ் சோதி வித்தியாசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் பிரபல சோதிடரும், ஓய்வு நிலை வர்த்தக ஆசிரியரும், அதிபருமாக சேவையாற்றி 87 ஆண்டு கள் இப்பூவுலகில் திடமாக வாழ்ந்து 19.07.2015 அமரத்துவம் எய்திய அமரர் ஐயாத்துரை சரவண பவன் அவர்களுக்கு எமது இதய அஞ்சலி செலுத்தி ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி பா.மார்க்கண்டு (ஓய்வு நிலை அதிபர்), திருமதி ச.சிவபாலன் (ஓய்வு நிலை ஆசிரியர்), திரு.இ.அருணகிரிவாசன் (பிரதி அதிபர் யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி), திருமதி சுகிர்தா பாலபுத்திரன் (ஆசிரியர் பெரியபுலம் மகாவித்தியாலயம்), திரு.நா.சிவசிதம்பரம் (அதிபர்)

### கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி சுசீலா செல்வராஜா அவர்களின் பாசமிகு மாமனார் வேலுப்பிள்ளை செல்லையா அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் துடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
(63485)

### கண்ணீர் அஞ்சலி

**இளையதம்பி சுப்பிரமணியம்**



இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் விரிவுரையாளராகவும் பிரதேச கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபராகவும் யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி வரவு விரிவுரையாளராகவும் பணியாற் றியதோடு, கூட்டுறவுத்துறைக்கு பல்வேறு நூல்களையும் எழுதி வெளியிட்டு கூட்டுறவு நிறுவனங் களின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த கூட்டுறவாளன்.

தனது இறுதி மூச்சுவரை கூட்டுறவுத் துறையை உண்மையாக நேசித்த அமரர் அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு கூட்டுறவாளர்களின் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

இல. 12 கே. கே. எஸ், வீதி
யாழ்ப்பாணம்.

தலைவர்,பணிப்பாளர்,
பணியாளர்கள்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

### மரண அறிவித்தல்

**வெற்றிவேலு முத்துக்குமாரு**



சிறுப்பிட்டி தெற்கைப்பிறப்பிட மாவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு முத்துக்குமாரு நேற்று (29.07.2015) புதன்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான வெற்றிவேலு-சின்னப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை யின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற நடராசா(C.O) மற்றும் தியா கராசா, சரோஜினிதேவி, நவரத்தி னராசா, ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற கிருஷ்ணராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் சகுந்தலாதேவி, காலஞ்சென்ற குகதாசன் மற்றும் ஸ்ரீமதிதேவி, கலாராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.08.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி

(63486)

தகவல் :-
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**குருசுப்பிள்ளை சுபிரியேற் பிள்ளை (செல்லக்கிளி)**



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட குருசுப்பிள்ளை சுபிரியேற்பிள்ளை (செல்லக்கிளி) நேற்று (29.07.2015) புதன் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுப் பிள்ளை - லூர்த்தம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மற்றும் விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும் மரியநாயகியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற அன்ரன் பொன்ராசா மற்றும் மேரி கில்டா (நோர்வே), மரிஸ்ரெலா, எலிசபேத்தம்மா, அமிர்தநாதர், யோன்ச்சுதாசன் (சுவிஸ்), ஆனந்த ராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லூர்த்துமலர், மார்ட்டின் பத்திநாதர் (நோர்வே), யூஸ்ரன், செல்வநாயகம், சுகாந்தி, சர்மிளா (சுவிஸ்) மிராண்டா (லண்டன்), மரியபுஸ்பம், யேசுமலர், பிறேமா ஆகியோரின் அருமை மைத்துனரும் அனிஸ்ராவின் பாசமிகு சிறிய தகப்பனும், அல்றின்றாஜ், கெவின்றாஜ், பியறினா, ஜெனிபா (சுவிஸ்), ஸ்ரெபன், அஸ்வின் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆன் டயானா, ஜசிக்கா ஆகியோரின் பாசமிகு மாமனும், அமலியாவின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பற்றிமா வீதி, மாதகல்.
தொ.பே.இல - 0774297486,
0774014849

தகவல் :
குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்

**வைரவப்பிள்ளை விஜயரட்ணம் (சின்னக்கிளி)**

(செல்வம் பிரதர்ஸ்)



பிறப்பு 26.06.1952 — இறப்பு 28.07.2015

இணுவில் கிழக்கு, கொக்கன் வளவைப் பிறப்பிடமாகவும் மன்னார் பெற்றாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை விஜயரட்ணம் 28.07.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் உரும்பிராய் சிவன் வீதியைச் சேர்ந்த காலஞ் சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் தாட்சாயணி, லக்ஸ்ஷாயணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் திலிப்குமார் (நில அளவையாளர்), சுதாகர்(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நித்திகாவின் அன்புப் பேரனும்.

மனோரஞ்சிதம் (கனடா), செல்வரட்ணம் (செல்வம் பிரதர்ஸ் மன்னார்), யோகேஸ்வரி(கனடா), பவளமணி, ராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீஸ்கந்தராஜா, கமலாம்பிகை, ஸ்ரீகுமார் (ஜேர்மனி), கமலராணி, செல்வக்குமார்(ஜேர்மனி), சசிக்குமார்(கனடா), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

023 225 0423
023 222 3927
077 506 0163

தகவல்:
குடும்பத்தினர்.

என்றார். (த) | கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-10)



# அல்வ
# அருள்மிகு ஸ்ரீ முத்துமா
# தேர்த்திருவிழா சிறப்

## ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி



அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை இந்த அண்டசராசரம் அனைத்தையும் காத்து உயிர்களின் தாய்த் தெய்வமாக உலகமாதாவாக என்றும் உயிர்கள் உய்வு பெறும் விதமாக இவ்வுலகினை படைத்து காத்து அழித்து மறைத்து அருளி என்ற பஞ்ச கிருத்தியங்களிலும் தாயாக தாய்த்தெய்வமாக வேண்டுவோர் வேண்டும் அருட்சக்தியாக ஆனந்த சொரூபினியாக விளங்கும் அம்பிகை அல்வாய் வேவிலந்தையிலே பன்நெடுங்காலமாக கோயில் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் பொருட்டு பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றாள்.

இத்தகைய அம்பிகை இந்த ஆண்டு மகோற்சவத்தில் பதினான்காம் நாள் உற்சவமான இரதோற்சவத்தில் அடியார்களின் பிணிகளை நீக்கி ஆன்மாக்கள் ஈடேறும் வண்ணம் அழித்தல் தொழிலை குறிக்கும் உற்சவத்தில் உற்சவ மூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலிக்க இருக்கின்றாள் அன்னையின் அழகிய சித்திரத்தேரிலே அண்டங்கள் அனைத்தையும் படைத்து படைத்த வண்ணம் காக்கும் தேவிதேரேறி வருகின்ற வேளை அனைத்து மெய்அடியார்களும் ஆலயத்திற்கு வந்து அன்னையின் கடைக்கண் பார்வையிலே அமிழ்தினினும் இனித அருட்சுவையை உணர்ந்து தேவேந்திர பெருவாழ்வு கிடைக்கும் வண்ணம் வாழ வாழ்த்துகின்றேன். அன்னையின் வடம் பிடித்து ஆனந்த வாழ்வு வாழ பிரார்த்திக்கிறேன்.

''அம்பிகையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.''

சிவப்பிரம்மஸ்ரீ சதாசிவ சிவகுமாரக் குருக்கள்
ஆலயப்பிரதம குரு

## ஆலய மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



நிகழும் மன்மத வருடம் ஆடி மாதம் பூரணையை முன்னிட்டு அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மனுக்கு மஹோற்சவத்தின் ஓர் அங்கமாக விளங்கும் இரதோற்சவம் இன்று காலை 9.00 மணியளவில் அம்பாள் ரதத்தில் ஆரோகணித்து தீய சக்திகளை அழித்து மக்களை ரட்சிக்கும் பொருட்டு வேண்டுவோர் வேண்டும் வரங்களைப் பெற்று உஷ்ண சம்பந்தமான வியாதிகளை நீக்கி 7 செவ்வாய் யார் ஒருவர் நம்பிக்கையோடு குங்கும அரச்சனை செய்கிறார்களோ அவர்கள் பிரார்த்தனைகள் நிறைவேறுவது பலர் அறிந்த உண்மை.

அம்பிகைக்கு காவடி, கரகம், பால்குடம், கற்பூரச்சட்டி, பிரதட்டை செய்தல், அடி அழித்தல் போன்றவற்றைச் செய்யும் அடியார்களுக்கு பரிபூரண திருவருட்கடாட்சம் கிடைப்பதில் எதுவித ஐயமும் இல்லை. முத்துமாரித்தாய் இருமுறை சதசண்டி யாகம் நிறைவு பெற்று மூன்றாவது முறையாக 2016 இல் மாசி மகா மகத்திலும் யாகம் காண திருவருள் கைகூடியுள்ளது. அவள் அருளாலே இவ்வாலயத்தில் 15 தினங்களும் இந்து வாலிபர் சங்கத்தினால் அன்னதானம் மிகவும் சிறப்பாக இடம்பெறுகின்றது.

இவ்வாலய நிர்வாகத்தினர் மிகவும் சிறப்பாக ஆலயத் திருப்பணி, ஆலய வழிபாடு, கிரியைகள் நடைபெற பெரிதும் பாடுபடுகிறார்கள். இங்கு வழிபட வரும் வெளிநாட்டவர்களும் உள் நாட்டவர்களும் திருப்பணிக்கு பெரிதும் உதவி வருவதைக்காணக் கூடியதாயுள்ளது.

அனைவருக்கும் மஹோற்சவ குருவாகிய நான் ஆசி கூறி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

- ஆஸ்தான குரு சிவப்பிரம்ம ஸ்ரீ சுரேஸ்வர குருக்கள்.

## தேர்வடம் பிடிப்போம்



'' என்கடன் பணி செய்து கிடப்ப... வாக்கிற்கு இணங்க ... பிகை ... தன்னை நன்றாக பணிசெய்யுமா... அம்பிகை மீது கொண்ட ஈடுபா... பணியை இனிதே அனைவரது ஒத்... செய்து என் உள்ளம் புழகாங்கித... தேரில் வடம் பிடிக்க அனைவரையும்...

எத்தகைய செல்வச் சிறப்புக்கள் பெற்றாலும் ... செய்யும் வாய்ப்பு கிடைப்பது அரிது. எனவே எமது ... ஊடாக அம்பிகையினை இன்று நாம் புதுப் பொலி... வடமராட்சியில் மாத்திரமன்றி நாடுமுழுவதும் ... உச்சரிக்கப்படுமளவிற்கு அருளாட்சி நடத்தும் அம்பி... முருகன் சித்திரத் தேரில் புடை சூழ ஆண்கள் ... மறுபுறமும் வடம் பிடிக்க அடியவர்களுக்கு அருளாட்... அற்புத காட்சியை நாம் கண்டு இன்புறுவோம்.

கிடைத்தற்கு அரிய பேறாம் இவ்வாலய சே... அனைவரையும் அன்புடன் பாராட்டுகிறேன். அ... ஒன்றாக அமைந்து இருப்பதுவே ஆலயத்தின் உன்னத... எனவே அன்னையை நாளும் தொழுத எமக்கு அன்னை... வல்லமையால் எம்மை காக்கும் அற்புத அன்னை... அருளாட்சி பெற்று ஆனந்த பெருவாழ்வு வாழ்வோம்.

தலைவர்- ஆ...

## ஆலய பரிபாலன சபை பொருளாளரின் வாழ்த்து



ஆத்தாள் அண்டமெல்லாம் பூத்தாள்
பூத்தவண்ணம் காத்தாள்........ என அன்னையைப் பாடினார் அன்னையின் அடியவன் அபிராமிப்பட்டர்பிரான். எனவே எம் அன்னை தாய்த் தெய்வத்தின் நாயகி அபிராமவல்லி புவியின் ஜீவன்களின் அன்னை. இத்தகைய அன்னைக்கு, ஆலயம் அமைத்தனர் நம்முன்னோர். இத்தகைய உயர் சிறப்புமிகு அன்னை வேவிலந்தை என்ற பதியிலே வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மனாக அருள் மழை பொழிகின்றாள். புவனம் பதின்நான்கையும் படைத்து படைத்த வண்ணம் காத்து உலகில் உயிர்கள் யாவும் உன்னத பணிவிளங்க இருப்பது போல எம்மையும் வாழ வைத்திருக்கும் அன்னைக்கு இன்று தேர் உற்சவம்.

தேர்த்திருவிழா அழித்தல் தொழிலை உணர்த்துவதாக நம் முன்னோர் கருதினர். எம்மிடம் உள்ள ஆணவமலத்தை அழித்து ஆத்ம ஞானத்தை வழங்கி அருள்பாலிப்பதாக நாம் எண்ணுகின்றோம். இத்தகைய உன்னத படைப்பில் நாம் உயர்ந்து இருப்பதனால் அன்னையின் அடியினை தொட்டு அவளின் தேர் வடம் பிடிப்பதற்கு எமக்கு கிடைத்தது பெரும் பேறு. எனவே உன்னதமான அன்னையின் வடத்தில் நாம் பிடிப்பதால் எம்மிடமுள்ள தீய குணங்கள் அகன்று உன்னத மனிதராக வாழும் வகை தெரிந்து வாழலாம். எனவே அடியவர்கள் அனைவரும் திரண்டு அன்னையின் திருவடம் பற்றி அவள் கருணையில் நாம் ஆனந்தம் காண்போம் என வாழ்த்துகின்றேன்.

எம் அன்னையின் திருப்பணிக்கு அன்று முதல் இன்றுவரை வாரி வழங்கும் அன்னையின் அடியவர்களை வாழ்த்துகின்றேன். தங்களின் பணியினால் உன்னத இறைவியின் பாதக் கமலங்கள் எமக்கு என்றும் நிலையாகக் காத்திருக்கும் என வாழ்த்தி அம்பிகையின் பாதார விந்தங்களை வணங்கி வடம்பிடிக்க வாரீர் வாரீர் என வேண்டுகின்றேன்.

க. புவனேந்திரன்
பொருளாளர் - ஆலய பரிபாலன சபை.

## வேண்டும் வரம் தரும் வேவிலந்தையாளுக்கு இன்று இரத உற்சவம்.



பழம்பதியாக பன்னெடுங்காலமாக கலை, பண்பாட்டு விழுமியங்களில் உயர்வு பெற்று வந்தோரை வரவேற்கும் மக்களாக எம் இனம் பண்பாடு, கலாசாரம் என்ற அனைத்து விடயங்களையும் காத்து தமிழும் சைவமும் தழைத்து ஓங்கும் வண்ணம் பல அறிஞர்களையும் ஆன்மீக வாதிகளையும் கண்ட அல்வாய் என்ற எம் ஊரில் அருமருந்தொன்று உண்டு. அனைவரது பிணிக்கும் மருந்து அளிக்கும் அமிர்தமாக அன்று உடைச்சி நாச்சியாரின் வழித்தோன்றல்களினால் ஆதரிக்கப்பெற்று உயர்வு கண்ட எம் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கு இன்று இரதோற்சவம்.

அம்பிகையின் அடியவனாகி அம்பிகைக்குப் பணி செய்ய எனக்குக் கிடைத்தது பெரும் பேறு என நான் கருதுகின்றேன். அம்பிகையின் ஆலயம் என்றாலே புனிதம். ஆயிரம் ஆயிரம் அடியவர்களை தன்னகத்தே ஈர்த்து இன்று பெரும் அடியார் கூட்டத்தையே தன்னிடம் கொண்டு விளங்குகின்றாள். நேரம் தவறாத பூஜைகள், அடியார்களுக்கான ஒழுங்கான உபசரிப்புக்கள், எவரும் வெறுப்படையாது மனநிம்மதியுடன் நேர்த்திகளை நிறைவேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்ற ஒழுங்கு, தேவையான போது தங்கள் தேவைகள் நிறைவேற்றக்கூடிய ஒழுங்கமைந்த பரிபாலன முறை இவையாவற்றையும் தன்னகத்தே கொண்டு வேண்டுவோர் வேண்டும் வரம் ஈயும் வேவிலந்தைப் பதியாளாக வீற்றிருக்கும் அம்பிகையின் தேர்வடம் பிடிப்போம். அன்னையின் கடைக்கண் பார்வையிலே அகமகிழ்வு அடைவோம்.

அன்னையின் சன்னிதானம் இயற்கை எழில் கொஞ்சும் மரங்களால் சூழப்பெற்று அடியார்களின் பெருநிதியால் அழகிய திருப்பணி வேலைகளை நிறைவு செய்து எதிர்காலத்தில் சமூகப்பணிகளையும் முன்னெடுக்கும் சிறந்த கட்டுக்கோப்புக்களை எல்லாம் உருவாக்கி அல்வை ஊருக்கே பெரும் பேறாக விளங்கும் அம்பிகையினை போற்றி பாடி அவளின் திருப்பதியில் சரியை, கிரியை தொண்டுகள் இயற்றி என்றும் வையத்துள் வாழும் வகை தெரிந்து வாழ்வோமாக.

ச.குமாரதேவன்
தர்மகர்த்தா சபை உறுப்பினர்.

## தேர்வடம் பிடித்து மேலி



அல்வாய் வேவிலந்தைப் பதியில் அமர... பொழிந்துவரும் அன்னை ஸ்ரீமுத்துமாரி அம்...

என்றும் எங்கும் நிழல்பரப்பி நிற்கும் ... மத்தியில் அழகொளிரும் இராசகோபுரம், ... எழுந்தருளி அருளாட்சி புரியும் நம் அன்னை... சித்திரத் தேர்களில் விநாயகர் முருகன் முன்... பரவசமூட்டவல்லது. ஆண்,பெண் இரு... வடத்தையும் ஒவ்வொரு பாலாரும் இழுத்து வருகின்றபே... செல்வதனை உணர்கின்றோம்.

தேர்த்திருவிழா ஒரு சமுதாய விழா சாதி,இனம், ... பிள்ளைகளாகிய நாம் அனைவரும் ஒன்று கூடித் தேர் இழுப்... பிடிக்கலாம் என்பது பெரியோர் வாக்கு.

நம் கன்ம வினைகளை வேரறுத்து புனிதர்களாக்க ... உள்ளன்போடு பக்தி சிரத்தையோடு, தீதினை ஒழித்து நல்ல...

தேர் விழா சிறக்க வாழ்த்துகின்றேன்.

ஓய்வ...

## தேரேறி வரும் முத்



அண்ட சராசரங்களை எல்லாம் ஆட்சி... பகுதியில் குடியமர்ந்து நல்லாட்சி புரிந்து வ... பெறுகின்றனர். நாடி வந்தோர் நலம் பெற்... முன்னர் அடியவர் உள்ளத்தில் தன் விருப்... கொண்ட தலமே அல்வாய் முத்துமாரி அம்ம... நன்று என்ற வாக்கிற்கிணங்க ஆலயத்திற்... நல்லருள் பெறவைக்கும் தெய்வீக உணர்... ஆலயத்தின் அமைப்பு, பூஜை முறைகள், ஒ... பக்திப் பரவசமாக்கும் அம்பிகையின் அருள் ... உள்ளத்தில் அமைதியும் சாந்தியும் பெறுவர்.

அம்பிகையின் அருள் வேண்டி வருவோர் தாம் ஆலயத்தில்... அவை எல்லாம் இணைந்து ஆலய கருமங்களை எல்லாம் நிறை... ஆலயத்தில் மஹோற்சவம் இறைவியில் பஞ்சகிரு... பஞ்சகிருத்தியங்களில் ஒன்றாகிய அழித்தல் தொழிலை உ... தேரில் ஆரோகணித்துவரும் காட்சி அற்புதமானது. அடியவ... படைத்திலனே" என ஏங்கி நிற்பர். நயன தீட்சையால் ... உடல்பிணியை அழிக்கும் நன்னாள் தேர் உற்சவமாகும். உ... நன்னாள் தேர் உற்சவமே. அத்தகைய தேர் உற்சவமாகிய ... உள்ளக்கயமைகள் நீங்கி நல்லருள் பெறுவோமாக. ஆ.சிவநாத...
அதிபர்.ய...

## நல்வாழ்வு தந்தருளும் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன்



தம் அடியார்களுக்கு அருள் வெள்ளத்தை அள்ளி வழங்கும் பொருட்டே, விழாக் காலங்களில் இறைவன் எழுந்தருளி வீதிவலம் வருகிறான். அத்தகைய நல்விழாக்களில் சிறப்பு மிக்கது தேர்த்திருவிழா. தன்னை நாடிவந்து கூடும் அடியார்கள் குறைதீர்த்து அவர்களுக்கெல்லாம் . நல்வாழ்வு மலரச் செய்ய அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் இன்று தேரேறி வருகிறாள். அன்னையின் கடைக் கண்பார்வை எமது துயரங்கள் அனைத்தையும் நீக்கி விடும் என்ற நம்பிக்கையுடன் அவளது பாதார விந்தங்களைப் பற்றிப் பிடிப்போம்.

இந்த நன்னாளில் எம்மத்தியில் நிலவும் வேற்றுமைகள் அனைத்தையும் களைந்து நாமனைவரும் ஒன்றிணைந்து அவள் அருட் கடாட்சம் பெற்றிட வடம் பிடித்து தேர் இழுப்போம் வாரீர் !

ஈ. சரவணபவன்
உதயன் குழுமத் தலைவரும்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும். (யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மாவட்டம்)



# வாய் வேவிலந்தை
# ாரி அம்மன் தேவஸ்தான
# ப்பு மலர் - 30.07.2015

## திருத்தல வரலாறு



தமிழர் தாயகத்தை வன்னி மன்னர்கள் ஆண்ட போது அல்வாய் என்ற கிராமத்தில் சில நிலவுடைமையாளர்கள் வல்லமை பெற்றிருந்தார்கள். மழவராயர், மாப்பாணர், மணிவீரர் முதலியோர் இந்த மரபில் தோன்றியவர்கள் தான்.

வீரமாப்பாணர் முதலியார், குமரவேலர், கந்தர் ஆகியோர் அவரது புலவர்கள் வள்ளிநாச்சியார் அவரது ஒரேயொரு மகள். இவர் உடைச்சி என்று எல்லோராலும் அழைக்கப்படுவர். இவர் ஓர் விதவைப்பெண் ஆவார். இவரது காலத்தில் அக்கம்மா என்ற பெண் தெய்வத்தின் மாயங்கள் பற்றியும் அதன் அதீத ஆற்றல் பற்றியும் ஊர் முழுவதும் ஒரே பேச்சு. ஊரின் கிழக்கே பரந்த பிரதேசம் மாரியில் வெள்ளம் தேங்கி பெரிய குளம் போல் காட்சி தரும். ஒரு குளம், ஒருகிணறு, ஒரு குகை. துலுக்கன் கோட்டை என்ற காணியில் குகை, அருகில் நாச்சிமார் கோயில் இவையாவும் மாயா +அக்கை, மாயா+கை என அழைக்கப்படும் மாயக்கை பிரதேசம்

உடம்பே தெரியாது நீட்டிய ஒரு கையினை உடைய ஒரு பெண் தெய்வம் அது பலி கேட்பதாக ஊரவர் பேசிக்கொள்வர். உடைச்சிக்கு மாயா அக்கை மேல் பயபக்தி அதிகம். அவர் அடிக்கடி அக்கம்மா அக்கம்மா என கூச்சலிடுவாராம். அக்காலத்தில் காத்தவராயன் கூத்து பார்க்க உடைச்சி தவறுவதில்லையாம். இதனால் முத்துமாரி மீது அவருக்கு அதிகபிரியம். விதவை ஆகையால் வெண்பட்டு உடுத்தி ஆண்டு தோறும் தோணி மூலம் மதுரை மீனாட்சி தரிசனம் செய்யச் செல்வாராம். அங்கு ஒரு அம்மன் வெண்கலச் சிலையை வாங்கி வந்து தனது வீட்டில் வைத்து பூஜை செய்து மகிழ்வாராம். அந்த அம்மனை தனக்கு பின் யார் ஆதரிப்பார் என்ற கவலை உடைச்சியை வாட்டிய போது அம்பாள் கனவில் தோன்றி ''வள்ளீ கவலைப்படாதே உங்கடை அந்தக்காணி வேவிலந்தைக்காணி எனது தலவிருட்சமாகத் தோன்றி வேம்பும் இலந்தையுமாக காட்சி தருகின்றதே அது யாருமல்ல வேம்பு நான் இலந்தை சிவம் என அறிந்து கொள். அதுதான் எனக்குப் பிடித்த இடம். அங்கே என்னை வைத்து விளக்கேற்று'' என கனவுரைத்த போது வள்ளியால் கொட்டில் கட்டி வணங்கப்பெற்று தோன்றியது தான் இத்திருத்தலம். வள்ளியின் வம்சாவழியினர் பராமரித்து வரலாயினர்.

இதனைத் தொடர்ந்து 1827 இல் பொது நிர்வாக அமைப்பினை உருவாக்கினர் என்றும், அதில் நாற்பது உறுப்பினர்கள் எனவும் 5பரிபாலன உறுப்பினர் என்பதும் அமையப் பெற்றதே முதலாவது நிர்வாகம் ஆகும். இச்சபையானது 1928 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. காலப்போக்கில் கோயில் பொது நிர்வாகமாக அமையவேண்டும் என்பதற்கமைய 1930 அளவில் புதிய நிர்வாகக் கட்டமைப்புத் தோன்றி பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆலயம் பொதுவுடமை ஆனது. அதனைத் தொடர்ந்து 10 நாள் உற்சவம் 15 நாள்களாக மாற்றப்பட்டு 10 நாள்கள் உற்சவம் வேளாண் பெருமக்களுக்கும் 5 நாள் உற்சவம் வேளாண் குடிமக்களுக்குமாக மாற்றப்பட்டு இன்றும் நடைமுறையில் உள்ளது. அதன்படி ஆலயம் அல்வையூரின் சொத்தாகியது. 1972 இல் மீண்டும் புதிய நிர்வாகசபை பொறுப்பேற்று பலதிருப்பணிகளை முன்னெடுத்தது. மீண்டும் 1989இல் புதிய நிர்வாக சபை அமையப்பெற்று பல திருப்பணி வேலைகள் நிறைவடைந்தன.

மீண்டும் 1993 இல் புதிய நிர்வாகசபை தோன்றிய போதும் 1994 இடைக்காலநிர்வாகசபை தோன்றியது. இதனைத்தொடர்ந்து பலதிருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு. மீண்டும் 1999 இல் புதிய நிர்வாகசபை பொறுப்பேற்றதுடன், திருப்பணிச்சபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இன்று வரை பலதிருப்பணிகள் உள்நாட்டவர்களின் நிதியிலும் புலம் பெயர் அன்பர்களின் பெருநிதியினாலும் பிரமாண்ட திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அம்பிகையின் சன்னிதியில் மாதாந்த உற்சவங்களுடன் செவ்வாய்க்கிழமை உற்சவம் மிக விமரிசையாக இடம் பெறும். அம்பிகையின் மஹோற்சவம் ஆடி மாத பூரணையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 15 தினங்கள் நடைபெறும். திருவிளக்கு பூஜை, சுமங்கலி பூஜை, பக்தோற்சவம், வசந்தோற்சவம், சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவம் என்பன விஷேடதிருவிழாக்களாகும். கடந்த இருபது ஆண்டுகளில் ஆலயத்தின் திருப்பணிகள் மிகவும் உன்னதமானபணியாகவும் பல கோடியில் செய்யப்பட்ட திருப்பணிகளைக் காணமுடிகிறது. இவற்றுக்கெல்லாம் அம்பிகையின் நிர்வாகசபைக்கு கிடைத்த தலைவர் சி.கணேசமூர்த்தி அவர்களின் முழு முயற்சியும் அதற்குப் பலமாக இருந்த பொருளாளர், செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் ஆகும். அம்பிகைக்கான சித்திரத்தேர்,விநாயகர் முருகனுக்கான சித்திரத்தேர் திருமஞ்சம் என்பவற்றுடன் அவை தரிப்பதற்கான தேர்மாடங்கள், தேரோடும் வீதி, இராஜகோபுரம் அதற்கப்பால் மணிமண்டபம், அம்பிகையினை நோக்கிய வண்ணம் அமைந்துள்ள பிரம்மாண்டமான நந்தி அதற்கப்பால் கலாசார மண்டபம், அமுதசுரபியாக விளங்கும் அன்னதானமடம் நவக்கிரகமண்டபம், ஆலய உள்வீதியெங்கும் மாபிள் பதித்ததரை பூங்காவனமண்டபம், ஆலயத்தின் அழகிற்கு அழகு சேர்ப்பதாக அமைந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ஓசை கொடுத்த நாயகியாக விளங்கும் அம்பிகைக்கு புலம்பெயர் வள்ளல் அ.ஈஸ்வரமோகன் அவர்களின் அருட்கொடையான 50 இலட்சம் ரூபா செலவில் 1600 கிலோ எடை கொண்ட காண்டா மணி வடமராட்சி எங்கும் ஓசை எழுப்புகின்றது. இன்று அடியவர்கள் அச்சம் இன்றி வணங்கும் வகையில் 24 மணிநேரமும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு ஆலயத்திற்கு வரும் அடியவரின் பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எனவே இன்று ஈழவளநாட்டில் உன்னத சக்தி ஆலயங்களுள் ஒன்றாக எமது ஆலயம் உயர்வு பெற்றுள்ளமை எமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

'' முக்கண்ணியை தொழுவார்க்கு ஒரு நாளும் தீங்கில்லையே''

தொகுப்பு: ந.தேவராஜா அதிபர்
தர்மகர்த்தா சபை உறுப்பினர்.

## ...ப்போம்

...ய்து கிடப்பதே'' என்ற ஆன்றோர் ...பிகை ...னை படைத்தனள் ...செய்யுமாறே என்ற தன்மையில் ... ஈடுபாட்டால் அவள் திருப் ...னவரது ஒத்துழைப்புடன் நிறைவு ...புளகாங்கிதம் அடைய இன்றைய ...னவரையும் வேண்டுகின்றேன்.

...பற்றாலும் இறைவனுக்கு பணி ...னவே எமது ஆலய பரிபால சபை ...யுப் பொலிவு காணவைத்தோம். ...முவதும் அம்பிகையின் நாமம் ...தும் அம்பிகை இன்று விநாயகர் ...ஆண்கள் ஒரு புறமும் பெண்கள் ...அருளாட்சி நல்க எழுந்தருளும் ...ம்.

...ாலய சேவைக்கு அர்ப்பணித்த ...றேன். அனைவரது கரங்களும் ...ன் உன்னத வளர்ச்சிக்கு காரணம். ...க்கு அன்னை தேரேறிவந்து தனது ... அன்னையின் வடம் பிடித்து ...வாழ்வோம்.

சி.கணேசமூர்த்தி
...லைவர்- ஆலய பரிபாலன சபை

## ஆலய பரிபாலன சபை செயலாளரின் வாழ்த்து



''ஆய கலை கள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர் ிக்கும் என்னம்மை
தூய உருட் பளிங்கு போல்வாள் - என்
உள்ளத்தி னுள்ளே இருப்பாள் இங்கு வாராது இடர்''

எனப் பாடினார் குமரகுருபர சுவாமிகள். எனவே அந்த ஆய கலைகள் அறுபத்து நா கையும் எமக்கு அருளும் அன்னை வேவிலந்தைப் பதியில் பன்நெடுங்காலமாக அருளாட்சி நடத்தும் அற்புத பதியாக விளங்கும் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு அமை ப் பெற்ற பரிபாலன சபையின் செயலாளராக இருக்க எனக்கு கிடைத்தது பெரும் பேறு. எனவே அத்தகைய உயர்விற்கு அன்னையின் கடைக்கண்களே காரணம்.

எம் அன்னையின் இரத உற்சவத்தில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு உயர்வு தாழ்வு இன்றி வடம்பிடிப்போம். எம்மிடம் உள்ள இராட்சத குணங்கள் நீங்கி வையத்துள் வாழும் வகை தெரிந்து மண்ணுலகில் மனிதனாக வாழும் பாக்கியம் பெற்ற நாம் அன்னையின் இரதத்தில் பங்கெடுத்து அவள் கருணை பெறுவோம்.

. அனைவரும் ஒன்றிணை து செய்த பல திருப்பணிகளின் உன்னதங்களை ஒன்றாக அனுபவித்து அன்னை ஸ்ரீ மு த்துமாரியின் கடைக்கண் பார்வையால் அனுபூதிமான்களாக உயர்வு பெற்று அன்னையின் அடியினை என்றும் போற்றிடுவோம். அன்னையின் இரதோற்சவத்தில் நாமும் வடம்பிடித்து சகல சௌபாக்கியங்களும் பெற்று இன்புற்று வாழ்வோம் என வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

க.சிவபாதசுந்தரம்
செயலாளர் - ஆலயபரிபாலன சபை.

## ...து மேலிடம் பிடிப்போம்

...தியில் அமர்ந்து அண்டசராசரங்க ளெல்லாம் அருள்மழை ...துமாரி அம்மனின் இரதோற்சவம் இன்றாகும்.

...நிற்கும் ஆல்,அரசு வேம்பு,இத்தி,இலுப்பை மரங்களின் ...சகோபுரம்,மணிமண்டபம், பூங்காவன மண்டபத்துடன் ...நம் அன்னை, பல்லாயிரம் பக்தர்கள் கூடியுள்ள வீதியில் ...ருகன் முன்செல்ல தொடர்ந்து பின்னே வருகின்ற காட்சி ...பெண் இருபாலாரும் தேவியின் தேரின் ஒவ்வொரு ...வருகின்றபோது எழும் அரோஹரா ஒலி வானைப்பிளந்து

...தி,இனம், தொழில், அந்தஸ்து கடந்து அம்பிகையின் ...தேர் இழுப்பது சிறந்தது. தேர்வடம் பிடித்தால் மேல் இடம்

...தர்களாக்க நாம் வாழ தேரேறி வரும் அம்பிகையை ...ழித்து நல்லன செய்து உய்வோமாக.

நா.சந்திரசேகரம்
ஓய்வுநிலை அதிபர், ஆலய பரிபாலன சபையினர்.

## ...வரும் முத்துமாரி

...லாம் ஆட்சி புரியும் அம்பிகை அல்வாய் வேவிலந்தைப் ...சி புரிந்து வருகிறாள். தேடிச்சரணடைந்தோர் கோடி நலன் ...ர் நலம் பெற்று வாழ்கின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு ... தன் விருப்பை உணர வைத்து அம்பிகை இருப்பிடம் ...துமாரி அம்மன் ஆலயமாகும்.ஆலயம் தொழுவது சாலவும் ... ஆலயத்திற்கு ஒருமுறை வந்தோர் தொடர்ந்து வந்து ...ய்வீக உணர்வை ஆலயத்தில் ஊட்டி வைத்துள்ளார்கள். ...முறைகள், ஒழுங்குகள், சாந்தமான சூழல் அனைவரையும் ...கயின் அருள் வெள்ளத்தில் மூழ்குவோர் உடல் பிணிநீக்கி

...ம் ஆலயத்தில் எப்பணி செய்வோம் என்ற உணர்வு மேலிட ... எல்லாம் நிறைவுற செய்து வைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ... பஞ்சகிருத்தியங்களை உணர்த்தி நிற்கின்றது ...தொழிலை உணர்த்துவது தேர்த்திருவிழாவாகும். அம்பாள் ...னது. அடியவர் அவள் காட்சி காண "நாலாயிரம் கண் ... தீட்சையால் அம்பிகையை நாடி வரும் அடியவர்களது ...ற்சவமாகும். உள்ளக் கயமைகள் நீங்கி நல்லருள் பெறும் ... உற்சவமாகிய இன்றைய நாளில் அவள் காட்சி கண்டு ...க. ஆ.சிவநாதன்

அதிபர்.யா/புற்றளை மகாவித்தியாலயம் , புலோலி.

## கேட்கும் வரம்

பல்லவி
கேட்கும் வரம் ஒன்றுதா அம்மா - எங்கள்
கேதாரகௌரி சிவ நாயகியே- தாயே - கேட்கும் வரம்
அனுபல்லவி
வாக்கினில் நிறைந்தருள் வானதியே- உனை
வந்தனை செய்திட தா அருளே - கேட்கும் வரம்
சரணம்
அல் வயின் அன்னையே ஆரணியே - எங்கள்
அம்ப ன முத்து மாரியம்மா - நம்
எல்ல ரும் தொழும் ஏந்திளையே- உனை
எண் ிவந்தேன் வரம் வேண்டிடவே- கேட்கும் வரம்

தேரி இவர்ந்து அருள் தேவியரே- குறை
தீர்க் செழுந்தமிழ் பாமினியே -உனை
பாட ல் பரவிட வா துணையே- சிவன்
மாட உறை தவ மாமணியே- அம்மா -கேட்கும் வரம்

வாட ம் பவ நெறி மாய்ப்பவளே- தவம்
காட் சிவ முறை காரணியே - நீ
ஆட் ஆடும் அடியவன் நான்-எனை
கூட் நரைகழல் சேர்த்திடுவாய் -எனக்கு கேட்கும் வரம்

கன் ர் கூட்டம் சுற்றிவர- அவர்
எண் ய எண்ணம் முடிப்பவளே-
உன் உறு துணை சேர்ப்பவளே- எமக்கு
உற் ளை முத்துமாரி அம்மா- நாம்- கேட்கும் வரம்

ஆக்கம் : குடாநீருரான்

இராகம் ஆனந்தபைரவி தாளம் - ஆதி

பல்லவி
அற்புதமாரி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதியருள்வாயம்மா - தேவி
(அற்புதமாரி)

அனுபல்லவி
பற்பலரும் போற்றும் பதிவேவிலந்தை தன்னில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட
(அற்புதமாரி

சரணம்
சித்திரத்தேரினிலே சிங்காரி நீயமர்ந்து
பக்தரைக் காத்தருள பராசக்தி நீ வருவாய்
இத்தலம் மீதினிலே எத்தனை புதுமையம்மா
நித்தமும் புரிபவளே நெடுமாலின் சோதரியே
(அற்புதமாரி)

இராகம்: கல்யாணி
வேப்பிலை விரும்புகின்ற வேவிலந்தைத்தாயே
வேப்பிலையால் நீ தடவி வினைகளைப் போக்கிடம்மா
பம்பை உடுக்கையுடன் பறையொலி முழங்கிடவே
பத்திரியைக் கைப்பிடித்தே பராசக்தி நீ வருவாய்
(அற்புதமாரி)

இராகம்:பாகேஸ்ரீ
புவனேஸ்வரி நீயே புவனத்தைக் காத்திடம்மா
பரமேஸ்வரி நீயே பக்தரைக் காத்தருள்வாய்
பாகேஸ்ரீ தாயே பார்பதியே நித்ய
லோகமாதா நீயே உலகில் துணையம்மா
(அற்புதமாரி)

இராகம்: ரஞ்சனி
கங்கையைத் தலைமேல் வைத்த கங்காதரன் தேவியே
எங்களின் குறைகேட்டு இனியவரம் நல்கிடுவாய்
தஞ்சம் என வந்தோம் தாயே உம் சேய் நாம்
ரஞ்சனியே இரட்சிப்பாய் கெஞ்சுகிறோம் அம்மா
(அற்புதமாரி)

ஆக்கம்: இறைஇசை அரசு, த.சந்திரதாஸ் (ஆலய ஓதுவார்)

## என்ன பேறு செய்தோமம்மா

அலைவந்து சேரும் அல்வையம்பதியில்
அலையென அடியவர் உன்மடிதனில்
வேவிலந்தை வந்தமர்ந்தாள் வேதனை தீர
வேண்டிவரும் அடியவர் உனதடியில்
மாதர் குலத்தரசி புவிதனிலே மாரியம்மா
மங்கையர்க்கு மங்களம் தந்திட வாருமம்மா.
அகிலம் போற்றிடும் உனதருளைத் தந்திடவே
அணைத்திடுவாய் எம் துயர் தீர்த்திடவே ........

பட்டருக்கு விண்தனில் திங்களானாய்
பார் போற்றும் தேர் தனில் உலா வருவாய்
பாதியுரு பரமனுக்கு பாங்குடனே கொடுத்து
பாவங்களைப் போக்கிடுவாய் மாரியம்மா
பெருமையுறு உன்னருளை அல்வையம்பதியில்
பெற்றிடவே இங்கு என்ன பேறு செய்தோமம்மா.
சித்திரத் தேரேறி சிற்றிடையாள் எமைக்காக்க
சிறப்புடனே உலா வருவாய் தரணியிலே..........

ஆக்கம்: அல்வையூர் யோகி (த.யோகநாதன்)

என்றார். (த) கிறைமை குறிப்பிடத்தக்கது. (த-10)

# மஹிந்தவின் கொள்கைகள் மைத்திரிக்கு எதிரானவை

## உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 30

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மஹிந்தவின் கொள்கைக்கே இணங்கிப் போவதாகவும் ஆனால், மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைகளுக்கு எதிரானதாகும் என்றும் பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும் கொழும்பு மாவட்ட ஐ.ம.சு.மு. வேட்பாளருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும் –ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும் இடையில் இடைவெளி காணப்படுகின்றது. நாங்கள் பொருளாதாரம், கல்வி, அபிவிருத்தி என அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றுவதற்கான திட்டங்களையும் மக்கள் நல அம்சங்களையுமே உள்வாங்கியுள்ளோம். ஆனால், ஐ.தே.முவின் தேர்தல் விஞ்ஞாபனம் அதற்கு நேர்மறை யான திட்டங்களைக் கொண்டுள்ளது.

அரச நிறுனங்களைத் தனியார்மயப்படுத்தும் கொள்கையையே ஐ.தே.க. கொண்டுள்ளது.

த.தே.கூ.வின் கோரிக்கை களை ஐ.தே.க. நிறைவேற்றும். அதற்கமைவான தேர்தல் விஞ் ஞாபனத்தையே அவர்கள் முன்வைத்துள்ளனர். அமெரிக்கா, இந்தியா நாடுகள் சமஷ்டி முறையில் சுயாட்சியை எவ்வாறாவது ஐ.தே.கவிடமிருந்து பெற்றுத்தருவதாக த.தே.கூவிடம் வாக்குறுதி வழங்கியுள்ளது.

ஐ.ம.சு.மு. தேர்தல் விஞ்ஞாபனமானது மைத்திரிபாலவின் கொள்கைகளுக்கு முரணானதாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொண்டு இணங்கிப்போகத்தான் வேண்டும். மாற்றுக் கருத்துடையவர்கள் திருமணப்பந்தத்தில் இணைந்து விட்டுக்கொடுப்புடன் வாழ்க்கை நடத்துவது போன்றே செயற்பட வேண்டும். முரண்பாடுகள் இருந்தாலும் மைத்திரியின் திட்டம் 100 நாள்களை அடிப்படையாகக் கொண்டது. மஹிந்தவின் திட்டம் 5 வருடங்களுக்கானது. ஆகவே, இதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது–என்றார். (த–சி)

# 2016 மார்ச்சில் வைபை வலயமாகிறது இலங்கை.

கொழும்பு, ஜூலை 29

கூகுளின் அதியுயர் தொழில்நுட்பத்தினூடாக 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் முழு இலங்கையும் வைபை வலயமாக்கப்படும் என வெளி விவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எமது அரசால் நாட்டின் பிரதான இடங்களுக்கு இலவச வைபை' சேவையை வழங்கினோம். இதன் அடுத்தகட்டமாக முழு இலங்கையையும் வைபை' வலயமாக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்கான உடன்படிக்கை கூகுள் நிறுவனத்துடன் நேற்று (நேற்று முன்தினம்) செய்துகொள்ளப்பட்டது.

முழு இலங்கையையும் வைபை' வலயமாக்கும் திட்டத் துக்காக கூகுள் நிறுவனத்தின் உயர் தொழில்நுட்பம் பயன் படுத்தப்படவுள்ளது. செய்மதி தொழில்நுட்பத்தினூடாக செய்வதற்கு அதிகூடிய பணம் செலவிடவேண்டியுள்ளதால், பலூன்களின் மூலம் வைபை' சேவையை நாம் வழங்கவுள்ளோம். 13 பலூன்களை நாடுமுழுவதும் பறக்கவிடுவதற்கு தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். கல்வி, தொழில்நுட்ப ரீதியில் நாட்டை வளர்ச்சியடையச் செய்வதே எமது நோக்கமாகும். அத்துடன், உலகில் முழு நாட்டையும் வைபை' வலயமாக்கிய பெருமையும் இலங்கைக்குக் கிடைக்கும்–என்றார். (த)

## தமிழ்

கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:–

19ஆவது திருத்தச் சட்டம் மூலமாக ஜனாதிபதியின் நிறை வேற்று அதிகாரங்கள் இல்லாது செய்யப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆட் சிக்கு வந்தவுடன் அறிமுகப்படுத் தப்படவுள்ள புதிய அரசமைப்புத் திருத்தத்தில் நாங்கள் ஜனாதிபதி யின் அதிகாரங்களை மேலும் குறைக்கவுள்ளதுடன், பிரதமருக் கான அதிகாரங்களை அதிகரிக்க வுள்ளோம். அதுமட்டுமல்லாது, அனைத்துத் தரப்பினரதும் கருத்து களை ஆராய்ந்து புதிய தேர்தல் சீர்திருத்தங்கள் அடங்கிய 20ஆவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்துவோம்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது. ஒற்றையாட்சிக்குள் அடிமட்டம் வரை நாங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்போம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சமஷ்டி கோரிக்கையானது நல்லிணக்கத்துக்கும் சமாதானத்துக்கும் அச்சுறுத்தலாக அமையும். அவர்கள் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேசத் தலையீடும் அவசியம் என வலியுறுத்தியுள்ளனர்.

நான் தனிப்பட்ட ரீதியில் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளேன். இதற்கமைய எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் நாங்கள் உள்நாட்டு விசாரணைக்கே ஆதரவு வழங்குவோம். சர்வதேசத்தின் கைப்பொம்மையாக உள்ள ஐ.தே.க. அமெரிக்க, இந்திய நாடுகளின் தேவைகளையே நிறைவேற்றுகின்றது. இலங்கைக்கான ஆசிய பசுபிக் வலய இராணுவத் தளபதி தெற்காசியாவில் அமெரிக்காவின் அதிகாரத்தைச் செலுத்துவதற்காக இலங்கையில், திருகோணமலையில் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இதற்கு ஐ.தே.கவின் முழு ஆதரவும் உள்ளது. இதனால் நாங்கள் பெரும் ஆபத்தைச் சந்தித்துள்ளோம்.

பிரித்தானியர்களை நாங்கள் நாட்டை விட்டு விரட்டியதும் மீண்டும் நாட்டை மேற்கத்தியர்களுக்கு தாரைவார்க்கும் செயற்பாடாகும். இது இலங்கையில் தனித்துவத்துக்குப் பாரிய சவாலாக எதிர்காலத்தில் அமையும்–என்றார். (த–சி)

## சுட்டுக்கொன்றவரு

அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் கடந்த 2006 நவம்பர் 29 ஆம் திகதி உயிரி ழந்தார்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட உயிரிழந்த் இளைஞனின் சகோதரி தியாகராஜா மஞ்சுளா மற்றும் தாயார் தியாகராசா புனிதவதி ஆகியோர் வழங்கிய நேரில் கண்ட சாட்சியத்தின் அப்படையிலும், உயிரிழந்த இளைஞனின் மரண வாக்கு மூலத்தின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்ட அழகன் சசிதரன், தியாகராசா குமார், தில்லையம்பலம் அருந்தவராசா ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றால் சட்டமாஅதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் 2009 ஆண்டு டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி சட்டமா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றில் எதிரிகளுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இலங்கை சட்டகோவை 32 ஆம் பிரிவுடன் இணைத்து வாசிக்கப்படவேண்டிய 296 ஆம் பிரிவின் கீழ் கொலைச் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு இடம்பெற்று வந்தது. இந்நிலையில் தியாகராசா குமார், தில்லையம்பலம் அருந்தவராசா ஆகிய 2ஆம், 3ஆம் எதிரிகள் வவுனியா மேல் நீதிமன்றினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன், முதலாவது எதிரியாகிய அழகன் சசிதரன் (வயது 32) குற்றவாளியாக நேரில் கண்ட சாட்சியங்கள், மரண வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் என்பவற்றைக் கொண்டு குற்றவாளியாக இனங்காணப்பட்டு சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் சாவுத் தண்டனையை விதித்தபோது நீதிமன்றத்தின் மின்விசிறிகள், மின்குமிழ்கள் அனைத்தும் அணைக்கப்பட்டு அனைவரும் எழுந்து நின்றனர். தீர்ப்பு எழுதி ஒப்பமிட்ட பேனாவை நீதிபதி முறித்து எறிந்தவுடன் நீதிமன்றம் கலைக்கப்பட்டுச் சிறிது நேரத்தின் பின் மீண்டும் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. சாவுத் தண்டனை விதிக்கப்பட்டதும் குற்றவாளி நீதிமன்றில் கண்ணீர் விட்டுக் கதறியழுதார். இதேவேளை, இந்த வழக்கை அரசு சார்பில் சட்டத்தரணி நிசாந் நாகரட்ணம் நெறிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## சு.க. மத்திய

வடிக்கைக்கு எதிர்ப்புத் தெரி விக்கும் வகையில், கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பிரசன்ன சோலாங்காராச்சி தாக்கல் செய்த மனுவை நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித் துள்ளது.

கட்சித் தலைவரின் அனுமதி இன்றி மத்திய குழுவைக் கூட்ட அனுமதி அளிக்கக்கூடாது என பிரசன்ன சோலாங்காராச்சி மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுவரை தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்நிலையில், மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிர்ப்பு இருப்பின் ஓகஸ்ட் 7 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு மனுவின் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் அநுர பிரியதர்சன யாப்பாவுக்கு நீதிமன்றம் பணித்துள்ளது.

அதுவரை பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை நீடிக்கப்படுவதாகக் கொழும்பு மாவட்ட நீதிபதி ஹர்ச சேதுங்க அறிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யாப்பின் பிரகாரம் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டும் அதிகாரம் கட்சியின் தலைவருக்கு உண்டு என பிரசன்ன சோலங்காராச்சி தனது மனுவில் தெரிவித்துள்ளார். (த–சி)

## இலங்கை

அதிகாரிகள் உறுதிப்படுத்தியமையை அடுத்தே 45 பேரும் இலங்கை நோக்கி திருச்சியின் ஊடாக புறப்பட்டதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் ஏற்கனவே கடந்த மே மாதத்தில் 41பேரும் கடந்த மாதத்தில் 46 பேரும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## பயணப் பொதியில்

பார்த்துள்ளார். அதில் சடலமொன்று இருப்பதைக் கண்ட அவர், உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு அதனை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைத்துள்ளனர்.

குறித்த சடலம் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த–சி)

## ஐ.எஸ்.ஐ.எஸ்.

முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இருந்த இலங்கை முஸ்லிம் ஒருவர் அண்மையில் சிரியா வில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தார். அத்துடன், அவரின் சகோதரரும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பில் இருப்ப தாக உறுதியாகியுள்ளது. இலங் கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் பைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கின்றார்களா என்று ஆராய்ந்து, அவர்களுக்கு எதி ராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் உள்ளார்களா என ஆராய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஒரு விசேட குழுவை நியமித்தார். என்றாலும், அக்குழுவின் அறிக்கை இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ஐ.நா. அறிக்கை

தினம் திங்கட்கிழமை இரவு விசேட செய்தித் தொகுப்பு ஒன்றை வெளியிட்டது. அதில், செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட் விசாரணையின் அறிக்கையில் வெளியிடப்படவுள்ள சில ஆவணங்கள் ஐ.நா.விலிருந்து கசிந்து தமக்கு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டு அந்த ஆவணத்தில் அடங்கியுள்ள விடயங்களின் சாராம்சத்தை வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணத்தின் அடிப்படையில், இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக தொடர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்குமா என்ற கவலை ஏற்பட்டுள்ளதாக சனல் – 4 ஊடகம் தனது செய்தித் தொகுப்பில் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில்; பத்தாயிரக்கணக்கான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. கூறுகிறது. சுருங்கி வந்த நெரிசல் மிக்க பாதுகாப்பு வலயத்துக்குள். இலங்கை அரச படைகள் நடத்திய பீரங்கித் தாக்குதலிலேயே, இவர்களில் பெரும்பாலான மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது. அதேவேளை விடுதலைப் புலிகளும் கூட, தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் மனித கேடயங்கள் போன்ற மோசமான மீறல்களில் ஈடுபட்டதாகவும் ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க ஐ.நா.வுடன் இணைந்து – ஐ.நா.வின் தொழில்நுட்ப உதவிகளுடன் இலங்கை அரசு முழுமையான உள்நாட்டு விசாரணை ஒன்றை உருவாக்குவதற்கான, திட்ட வரைவு ஒன்றைக் கொண்டிருப்பதாக இந்த ஆவணங்களில் இருந்து தோன்றுகிறது.

கசிந்துள்ள ஐ.நா.வின் திட்டங்களின் படி, இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பங்காளர்களாக, இலங்கை அரசும் – வடக்கு மாகாணசபையும் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், வடக்கு மாகாண முதலமைச்சர், சி.வி.விக்னேஸ்வரன் இதுபற்றி தம்முடன் ஐ.நா. எந்தக் கலந்துரையாடலையும் நடத்தவில்லை என்று சனல் – 4 ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா.வின் ஒரு தலைப்பட்சமான இந்த நிலைப்பாட்டை தமிழ் சிவில் சமூகம் முழுமையாக நிராகரிப்பதாக, அந்த அமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

## சமஷ்டியை

களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதே, ஐ.தே.க. மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கையாகும். சமஷ்டி முறையிலான தீர்வை நாங்கள் ஏற்கமாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐ.தே.க. எந்த உடன்பாட்டையும் செய்து கொள்ளவில்லை. முன்னைய தேர் தலிலும் அவ்வாறு உடன்பாடு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த–5)

## சம்பந்தனுக்கு

மற்றும் அமைச்சர்களைத் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்களுக்கு வாகனங்களோ பாதுகாப்போ வழங்கப்படவில்லை.

எனினும் அரசியல் அமைப்பு பேரவையின் தலைவர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, உறுப்பினர்களான இரா.சம்பந்தன், முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் ஜோன் செனவிரட்ண ஆசியோருக்கு வாகனங்கள், பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

# மஹிந்தவின் மோசடியை சாட்சியுடன் நிரூபிப்பேன்

## பிரதியமைச் சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கெதிராகச் சட்டக் கடிதம் ஒன்றை அனுப்பியமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த, தமது ஊழல்கள் தொடர்பில் பேசுவோரின் வாய்களை அடைப்பதற்காகவே இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாக ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த எவ்வாறு சுனாமி நிவாரண நிதியை தமது சகோதரியின் கணக்குக்கு மாற்றி, நிதி மோசடி மேற்கொண்டார் என்பதைத் தன்



னால் சாட்சிகளுடன் நிரூபிக்க முடியும் என்றும் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் முன்னாள் நீதியரசர் சரத் என். சில்வாவின் குரல் பதிவு தம்மிடம் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமது கட்சிக்காரருக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதாக கூறி மஹிந்தவின் சட்டத்தரணி, அமைச்சர் மங்கள சமரவீர, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உட்பட்ட ஐவருக்குச் சட்டக்கடிதம் அனுப்பவுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், தாம் மஹிந்த ராஜபக்ஷவை நீதிமன்றத்தில் சந் திக்க எதிர்பார்ப்பதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த–சி)

# தோல்வியைத் தேடிப்பெற்ற ஒரேயொரு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மட்டுமே

## கூறுகிறார் அமைச்சர் கயந்த கருணாதிலக

கொழும்பு, ஜூலை 30
தோல்வியைத் தேடிப் பெற்றுக்கொண்ட ஒரேயொரு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள் ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் எத்தனையோ ஜனாதிபதிகள் பதவி வகித்துள்ளனர். எனினும், தனது பதவிக் காலம் முடிவடைய இரண்டு வருடங்கள் இருக்கையிலேயே தேர்தலை நடத்தி தோல்வியைத் தேடிக்கொண்ட ஒரே யொரு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, ஜே.ஆர்.ஜயவர்தன ஆகியோர் தனது பதவிக் காலம் முடிந்தவுடன் கௌரவத்துடன் விலகிச்சென்றனர்.

எனினும், ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், தமது சொந்த மண்ணில்கூட செல்வாக்கை இழந்து, குருநாகலில் போட்டியிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள ஒரேயொரு ஜனாதிபதி மஹிந்த மாத்திரமே.

தற்போது செய்வதறியாது தடுமாறிபோயிருக்கும் மஹிந்த நிவாரணம் வழங்கப்போவதாக வாக்குறுதிகளை வழங்க ஆரம்பித்துள்ளார்.

மஹபொல நிதியை ஆறாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்போவதாக குறிப்பிடுகின்றார். அவரது ஆட்சிக் காலத்தில் உற்பத்திகளை விற்பனை செய்யமுடியாத விவசாயிகள் மரக்கறிகளை வீதியில் கொட்டியதை மறக்கமுடியாது. எனினும், தற்போது விவசாயிகளுக்கு நிவாரணம் வழங் கப்போவதாகவும் கூறியுள்ளார்.

20 வருடங்களாக நாட்டை ஆண்டவர்கள் இன்று இளைஞர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்குவது குறித்து கதைக்கின்றனர். கடந்த காலங்களில் தரகு பணப் பரிமாற்றம் தொடர்பில் பேசப்பட்டது. மத்தளை விமான நிலையம் இன்று பயறு காயவைக்கும் இடமாக மாறும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளமைக்கு இதுவே காரணமாக அமைந்துள் ளது.

இந்த நாட்டை ஆண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்று விமல் வீரவன்ஸவின் கட்டுப்பாட்டில் இருப்பது குறித்து நாம் கவலையடைகின்றோம்–என்றார்.

(த)

## கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் முதல் கட்டம் சீன நிறுவனத்திடம்

கொழும்பு–கண்டி அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் ஒப்பந்தம் சீன நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எம்.சீ.சீ என்னும் சீன நிறுவனத்திடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொஸ்கம முதல் மீரிகம வரையிலான முதல் கட்ட பகுதி 32 கிலோ மீற்றர் தூரமுடையது. முதல் கட்டப் பணிகளுக்கு 145 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த)

# 7 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

முல்லைத்தீவு, ஜூலை 30
முள்ளியவளை மாமூலையில் 7 வயதுச் சிறுமியை 55 வயது வயோதிபர் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரைப் பொலிசார் வலை வீசித் தேடி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:–

கடந்த 27 ஆம் திகதி திங்கள்கிழமை குறித்த சிறுமியை வீட்டில் தனிமையில் விட்டுவிட்டுத் தாயார் வெளியே சென்றிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திய 55 வயது வயோதிபர் முற்பகல் 10 மணியளவில் சிறுமியை அணுகி குழவிக் கூட்டைக் காண்பிப்பதாகக் கூறி அருகேயுள்ள பற்றைக்குள் அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இதன் பின்னர் வீடு திரும்பிய தாயார் சிறுமியில் மாற்றங்களைக் கண்டு விசாரித்தபோது அவர் நடந்ததை விவரமாகக் கூறியுள்ளார். இதனை அடுத்துத் தாயார் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். முறைப்பாட்டின் பின்னர் மருத்து வப் பரிசோதனை அறிக்கைக்காக பொலிஸார் சிறுமியை மாஞ் சோலை வைத்தியசாலையில் அனு மதித்துள்ளனர். அத்துடன் சந்தேக நபரான மட்டக்களப்பைச் சேர்ந்த 55 வயது குடும்பஸ்தரைத் தேடி வருகின்றனர். சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார்.

(த–102)

# புதிய அபிவிருத்தித் திட்டம்; இலங்கையுடன் சீனா பேச்சு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 30
புதிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சீனா இலங்கையுடன் பேச்சு நடத்திவருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன் றில் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

சீன நிறுவனமொன்று புதிய திட்டமொன்றை முன்னெடுப்பது குறித்து அரசுடன் பேச்சு நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை கப்பல் புனரமைப்பு திட்டமொன்றை அமைக்க சீன நிறுவனமொன்று அனுமதி கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க இந்தத் திட்டம் குறித்து பேச்சு நடத்திவருவதாகவும் கூறியுள்ளார்.

கொழும்பு – கண்டி அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் திட்டத்துடனும் சீனா இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றியீட்டினால் டிசம்பர் மாதமளவில் புதிய வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(த)

## மஹிந்த ஆட்சியில் உயர்தரம் படிக்காத 192 எம்.பிக்கள்

***அமைச்சர் சம்பிக்க கூறுகின்றார்***

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்றில் அங்கம் வகித்த 192 உறுப்பினர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றில் அங்கம் வகித்த 192 உறுப்பினர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை. இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் 94 பேர் ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையிலும் சித்தியடைந்த தில்லை.

ஜி.சீ.ஈ. உயர் தரம் மற்றும் சாதாரண தரம் ஆகிய பரீட்சைகளில் கூட சித்தியடையாத அரசி யல்வாதிகள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி, அமைச்சரவையில் அங்கம் வகிப்பதனால் அதிகாரிகள் இலகுவில் ஊழல் மோசடிகளை மேற்கொள்ள முடிகின்றது.

சீனா போன்ற நாடுகளில் கட் சிக்கு ஆதரவாகச் செயற்படும் நபர்களை விடவும், பொறியியலாளர்கள், முகாமையாளர்கள் பிரதமர்களாக நியமிக்கப்படவேண்டுமென 1982 ஆம் ஆண்டு முதல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது – என்றார்.

(த)

# மகி நூடில்ஸ் கேடற்றது பரிசோதனையில் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்ப்பாணத்திலிருந்து சோதனைக்காக இதுவரை அனுப்பப்பட்ட 'மகி நூடில்ஸில்' உடல் நலத்துக்கு கேடான எந்தப் பொருளும் இல்லை என்று பரிசோதனை முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தேவநேசன் தெரிவித்தார்.

இந்தியாவில் 'மகி நூடில்ஸில்' உடல் நலத்துக்குக் கேடான இரசாயனப் பொருள்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து இந்தியா முழுவதிலும், மகி நூடில்ஸ் தடை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இலங்கையில் விற்பனையாகும் மகி நூடில்ஸ் தொடர்பில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மகி நூடில்ஸ்கள் சோதனைக்காகக் கடந்த மாதம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவுகளின் பிரகாரம், மகி நூடில்ஸில் உடல் நலத்துக்கு கேடான எந்தப் பொருளும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த–5)

# இலங்கைப் பெண் பொலிஸ் அதிகாரிக்கு சர்வதேச விருது

கொழும்பு, ஜூலை, 30
சர்வதேச பெண் பொலிஸ் அமைப்பினால் வழங்கப்படும் சர்வதேச அங்கீகாரம் மற்றும் புலமைப் பரிசில் விருது இம்முறை இலங்கை பிரதிப் பொலிஸ் அதிகாரி தீமதி பெரியப்பெருமவுக்கு கிடைத்துள்ளது.

இந்த வகையான விருது இலங்கைக்கு கிடைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

குறித்த விருது எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் இடம்பெறவுள்ள விருது வழங்கும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளது.

உலகின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் பெண் அதிகாரிகளின் செயற்திறன், செயல்பாடுகளை கருத்தில் கொண்டு இவ்விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–10)



# புலி அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## இப்படி வலியுறுத்துகிறார் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு, ஜூலை 30
தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய அரசு தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் கரிசனை காட்டத் தவறியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் சயனைட் வில்லைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்நாட்டு, வெளிநாட்டு காரணிகளின் அடிப்படையில் இந்த விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.கடந்த அரசு மிகச் சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசு தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் அரசியல் செய்துவருவதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

(த)

# பாடசாலை கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் குழப்பம்

## நடுவரின் முடிவுக்கெதிராக முறைப்பாடு

மாங்குளம், ஜூலை 30

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் வைரவிழாவினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை களுக்கிடையில் நடத்தப்பட்ட உதை பந்தாட்டத் தொடரின் இறுதியாட் டம் குழப்பத்தில் முடிவடைந்தது.

இறுதியாட்டத்தில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அணியை எதிர்த்து புதுக் குடியிருப்பு அலம்பில் றோ.க.த.க. பாடசாலை அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து 2ஆவது நிமிடத்தில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய வீரனினால் உதைக்கப்பட்ட பந்து கோல் காப்பாளரால்தடுக்கப்பட்டது. ஆனால் காப்பாளர் கோல் கோட்டினைத் தாண்டிச் சென்றதாகக் கருதிய பக்க நடுவர் கோல் என்று சமிக்ஞை செய்தார். கோல் கம்பத்தில் இருந்து கிட்டத்தட்ட 20 மீற்றர் தூரத்தில் நின்று அதனை ஏற்க மறுத்த மத்திய நடுவர் கோல் இல்லை என்று அறிவித்து ஆட்டத்தைத் தொடருமாறு பணித்தார்.

ஒட்டுசுட்டான் வீரர்கள் ஆரம்பத்தில் சற்றுக் குழம்பினாலும் தீர்ப்பினை ஏற்றுக்கொண்டு ஆட்டத்தைத் தொடர்ந்தனர். 13ஆவது நிமிடத்தில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அணியினர் கோலைப் போட்டு முன்னிலைபெற்றனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என்று ஒட்டுசுட்டான் மகா வித்தியால அணி முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் ஒட்டு சுட்டானின் ஆதிக்கத்தை அலம்பில் அணியால் எளிதில் இல்லாமல் செய்துவிட முடியவில்லை. இந்த நிலையில் ஆட்டம் நிறை வடைய 5 நிமிடம் இருந்தபோது அலம்பில் றோ.க.த. பாடசாலை அணியின் வீரர் முன்னோக்கி பந்தைக் கொண்டு சென்றபோது அப் பந்து முறையற்ற இடத்தில் இருந்து பெறப்பட்டதாக ஒட்டுசுட்டான் ம.வி. அணியினர் பலமாகச் சத்தமிட்டு முறையிட்டனர். தவறான முயற்சிதானே என்று கோல் காப்பாளரும் தடுக்காமல் நிற்க அலம்பில் வீரரினால் அப்பந்து கோலாக மாற்றப்பட்டது. அதனை கோலென மத்திய நடுவரும் உறுதிசெய்தார்.

ஒட்டுசுட்டான் வீரர்கள் தமது முறைப்பாட்டை மத்திய நடு வருக்கு எடுத்துக்கூற அவர் அதனை ஏற்கமறுக்க வீரர்கள் மைதானத்திற்குள் நின்றவாறு ஏற்பாட்டா ளருக்கு முறைப்பாட்டைத் தெரிவித்தனர். அவர்களின் முறைப்பாட்டைப்பொருட்படுத்தாதமத்தியஸ்தர் ஆட்டத்தை ஆரம்பிக்குமாறு பணித்தார்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்காமல் ஆட்டத்தைத் தொடரப்போவதில்லை என்று ஒட்டு சுட்டான் வீரர்கள் விளையாட மறுத்தனர். நடுவர் அலம்பில் அணியை விளையாடுமாறு பணித்தார். இதனால் அலம்பில் வீரர்கள் மைதானத்தில் எதிர் வீரர்கள் எதிர்ப் புக்கள் சிறிதும் இல்லாமல் காப்பா ளரே இல்லாத கோல் கம்பங்க ளுக்குள் கோலைப் பதிவுசெய்த னர். நடுவர் அதனை கோலென அறிவித்து அலம்பில் அணிக்கு வெற்றியென்று தீர்ப்பளித்தார்.

தீர்ப்பினை ஏற்கமறுத்த ஒட்டு சுட்டான் மகாவித்தியாலய அணியினர் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், மற்றும் துணுக் காய் கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோரிடம் கடிதம் மூலம் முறைப்பாட்டை தெரியப்படுத்தியுள்ளனர். குறித்த முறைப்பாடு தொடர்பாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி முனீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட வேளையில் குறித்த தொடர் வலயக்கல்விப் பணிமனையால் நடத்தப்பட்ட தொடர் அல்ல. புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரியால் அதன் வைரவிழாவையொட்டி நடத்தப்பட்டதொரு தொடர். எனவே இதற்கு நாம் பொறுப்பேற்க இயலாது என்றார். (ம-422)



### இன்றைய ஆட்டங்கள்

கரணவாய், ஜூலை 30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ள அதே நேரம் பி.ப. 4..30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-108,23)

## சொந்தத் தொடரில் சம்பியனானது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி



வலி வடக்கு, ஜூலை 30

யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஹொக்கி சங்கத்தின் ஆதரவுடன் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியர் அமரர் ரி.பத்மநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திறக்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் ஹொக்கித் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கிண்ணத்தைக் கைப் பற்றியுள்ளது.



தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரி மைதானத்தில் நடைபெற்ற குறித்த இறுதியாட்டத்தில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மோதியது.

ஆட்டத்துடன் இணைந்து மகாஜனாவின் ஆதிக்கமும் ஆரம்பிக்க முதல் பாதியின் முடிவில் மகாஜன 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் பழிதீர்த்தேயாகவேண்டும் என்ற முனைப்பில் யூனியன் தீவிரமாக ஈடுபட்ட போதிலும் முயற்சிகள் எவையும் கைகூடவில்லை. அதே நேரத்தில் மகாஜனவால் மற்றொரு கோலைப் பதிவுசெய்யவும் முடியவில்லை. இரு அணிகளின் பக்கமும் கடும் போராட்டமே எஞ்ச முடிவில் 1:0 என்ற கணக்கில் சொந்தத்தொடரில் சம்பியனானது தெல்லிப் பழைமகாஜனக்கல்லூரி. (ம-86)

## வடமராட்சி வலய கரப்பந்தாட்டத் தொடர்

## சென்.தோமஸ், உடுப்பிட்டி அ.மிஷன் சம்பியன்கள்

விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பாடசாலைகளின் 13 வயது பிரிவினருக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென்.தோமஸ் பாடசாலையும் சம்பியனாகின.

**பெண்கள் பிரிவு**

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.தோமஸ் பாடசாலையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மோதின. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதலாவது செற்றை 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 15:7 என்ற அடிப்படையில் சென்.தோமஸ் அணியினர் கைப்பற்ற ஆட்டம் 1-1 என்று சமநிலையானது. இதனால் வாழ்வா? சாவா? நிலைமையில் ஆரம்பமானது ஆட்டத்தின் மூன்றாவதும் இறுதியுமான செற். இரண்டாவது செற்றினை இலகுவாக கைப்பற்றியதைப்போன்று மூன்றாவது செற்றையும் 15:9 என்ற கணக்கில் கைப்பற்றிய சென்.தோமஸ் அணி 2-1 என்ற அடிப்படையில் சம்பியனானது.

**ஆண்கள் பரிவு**

அடுத்ததாக இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணியும் மோதின. முதலிரு செற்களையும் 15:13, 15:10 என்ற புள்ளிகள் அடிப்படையில்கைப்பற்றிய உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2-0 என்ற செற் கணக்கில் சம்பியனாகியது. (ம-108)



சென்.தோமஸ் பாடசாலை



உடுப்பிட்டி அ.மி. கல்லூரி

## திரில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது மெதடிஸ்த பெண்கள்

கரணவாய், ஜூலை 30

விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பாடசாலைகளின் 13 வயது பெண்கள் பிரிவினருக்கிடையில் நடத்தப்பட்ட உதை பந்தாட் டத் தொடரில் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று வலயச் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

நெல்லியடி மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற குறித்த தொடரின் இறுதியாட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மோதியது. ஆட்டத்தின் முதல்பாதி முடிவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் சார்பாக ஆட்டத்தின் முதலாவது கோல் பதியப்பட முதல் பாதியின் முடிவில் வடமராட்சி இந்துக்கல்லூரி 1-0 என்ற அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆரம்பமாகி சில நிமிடங்களில் பலத்த போராட்டத்தின் மத்தியில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை சார்பாகவும் கோலொன்று பதியப்பட ஆட்டத்தில் 1-1 என்று சமநிலை பேணப்பட்டது. இரு அணிகளதும் விடாப்பிடியான போராட்டத்துக்கு ஏற்ப சமநிலைத்தன்மை ஆட்டத்தின் கணிசமான பகுதியை ஆக்கிரமித்தது. ஆட்டம் நிறைவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது திடீர் எழுச்சி கண்டு விரைந்து செயற்பட்ட மெதடிஸ்த பெண்கள் அணி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று வலயச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-108)

# பிளாட்டரின் அரியணைக்கு போட்டியிடுகிறார் பிளாட்டினி



உலகின் மிகப்பெரிய விளையாட்டு சம்மேளன மான பீபா சம்மேளனத் தின் தலைவர் பதவிக்கான போட்டியில் இணைந்துள்ளார் ஐரோப்பிய கால் பந்து சம்மேளனத்தின் தலைவரான பிளாட்டினி. ச[illegible]தேச கால்பந்து சம்மேளனத் தின் தலைவராக தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையும் தெரிவு செய்யப்பட்டவர் செப் பிளாட்டர். ஆனால் சர்வதேச கால்பந்து சம்மேளனத் தில் மிகப்பெரிய ஊழல் முறைகேடு நடந் ததாக 7 முக்கிய தலைவர்கள் கைது செய் யப்பட்டனர். இதனால் செப்பிளாட்டர் தலைவர் பதவியில் இருந்த விலக வேண் டும் என்று எதிர்ப்பு கிளம்பியது. இதனால் பிளாட்டர் தலைமைப் பதவியில் இருந்து விலகினார். எனவே, சர்வதேச கால் பந்து சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி தேர்தல் நடக்க இருக்கிறது. இதில் ஐரோப்பிய கால் பந்து சங்கத்தின் தலைவர் மிச்செல் பிளாடினி போட்டியிடுவார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இன்னும் சில நாள்களில் இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பு வெளியாகலாம் என்று சொல் ல[illegible]கிறது. (ம)

# பூப்பந்தாட்டத் தொடர் நாளை



கரணவாய், ஜூலை 30

உலகத்தமிழர் பூந்தாட்டச் சம்மேளனமும் வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கம் மற் றும் வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்தும் பூப்பந்தாட்டத் தொட ரின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலை யத்தில் இடம்பெறவுள்ளன.

தொடரின் ஆரம்பநாளின் ஆட்டங்களாக 15 வயது, 19 வயது ஆகிய பிரிவுகளின் இரு பாலாருக்குமான ஆட்டங்கள் நடைபெற வுள்ளன. இதில் பங்குபற்றும் போட்டியா ளர்கள் நாளை காலை 7.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்திற்கு வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர்.

குறித்த நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தி னராக வட மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-108)


## பண உதவி கோரல்



ஊரெழு மேற்கு சுன்னாகத்தில் வசிப்பவன் இரத்தினம் சிவகுமார் ஆகிய நான் எனது மகள் பவித்திராவிற்கு (வயது - 17) இரண்டு சிறு நீரகங்களும் செயலிழந்துள்ளன. அவருக்கு சிறுநீரக மாற்றுச்சிகிச்சை மேற்கொள்ள வேண்டி உள்ளது. அதற்கு ரூபா 1500,000 (15லட்சம்) தேவைப் படுகிறது. கருணை உள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற பண உதவியை வழங்கி உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இரத்தினம் சிவகுமார்,077 335 3304
கணக்கு இல: 71018231 - இலங்கை வங்கி.

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை



தலைவர் :- திரு.வே.கருணாகரன்
உப தலைவர் :- திரு.கு.குமரகுருபரன்
திரு.பூ.தர்மகுலசிங்கம்
செயலாளர் :- திரு.இ.சிவமயூரன்
உப செயலாளர் :- திரு.அ.ஜெயேந்திரன்
திரு.சி.சபாஆனந்
பொருளாளர் :- திரு.இ.உமாசங்கர்
உறுப்பினர்கள்:- திரு.இ.இராசலிங்கம்
திரு.இ.இராசசேகரம்
திரு.ச.தேவராசா
திரு.ஆ.கோபாலமூர்த்தி
திரு.சு.விக்கினேஸ்வரன்
திரு.கா.சுதாகரன்
திரு.தே.ஜெயராஜ்
திரு.ச.பிரதாபன்
சமய ஆலோசகர்:- மு.திருஞானசம்பந்தபிள்ளை
கணக்காய்வாளர்கள்:- திரு.த.பகீரதராஜ்
திரு.ச.சுஜன்
திரு.இ.சுயாந்தன்.

குறிப்பு 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெற்ற மகாசபைக் கூட்டத்தில் இத் தெரிவுகள் இடம்பெற்றன.

இ.சிவமயூரன்
செயலாளர்.
(63482)



## யாழ்ப்பாணம் கல்வியங்காடு திருவருள்மிகு இலங்கை நாயகி மனோன்மணி அம்மன் கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம்-2015

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் அடியார்களுக்கு அல்லல் போக்கி அருள்பாலிக்கும் இலங்கைநாயகி மனோன்மணி அம்பாளுக்கு நடைபெறும் மஹோற்சவ திருவிழாவை முன்னிட்டு 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் திருவிழா நடைபெறும்.

15.08.2015 சனிக்கிழமை தேர்த்திருவிழா
16.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தத்திருவிழா
மாலை கொடியிறக்கமும் நடைபெறும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அரியத்தருகின்றோம்.

திருவிழாக் காலங்களில் அம்பிகையின் அருட்காட்சியை கண்டு தரிசித்து அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய ஆதீன கர்த்தாவும்,
பரம்பரை நம்பிக்கை உரிமையாளரும்
சு.பாலசுப்பிரமணிய ஐயர்.
கல்வியங்காடு.

## பாராளுமன்றத் தேர்தல் – 2015

யாழ். மாவட்டம்




அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



புதிய வி[illegible]
வருடாந்[illegible]
தலைவர் [illegible]
காலம் :- 31.07.201[illegible]
இடம் :- கண்ண[illegible]
அனைவரையும்[illegible]
அழைக்கின்றோம.
(63473)

## சபையால் மேற்கொள்ளப்படவுள்ள வீதி வேலைகள்

சபையின் தீர்மானத்திற்கமைய பின்வரும் வேலைகள் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

1. நந்தாவில் 1ஆம் ஒழுங்கை கொக்குவில்.
2. சிவகுரு லேன் கொக்குவில்.
3. சீ.சீ.ரி.எம் பாடசாலையில் இருந்து குட்செட் வரையான ஒழுங்கை.
4. முத்தட்டுமட ஒழுங்கை கோண்டாவில்.
5. இணுவில் பிள்ளையார் வீதி.
6. கண்ணகை பார்வதி அம்மன் வீதி.
7. காளி கோயில் வடக்குப் பகுதியில் இருந்து தாளையடி ஒழுங்கை.
8. ஞானபாஸ்கரோதயா வீதி. (3ஆம் கட்டையடி)
9. மாரியம்மன் வீதி. (கேணியடியில் இருந்து நேசிங்கோம் வரை)
10. பூம்புகார் 10 ஆம் 11ஆம் குறுக்கு ஒழுங்கை அரியாலை.
11. கோண்டாவில் நாகபூசணி அம்மன் வீதி.
12. மணியந்தோட்டம் பெரியதோட்டம் வீதி அரியாலை.
13. நந்தாவில் வலதுபக்க இடது பக்க ஒழுங்கை.
14. கலட்டி 3ஆம் ஒழுங்கை, கோண்டாவில்.
15. கோண்டாவில் தில்லைகாளி கோயில் வீதி.
16. கொக்குவில் நந்தாவில் குளங்கரை வீதி.(புகையிரத நிலைய வீதி)
17. ஆடியபாதம் வீதி 2ஆம் குறுக்கு ஒழுங்கை திருநெல்வேலி.

ப. வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.
(18182)
(3.6.9)

சித்தன்கேணி
மாதர் சங்க பாலர் பாடசாலை
முதன்மை ஆசிரியை
செல்வி லீலாவதி மாரிமுத்து
அவர்களின் ஆசிரிய சேவையின்
பொன்விழா அழைப்பும் மலர் வெளியீடும்



01.08.2015 சனிக்கிழமை மு.ப 9.00 மணி முதல் சித்தன்கேணி மகாகணபதி பிள்ளையார்ஆலய கல்யாண மண்டபத்தில்

தலைவர்
ஸ்ரீ ஸ்ரீமதி உமாபதிசர்மா.வாசுகி தம்பதிகள்
(முகாமைத்துவக் குழுத்தலைவர்)

பிரதம விருந்தினர்
பூலோகசிங்கம் சிவனேசன் அவர்கள்
(பாலர் பாடசாலை பழைய மாணவன்,
பிரதிப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம்)

ஆசி வழங்கும் குருமணிகள்
சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
சிவஸ்ரீ.ச.மதுசூதனக் குருக்கள்
பிரம்மஸ்ரீ.நா.கமலநாத சர்மா

வாழ்த்துரைகள்
நா.வேதநாயகன் அவர்கள்
(அரச அதிபர், யாழ் மாவட்டம்)
பா.தனபாலன் அவர்கள்
(உபபீடாதிபதி கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்)
செல்வி.ஜெயா தம்பையா
(பணிப்பாளர், ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு, வடமாகாணம்)
திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்
(தவிசாளர், வலி.மேற்கு பிரதேச சபை)
செல்வி நா.நிரஞ்சனா
(முன்பள்ளி இணைப்பாளர்)
திருமதி.அஜிதா சிவகரன்
(தலைவர், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், சித்தன்கேணி)
செல்வி.யுகந்தினி லோகேஸ்வரன்
(தலைவர்-முன்பள்ளி ஆசிரியர் சங்கம்)

நூல்கள் வெளியீட்டுரை –
பிரம்மஸ்ரீ.குமார.சுவாமிநாதசர்மா (கவிஞர்.வீரா)

வெளியிடப்படும் நூல்கள்
* ஆவண நூல், * பொன் விழா மலர்

அனைவரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பிப்பதோடு சிறப்புப் பிரதி நூல்களையும் பெற்று தொடர்ந்து நடைபெறும் மதிய போசனவிருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாரிமுத்து குடும்பத்தினர்
முகாமைத்துவக் குழுவினர்

அனுசரணை வழங்குவோர்

| | | |
|---|---|---|
| சக்தி எலக்றிக்கல்ஸ் ஓடக்கரை வீதி, சங்கானை. | சீலன் ரயர் வேக்ஸ் சங்கானை, தொ.பே 0776216690 | சிவம் களஞ்சியம் வழக்கம்பரை, சுழிபுரம். |

JAFFNA-
...க்கொள்ளுங்கள்
...ழி
...தில்
...கும்
...மே
&
...LF.

...ன் பதியுங்கள்
... வீதி, யாழ்ப்பாணம்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111



## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்" அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம்-2015

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

அலங்கார உற்சவம் மன்மத வருடம் ஆடி மாதம் 7ஆம் நாள் (23.07.2015) வியாழக்கிழமை ஆரம்பமாகி ஆடிமாதம் 16ஆம் நாள் (01.08.2015) சனிக்கிழமை இறுதிநாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெற உள்ளது. தேர்த்திருவிழாவாகிய 09 ஆம் நாள் ஆடி மாதம் 15ஆம் நாள் நாளை (31.07.2015) வெள்ளிக் கிழமை விசேட அபிசேகங்கள், பூசைகள் நடைபெற்று, 11.00 மணி யளவில் தேர் வீதியுலா ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து ஆல யத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்கா தேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும்.

"இறைபணியே இன்பப் பணி"

"துர்க்காபுரம்"
படித்த மகளிர் திட்டம்
மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கமலராணி விமலதாசன்



பிறப்பு
30.12.1952

இறப்பு
09.08.2014

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறாத உங்கள் நினைவுகள் - எம்
நெஞ்சங்களில் தினந்தோறும் அலை மோதும் - அவை
அழியாத நினைவுகளாய் - நீங்கள்
அரவணைத்து அன்பு செய்த காலங்களை
மறந்திடத்தான் முடிந்திடுமோ?
மறு ஜென்மம் உண்டென்றால்
மண்ணில் பிறந்திடம்மா நாம் மகிழ்ந்திருக்க.

29, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

NEC

இரு இடத்திலும் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2016, A/L 2017
வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான
Paper Class, MCQ Class

பொருளியல் : திரு. NB. கஜீதரன்
வணிகக்கல்வி : திரு. S.K. பாலசுபேஷ்
கணக்கீடு : திரு. K.B. பாலகஜன்
ஆரம்பம் : 01-08-2015 சனி 8 மணி



கடந்த செவ்வாய்க்கிழமை சாவடைந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், விஞ்ஞானியும், அறிவியலாளருமான அப்துல் கலாமின் உடலுக்கு கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சின் நேரடியாகச் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். (ம)

British College of Higher Studies

வழங்கும் மிகக்குறைந்த கட்டணங்களில் மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்

அன்பார்ந்த மாணவர்களே,
உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில் நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

Spoken English with Grammar
Duration : 80 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும். (Tutes, CD Lessons, Dictionaries, etc என்பன இலவசமாக வழங்கப்படும்)

Batches Start on
Batch I : 03/08/2015 09.00am to 12.00pm Batch III :07/08/2015
Batch II : 05/08/2015 02.00pm to 05.00pm Batch IV :10/08/2015

Students from Grade 9 can Join

BCHS
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

## மரண அறிவித்தல்

### சண்முகம் கதிர்காமநாதன் (நாதன் மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கல்வியங்காட்டைப்பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கதிர்காமநாதன் 27.07.2015 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான டேவிட் சுப்பிரமணியம் நேசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற றெஜினா தேவரஞ்சிதமலர் (பவா) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம் , கனகேஸ்வரி, காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் ஜெகநாதன், பாக்கியநாதன், காலஞ்சென்ற இரங்கநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சனா(தேவி), தேவரஞ்சன்(கனடா), பிறேமலதா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வசந்தரூபி(கனடா), அரியநாயகம்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதிலா, கோபி, சுலக்சன்(கனடா), நிரோசன்(கனடா), ரஜீசன்(கனடா), சுவானி(கனடா), ஜனார்த்தனா(கனடா), ராதா(கனடா) புஜந்தரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆருகனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவகிரி"
GPS.வீதி,
கல்வியங்காடு.

தகவல் :-
குடும்பத்தினர்.
077 590 0499

(63471)

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் கந்தசாமி

(தமிழரசு கந்தசாமி) அராலி தெற்கு

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி நேற்று (29.07.2015) புதன்கிழமை இறைபதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங் கம்-பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ் சென்றவர்களான முத்தையா-வள்ளியம்மை தம் பதியரின் மருமகனும், கௌரி (பிரான்ஸ்) சிறிகரன் (காண்டீபன்-கண் ணன் களஞ்சியம்), வசீகரன் (பிரான்ஸ்), பகலவன் (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புத் தந்தையும், நவநீதசீலன் (பிரான்ஸ்), தவமணி, சுபா (பிரான்ஸ்), சுபாசினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், ரமணீ சன், அருந்துகி, கயனீசன், ஜெகனீசன், கவிதா, கபிலன், சரணியா, சஜிதா, கயிதா, பிரஷிகன், மாதுமி, மைஷ்வி, முகுந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஈலன், நீலன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2015) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூத வுடல் பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

தகவல்: மகன் சிறிகரன் (காண்டீபன்- கண்ணன் களஞ்சியம்.)

(63487) (10.6)

## பாக். கிடமிருந்து 20/20 தொடரை இலங்கை பறித்தெடுக்கும்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான ரி-20 தொடரை இலங்கை அணி கைப்பற்றும் என்று, அணித் தலைவர் மலிங்க நம்பிக்கை தெரிவித் துள்ளார்.

பாகிஸ்தான் – இலங்கை அணி களுக்கிடையிலான ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில் குறித்த தொடர் தொடர்பாக மலிங்க தெரிவித்த தாவது:– பாகிஸ்தான் அணி பலம் வாய்ந்தது என்பதை ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் ரி–20 ஆட்டங்களில் நாங்கள் தான் நடப்புச் சம்பியன்கள். நடப்புச் சம்பியன் களுக்கான பாணியில் திறமையாக விளை யாடி பாகிஸ்தானிடம் இருந்து தொடரைக் கைப்பற்றுவோம். டெஸ்ட், ஒருநாள் தொடரை இழந்தமைக்கு ரி–20 தொட ரைக் கைப்பற்றி பதிலடி கொடுப் போம்– என்றார். (ம)

## தொடர்ந்தும் முதலிடத்தில் செரீனா

சர்வதேச ரென்னிஸ் தொடர் களின் பெண்கள் பிரிவின் தர வரிசைப் பட்டியல் நேற்று வெளி யாகியுள்ள நிலையில் தொடர்ந் தும் செரீனா வில்லியம்ஸே முதலிடத்தில் நீடிக் கிறார்.

நடப்பு வருடத்தில் நடைபெற்ற சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்கள் அத்தனையையும் கைப்பற்றிய செரீனா 13 ஆயி ரத்து 191 புள்ளிகளுடன் முதலி டத்தில் உள்ளார். இரண் டாவது இடத்தில் மரியா ஷெர போவா உள்ளார். அதன்பின் சிமோனா ஹாலேப், பெட்ரா குவி டோவா, கரோலின் வோஸ்னி யாக்கி, அனா இவானோவிக், அக்னி யேஷ்கா ரத்வன்ஸ்கா, லூசி சபரோவா, கார்பின் முகுருசா, கார்லா சுவாரஸ் நவரோ ஆகி யோர் 3ஆம் இடத்திலிருந்து 10ஆவது இடம்வரை பெற்றுள் ளனர். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.